www.padippakam.com

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# புதிய பூமி

පුදිය පූමි

வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை

PUTHIYA POOMI

சுற்று 10 | பெப்ரவரி 2003 | பக்கம் 12 | விலை 12/- | சுழற்றி 55

# பாராளுமன்றத்தை கலைத்து பொதுத்தேர்தல் எதற்காக?



சபாநாயகருக்கு வாக்குறுதி அளித்தவர் தான் ஜனாதிபதி சந்திரிகா. ஆனால் இப் போது அந்த வாக்குறுதியை யும் மீறி பாராளுமன்றத்தை கலைத்துவிடும் தேவைதான் என்ன?

நாட்டின் பொருளாதார நெருக்கடிகள் கூடி மக்களின் வாழ்க்கைச் செலவு மோச மாக அதிகரித்துள்ளது என்பது உண்மை. சம்பள உயர்வை மறுத்து தொழிற் சட்டங்களைக் கொண்டு வந்து ஐக்கிய தேசியக் கட்சி தமது வழமை யான மக்கள் விரோத செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றது என்ப தும் மறுக்க முடியாதவை.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் தனது அதி உயர் அதிகாரத்தைப் பயன் படுத்தத் தீர்மானித்திருப்பதாக அறிய முடிகின்றது. விரைவில் தற்போதைய பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டு பொதுத்தேர்தல் ஒன்றை நடாத்த ஆணை பிறப்பிக்க இருப்பதாக ஜனாதிபதி செயலகத்துடன் நெருங்கிய வட்டாரங்களில் இருந்து செய்திகள் கசிந்து வருகின்றன.

அப்படியாயின் ஒரு நியாயமான கேள்வி எழுகின்றது. ஏன் பாராளுமன்றத்தை கலைத்து எதற்காகப் பொதுத்தேர்தலை நடாத்த வேண்டும் என்பதாகும். ஏற்கனவே தான் மூன்று வருடங் களுக்குப் பாராளுமன்றத்தை கலைக்க மாட்டேன் என்று எழுத்து மூலம்

அவ்வாறே ஏகாதிபத்திய சக்திகளுடன் இணைந்து தாராளமயம் தனியார் மயத்தை முன்னெடுத்து வருகின்றது என்பதும் அதனால் நாட்டின் வளங் களும் மனித உழைப்பும் பல்தேசியக் கம்பனிகளால் கொள்ளையடித்துச் செல்லப்படுகின்றது என்பதும் கண் முன்னே நடந்தேறி வருபவைதான்.

ஐக்கிய தேசியக் கட்சி ஒருபோதும் மக்கள் சார்பாகவோ தொழிலாளர் விவசாயிகள் பக்கமாகவோ இருந்து ஆட்சி புரிந்த கட்சி அல்ல என்பதும் பெருமுதலாளிகள் நிலவுடமையாளர்கள் மேட்டுக்குடி வர்க்கத்தினர் மற்றும் அந்நிய ஏகாதிபத்தியவாதிகள் என்போரது விருப்பு வெறுப்புக்காக ஆட்சி நடாத்தி வந்ததும் இன்றும் அவ்வாறே ஆட்சி புரிகின்றது என்பதும் நாம் அறியாத ஒன்றல்ல.

ஆனால் இவ்வளவு விடயங்களிலும் ஜனாதிபதியும் பொதுசன முன்னணி ஆட்சியும் தமது ஏழு வருட ஆட்சியில் எவ்வாறு நடந்து கொண்டார்கள் என்பதே கேட்கப்படவேண்டிய கேள்வி யாகும். முன்பு ஐ.தே.கட்சி பதினேழு வருடங்களில் செய்தவற்றை பொதுசன முன்னணி 1994-2001 காலப்பகுதியில தொடர்ந்து முன்னெடுத்தது. பின்பு அவர்கள் விட்ட இடத்திலிருந்து இன்னும் வேகமாக தற்போது ஐக்கிய தேசிய முன்னணி செய்து வருகின்றது. ஆட்கள் மாறிக் கதிரைகளில் அமர்ந்தார் களே தவிர செய்யப்படும் காரியங்கள் ஒன்றாகவே காணப்படுகின்றன.

இருப்பினும் பிற்போக்கான ஆட்சியா யினும் தமக்கு ஏற்பட்ட கடினமான அக புற நிர்பந்தங்களால் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்தபின் யுத்த நிறுத்தத்திற்கும் பேச்சு வார்த்தைக்கும் இணங்கி அதனை ஒரு வருடமாக நடைமுறைப்படுத்தியும் வருகின்றமை கவனத்திற்குரியதாகும். சந்திரிகா தலைமையிலான பொதுசன முன்னணி ஆட்சி முன்னெடுத்த கொடிய யுத்தத்திற்குப் பதிலாக ரணில் சமாதானப் பேச்சுவார்த்தையை மிகத் துணிவோடு முன்னெடுப்பது பிரதான ஒரு அம்சமாகும். அதன் உள்நோக்கங் கள் வேறுபட்டவையாகவோ அன்றி முழுமையற்ற போக்குகளாகவோ அல்லது அந்நிய நலன் பேணுவதாக வோஅமைந்து கொள்ளலாம். ஆனால் யுத்த நிறுத்தமும் சமாதானப் பேச்சு வார்த்தையும் நிராகரிக்க முடியாதவை யாகும். முன் எச்சரிக்கையுடனும் அவதானத்துடனும் வரவேற்கப்பட வேண்டியவையாகும். இனப்பிரச்சினை தீர்வு முயற்சிகளையும் சமாதானத்தை யும் பேரினவாத சக்திகள் மட்டுமே எதிர்க்கின்றன. நேர்மையான எந்த மனிதரும் சமாதானம் வருவதை எதிர்க்கமாட்டார்கள். கடந்த ஒரு வருடத்தில் யுத்தமற்ற இரத்த ஆறு ஓடாத, உயிர்கள் உடமைகள் அழியாத ஒரு சமாதானச் சூழல் நிலவி வருவதை முழு நாட்டு மக்களும் நடைமுறையில் அனுபவித்து வருகிறார்கள். இச் சமாதான முயற்சி மேலும் உறுதியான அரசியல் தீர்வின் மீது நிலைக்கச் செய்வதற்கு மேலும் சில வருடங்கள் தேவைப்படும் என்றே எதிர் பார்க்கப்படு கின்றது. வடக்கு கிழக்கு மக்களின் இருபது வருட அழிவுகளையும் இழப்புக்களையும் மீட்டெடுக்க உரிய நடவடிக்கைகள் யாவும் இதுவரை எழுத்திலும் பேச்சிலும் மட்டுமே இருந்து வருகின்றன. அவற்றின் நடைமுறைக்கு போதிய கால அவகாசம் வேண்டப் படுகின்றது. அவை பாரிய சவால்களை யும் நடைமுறைச் சிக்கல்களையும் கொண்டிருக்கின்றன.

இந்நிலையில் ஜனாதிபதி பாராளு மன்றத்தை கலைத்து பொதுத் தேர்தலை நடாத்த முற்படுவதன் பின்னணியும் உள்நோக்கமும் ஒன்றே ஒன்றுதான். அது பேச்சுவார்த்தையைக் குழப்பி அரசியல் தீர்வு என்ற இறுதி இலக்கை சிதறடித்து மீண்டும் யுத்தத்திற்குள் நாட்டையும் மக்களையும் வீழ்த்திக் கொள்வதற்கேயாகும்.

ஜனாதிபதியின் பொதுத்தேர்தல் தீர்மானத்திற்குப் பின்னால் அதிகாரத் தை சுவைத்த ஆளும் வர்க்க

12ம் பக்கம் பார்க்க..

இலங்கையர்கள் வெளிநாடுகளில் 12 லட்சம் பேர் வேலை செய்து வருகிறார்கள். இவர்கள் 80 வீத மானவர்கள் பெண்கள். அவர்களில் 60 வீதமானவர்கள் கடுமையான கொடுமை மிகு சூழல்களில் வீட்டுப் பணிப்பெண்களாக வேலை செய்து வருகிறார்கள். அதேவேளை இவ் வருடத்தில் மேலும் இரண்டேகால் லட்சம் பேருக்கு மத்திய கிழக்கு நாடுகளில் அரசாங்கம் வேலை தேட முற்பட்டுள்ளது. அதிலும் 80 வீதமான வர்கள் பெண்களாக இருக்க வேண்டும் என வேலை வாய்ப்புப் பணியகம் வேண்டுகிறது.

2002ம் ஆண்டில் 31 கோடி கிலோ தேயிலை உச்ச உற்பத்தியாகி உள்ளது. இது 2000ம் ஆண்டில் 30-1/2 கோடி கிலோவாகவும் 2001ம் ஆண்டில் 29-1/2 கோடி கிலோ வாகவும் இருந்தது என தேயிலை சபை புள்ளிவிபரம் வெளியிட்டுள்ளது. இதனால் எத்தனை லட்சம் ரூபாய்களை கம்பனிகளும் முதலாளிகளும் லாபமாகப் பெற்றிருப் பார்கள். ஆனால் உற்பத்தி செய்த தொழிலாளர்களுக்கு மட்டும் சம்பள உயர்வு மறுக்கப்படுகிறது.

தற்போதைய அரசின் பாராளு மன்ற உறுப்பினர்கள் 114 பேர். இவர்களில் 71 பேர் அமைச்சர்கள் ஆவர். அவர்களுடன் சபாநாயகர், குழுக்களின் உதவித் தலைவர் என்போரைச் சேர்த்து 73 பேர்கள் உயர் சம்பளம், விஷேட படிகள், வாகனங்கள், எடுபிடிகள், பிற வருவாய்கள் பெற்று உயர் சுகபோக வாழ்வில் திளைத்து கொழுத்து நிற்கிறார்கள். ஆனால் சாதாரண மக்கள் மாவுக்கும் பாணுக்கும் அரசிக்கும் அலைந்து வாழ்க்கைச் செலவால் அமுக்கப் படுகிறார்கள்.

அரசாங்க-தனியார் ஊழியர்க ளுக்கு சம்பள உயர்வு மறுக்கப் பட்டது. எதிர்வரும் யூன் மாதத்திற்குப் பின் அது பற்றி ஆலோசிக்கப்படும் என நிதி அமைச்சர் கூறி உள்ளார். அதேவேளை 35-40 ஆயிரம் மாதாந்த அலவன்ஸாகப் பெற்று வந்த கூட்டுத்தாபனத் தலைவர் கள், சபைகளின் பணிப்பாளர்கள், ஆலோசகர்களுக்கு 10, 7, 5 ஆயிரங்களால் உடன் சம்பள உயர்வு வழங்க உத்தரவிடப் பட்டுள்ளது. ஆளும் வர்க்க பாசம் யார் பக்கம் என்பது தெளிவானது.

கடந்த இருபது வருட இன யுத்தத்தில் வட பகுதியில் மட்டும் ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் தென்னை மரங்கள் அழிக்கப் பட்டன. இப்போது 15 ஆயிரம் தென்னங்கன்றுகளே புனர் நடுகை செய்யப்பட்டன. இவ் அழிக்கப்பட்ட தென்னை மரங்கள் ராணுவக் காப்பரண்களுக்காக தறிக்கப்பட்டதுடன் குண்டு வீச்சு, ஷெல் விழுதல் போன்றவற்றாலும் அழிந்துள்ளன. தேங்காயின் விலை விரைவில் ஐம்பது ரூபாவைத் தாண்டும் என எதிர்பார்க்கப் படுகிறது.

# உலக வங்கியின் நயவஞ்சகப் பிடிக்குள் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை

வடக்கு கிழக்கு மீள் புனரமைப்பு நடவடிக்கைகளுக்கான நம்பிக்கை நிதியத்தின் காப்பாளராக உலகவங்கி நியமிக்கப்பட்டிருப்பதனை சர்வதேச சமூகத்தின் அங்கீகாரமாக கொண்டு தமிழர்களில் சிலர் மகிழ்ச்சியடைகின் றனர். வடக்கு கிழக்கை மீள கட்டியமை ப்பதற்கான எதிர்பார்ப்பில் அவ்வாறு மகிழ்ச்சியடைகின்றனர். ஆனால் உலக வங்கி உலக மக்களின் பெரும்பான்மை யோருக்கான பொருளாதாரத்தை அன்றி ஒரு சில தனிநபர்களினதும், பல்தேசிய கம்பனிகளினதும் நன்மைக் கான தாராள பொருளாதாரத்தையே நாடுகள் மீது திணித்து வருகிறது. இலவசக் கல்வி, இலவச சுகாதரா சேவை போன்பவற்றை இரத்துச் செய்யும்படி வலியுறுத்தி வருகிறது என்பதையிட்டு சிலர் கவனத்தில் கொள்ளவில்லை.

இலங்கையில் சமாதானம் ஏற்படாது விட்டால் அபிவிருத்தி என்பதற்கே இடமில்லை என்றும் ஆசியாவில் நான்கு டிரகன்கள் (நான்கு பொருளா தாரப் புலிகள்) என்று சொல்லப் பட்ட தென்கொரியா, ஹொங்ஹொங், தாய்வான், சிங்கப்பூர் போன்ற நாடுகளின் அபிவிருத்திப் பாதையில் செல்வதற்கு இடமிருப்பதாகவும் தென்னாசிய பிராந்தியத்திற்கான உபதலைவர் மிய்க்கோ நிசிமிசியூ தெரிவித்துள்ளார். இவர் அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த போது வடக்கு கிழக்கிற்கும் சென்றிருந் தார். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சில தலைவர்களையும் சந்தித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

நான்கு டிரகன்களில் ஒன்றைப் போன்று இலங்கையை ஆக்குவதே உலக வங்கியின் நோக்கம். அந்நோக்கம் தமிழ் மக்களின் சுயாட்சி, சமத்துவம், சுயநிர்ணயம் என்பவற்றுக்கு இசை வானதல்ல. உலக வங்கி, ஏகாதிபத்திய உலகமயமாதலை முன்னெடுக்கும் ஒரு சர்வதேச நிறுவனமாகும். மூன்றாம் உலக நாடுகளுக்கு உதவி வழங்குவ தாக கூறிக்கொண்டு அந்நாடுகளின் மக்களை ஏகாதிபத்திய உலக மயமாதலின் சுரண்டல் பொறிக்குள் மாட்டிவிடுவதையே அது திட்டமிட்டு செய்து வருகிறது.

யுத்த காலத்தில் நேரடியாக தலையிட முடியாதிருந்த உலகவங்கிக்கு இந்த சமாதான காலத்தில் வடக்கு கிழக்கில் தாராளமான அங்கீகாரம் கிடைத் துள்ளது.

ஒரு தேசிய இனத்தின் சுயநிர்ணயம் அதன் சுயபொருளாதாரத்தில் தங்கி யிருக்கிறது. வடக்கு.கிழக்கில் அப் பொருளாதாரத்தைக் கட்டி வளர்ப் பதற்கு உலகவங்கி போன்ற சர்வதேச அமைப்பு கள் ஆதரவாக இருக்கப் போவதில்லை. தமிழ் மக்களில் ஏழைகளுக்கும் பணக்காரர் களுக்குமான் இடை வெளி யை அதிகரிக்க செய்கின்ற பொருளாதாரத்தையே அவை நோக்காகக் கொண் டுள்ளன.



அது சிங்கள பேரினவாதத் திடமிருந்து விடுபடுவதாக எண்ணிக்கை கொண்டு பல்தேசிய கம்பெனிகளிடமும், அந்நிய முதலீட்டாளர்களிட மும் வடக்கு கிழக்கையும் தாரை வார்ப்பதாகவே அமையும்.

இதுவரையும் அழிவுகளையும், பட்டினி யையுமே கண்ட தமிழ் மக்களுக்கு உலக வங்கி போன்ற அமைப்புகளின் வருகை கவர்ச்சிகரமாக இருந்தாலும் அதனால் மிகவும் சிறுபான்மையான தமிழ் மக்களின் மேல் தட்டினரே பயனடைவர். பெரும்பாலான தமிழ் மக்கள் நன்மையடையப் போவதில்லை.

அதுமட்டுமல்ல உலகவங்கி போன்ற சர்வதேச அமைப்புகளின் பொருளாதார திட்டங்களை முன்னெடுக்கக் கூடிய அரசியல் வியூகமே வடக்கு கிழக்கிலும் அமைய வேண்டும் என்பதில் அவை மிகவும் கவனமாக இருக்கும் என்பதில் ஐயமிருக்க முடியாது. அவ்வியூகம் ஏகாதிபத்திய உலகமயமாக்கலுக்கு ஏற்ற வியூகமாகையால் தமிழ் மக்களின் தன்னடையாளம், தனித்துவம் என்பவற்றை பாதுகாப்பதற்கான அடிப்படைகளை ஏற்றுக்கொள்வதாக இருக்கப் போவதில்லை.

அத்துடன் உலகவங்கி கூறுகின்ற நான்கு டிரகன்கள் என்ற

தொடர்ச்சி 12ம் பக்கம்

படிப்பகம்

www.padippakam.com



# மாணவர்களை மட்டம் தட்டும்

## ஸற்-ஸ்கோர் விபரீதம்

1970ம் ஆண்டுப் பல்கலைக்கழக அனுமதிகளின் போது தமிழ் மாணவர்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த எடுக்கப்பட்ட தரப்படுத்தல் பிரச்சனை காரணமாக மாணவர் அனுமதி 1971 வரை பிற்போடப்பட்டது. தரப்படுத்தலின் எதிரொளியாகவே வடக்கில் தமிழ் இளைஞர்கள் மிகவும் ஆத்திரப்பட்டனர். தமிழ்த் தீவிரவாத இயக்கங்களின் தோற்றுவாய்களில் தரப்படுத்தல் முக்கியமான ஒன்று. தரப்படுத்தல் மூலம் தமிழ் மாணவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பைத் திசை திருப்புவதில் மாவட்ட அடிப்படையிலான அனுமதி உதவியது. இது, யாழ்ப்பாண மாவட்ட இளைஞர்களிடமிருந்து பறித்ததில் ஒரு பகுதியைப பிற தமிழ்ப் பிரதேச மாணவர்கர்கட்குப் பங்கிட்டதன் மூலம், தமிழ் அரசியல்வாதிகளிடையே தரப்படுத்தல் பற்றிய கருத்து ஒற்றுமையைக் குலைத்தது. மாவட்ட அடிப்படையிலான அனுமதி என்ற ஆலோசனையின் பின்னணியில் சோவியத் சார்பு கம்யூனிஸ்ட் கட்சியின் ஒரு தலைவரான பீற்றர் கெனமனும் இருந்தார் எனக் கூறப்பட்டது. மாவட்ட அடிப் படையிலான அனுமதி தமிழரிடையே பிரதேச அடிப்படையிலான முரண்பாட்டை வலுப்படுத்தியது. அது எந்த வகையிலும் பின்தங்கிய நிலையி லிருந்த பாடசாலைகட்கோ. பண வசதி குறைந்த மாணவர்கட்கோ எவ்வகையிலும் உதவவில்லை. வசதி படைத்தவர்கள் உள்ளூர்ப் பாடசாலைகளில் தமது பிள்ளைகளைப் பதிவு செய்து வெளியூரில் இருந்த தனியார் கல்வி நிறுவனங்களில் பயிற்றுவித்து அவர்களை மேற்படிப்புக்கு அனுப்ப முடிந்தது.

1977ல் யூஎன்.பி. - தமிழர் விடுதலைக் கூட்டணி இரகசிய தேர்தல் உடன்பாடுகளில் ஒன்றாகத் தரப்படுத்தல் நீக்கப்படும் எனக் கூறப்பட்டது. இந்த ஒத்துழைப்பால் அமோகப் பெரும்பான்மையான பாராளுமன்ற ஆசனங்களை வென்ற யூஎன்.பி. மாவட்ட அடிப்படையிலான அனுமதியைத் தொடர்ந்தது. எனினும், தகுதியின் அடிப்படையில் அனுமதியில் ஒரு பகுதியும் ஒதுக்கி வைக்கப்பட்டது. இன்றுவரை, யாழ்ப்பாண மாவட்ட மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்குப் பெற வேண்டி குறைந்த பட்சப் புள்ளிகள் (வெட்டுப் புள்ளி) மற்ற மாவட்ட மாணவர்கள் பெற வேண்டியதை விடக் கூடுதலாகவே இருந்து வந்தது. அப்படியிருந்தும் பொறியியல், விஞ்ஞானம் போன்ற துறைகளில் தமிழ் மாணவர்கள் குறிப்பிடத்தக்களவில் அனுமதி பெற்று வந்தனர். எனவே அதற்கும் குழி பறிக்கும் சதியாலோசனை ஒன்று பேரினவாதிகளால் வகுக்கப்பட்டது.

தமிழ் மாணவர்கள் பொதுவாகவே கணிதத்தில் கூடதலான புள்ளிகளைப் பெற்று வந்தனர். தமிழ்ப் பகுதிகளில் கணிதம் பயிற்றுவிக்கும் ற்யூட்டரிகள் முன் வரிசையில் நின்றது இதற்கான ஒரு காரணமாகும். பொறியியல், பௌதீக விஞ்ஞானத் துறைகளில் அனுமதிக்கு இரண்டு கணிதப் பாடங்களும் பௌதிகமும் ரசாயனமும் எனும் பொ.த.(உயர் நிலை) பாடங்கள் நான்கில் உள்ள புள்ளிகள் கணிப்பிலெடுக்கப்பட்டன. இதில் பொறியியலுக்கு உண்மையில் அதிகம் தேவையானவை கணிதமும் பௌதிகமுமே. என்றாலும் கணிதத்தின் முக்கியத்துவத்தைக் கூட்டினால் தமிழ் மாணவர்களே நன்மையடையவர். எனவே பல்கலைக் கழக அனுமதிக்கு பழைய நான்கு பாடங்கட்குப் பதிலாக அவற்றினிடத்தில் மூன்று பாடங்களையும் மாணவர்களது தெரிவிற்குரிய துறைசார்ந்த பொது ஆற்றலை மதிப்பிடும் ஒரு பாடத்தையும் புகுத்தும் ஆலோசனை முன்வைக்கப் பட்டது. எனினும் இந்த நான்காவது பாடம் நகர் சார்ந்த மாணவர்கட்கே வசதியானது என்பதுடன் அதைக் கையாள்வதில் உள்ள பிரச்சனைகள் காரணமாக மூன்று பாடங்களின் அடிப்படையிலேயே பல்கலைக்கழக அனுமதி என்று முடிவு செய்யப்பட்டது. இதன்படி, பொறியியல், பௌதீக விஞ்ஞானத் துறைகளில் ஒரு கணிதப் பாடமும் பௌதிகமும், இரசாயனமும் பாடங்களாகவும் மருத்துவ, விவசாய, உயிரியல் விஞ்ஞானத் துறைகட்கு (தாவரவியலும் விலங்கியலும் இணைந்த) உயிரியலும் பௌதிகமும் ரசாயனமும் பாடங்களாகின. இதன் விளைவாக வழமையாக எந்திரவியல் அனுமதிக்குக் கணிதத்திற் கூடிய புள்ளிகளைப் பெறக் கூடிய மாணவர்கள் பாதிக்கப்பட்டனர். இது தமிழ் மாணவர்களையே அதிகம் பாதிக்கும் என்பது எவரும் எதிர்பாராத தல்ல.

இதுவும் போதாதென்று அறிமுகப்படுத்தியது தான் "ஸட்-ஸ்கோர்" முறை. அடிப்படையில் இது முற்றிலும் தவறானதல்ல. ஒரு மாணவர் குழுவைப் பாடங்களில் பரீட்சிக்கும் போது பாடத்துக்குப் பாடம் மாணவர்கள் பெறுகிற புள்ளிகளின் அளவு வேறுபடும். உதாரணமாகக் கணிதத்தில் பல மாணவர்கள் 100% பெறலாம் கலைப் பாடமொன்றில் அவ்வாறு எவரும் பெறுவதில்லை. எனவே வெவ்வேறு பாடங்களில் ஒவ்வொரு மாணவரும் பெறும் புள்ளிகள் மாணவரது ஆற்றலின் நேரடியான அளவீடுகளல்ல. பாடங்களிடையிலான வேறுபாட்டைச் சமன் செய்யும் நோக்கில், ஒவ்வொரு பாடத்தினதும் சராசரியையும் சராசரிக்குச் சார்பாகப் புள்ளிகளின் வேறுபாட்டையும் சமன்படுத்துகிற ஒரு முறையே ஸட்-ஸ்கோர் முறையாகும். இது அமெரிக்காவின் பல கல்வி நிறுவனங்களில் நடைமுறையில் உள்ளது.

இது செம்மையாகச் செயற்பட வேண்டுமானால், மூன்று பாடங்களின் புள்ளிகளைச் சமநிலைப்படுத்த மூன்று பாடங்களிலும் அதே மாணவர்கள் பரீட்சைக்கும் தோன்ற வேண்டும். அல்லாது போனால் ஸட்-ஸ்கோர் முறை பரீட்சைப் பெறுபேறுகளை மிகவும் விகாரப்படுத்தும். உதாரணத்துக்கு, இரசாயனம், மருத்துவத் துறைக்கு அனுமதி வேண்டுகிற மாணவர்களும் பொறியியல் துறைக்கு அனுமதி வேண்டுகிற மாணவர்களும் கற்கும் பாடம். மருத்துவத் துறைக்கு போட்டியிடும் மாணவர்கள் இரசாயனத்தில் கூடுதலான கவனமெடுப்பது வழமை. எனவே அவர்களும் பொறியியல் பீடத்துக்கு அனுமதி வேண்டுகிறவர்களும் பெறும் புள்ளிகள் சேர்த்து ஸட்-ஸ்கோர் கணக்கிடப்பட்டால் பொறியியல் துறையை நாடுவோரது புள்ளிகள் கீழ் நோக்கித் தள்ளப்படும். தனியே பொறியியல் துறையை நாடுகிறவர்களுக்கு மட்டுமே ஸட்-ஸ்கோர் கணக்கிடப்பட்டால் அவர்களது புள்ளிகள் சிறிது சாதகமாக இருக்கும். கணிதம், பொறியியல் துறையை நாடக் கூடியோர் மட்டுமே எடுக்கிற பாடமாதலால் அங்கு நல்ல பெறுபேறுகளைப் பெறுகிற மாணவர்களது ஸட்-ஸ்கோர் ரசாயனத்துடன் ஒப்பிடும்போது கீழிறங்கும். எனவே இரண்டு வகைகளிலும் இந்த மாணவர்கள் பாதிக்கப்படுவர்.

பொறியியல் துறையை நாடும் தமிழ் மாணவர்கள் ரசாயனத்தை விடக் கணிதத்திலேயே அதிக கவனத்தைக் குவிப்பதால் அவர்களது ஸட்-ஸ்கோர் புள்ளிக் கூட்டுத்தொகை பாதிக்கப்படும். மாறாக கணிதம், பௌதிகம், ரசாயனம் ஆகிய பாடங்களை எடுப்போருக்கு ஒவ்வொரு பாடத்திலும் வேறாகவும். உயிரியல், பௌதிகம், ரசாயனம் ஆகியவற்றை எடுப்போருக்கு வேறாகவும் ஸட்-ஸ்கோர் வேறு வேறாகக் கணிக்கப்பட்டால், இரு பகுதியினருக்கும் தனித்தனியே பொதுவான அடிப்படையில் சிறிது நீதி கிடைக்கலாம்.

"ஸட்-ஸ்கோர்" முறையின் அடிப்படையான ஊகம் ஏதெனில், எந்தவொரு பாடத்திலும் பரீட்சிக்கப்படும் மாணவர்களது சராசரி ஆற்றலும் ஆற்றலின் வேறுபாடும் ஒப்பிடத்தக்கள வுள்ளன என்பதாகும். இது எவ்வளவு தூரம் செல்லும் என்பதை ஆராயாமல் வெவ்வேறு குழுக்களைச் சமநிலைப் படுத்துவது விபரீதமான விளைவுக்கே வழி வகுக்கும்.

"ஸட்-ஸ்கோர்" மூலம் இங்கு வைக்கப் பட்டோர் தமிழ் மாணவர்களாயினும், கொழும்புப் பாடசாலைகளும் அதனால் பாதிக்கப்பட்டன. இதன் விளைவாக விடயம் நீதிமன்றம் வரை போய் ஸட்-ஸ்கோர் மதிப்பீட்டு முறையைக் கைவிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த சில தசாப்தங்களில் கல்வித் துறையில் செய்யப்பட்டுள்ள பல மாற்றங்கள் அவற்றின் பின் விளைவுகள் பற்றிய ஆய்வில்லாமலே செய்யப்பட்டுள்ளன. அயல்நாடுகளில் நடப்பவற்றை முக்கியமாக அமெரிக்காவில் நடப்பவற்றை அடியொற்றிச் செய்யப்படுகிற காரியங்களுக்கு இந்த நாட்டின் மாணவப் பரம்பரைகள் தான் விலையைச் செலுத்துகின்றன. சரிந்து வரும் பாடசாலைக் கல்வியை நிலை நிறுத்தக் கடந்த கால் நூற்றாண்டுக் காலமாக எதுவுமே செய்யப்படவில்லை. மறுபுறம் செலவினங்களைக் குறைக்கும் குறுக்கு வழிகள் தேடப்படுகின்றன. "ஸட்-ஸ்கோர்" விவகாரம் இன்னொரு சிறு பிள்ளைத்தனமான விளையாட்டு. அது, தவறான காரணங்கட்காகவேனும், கைவிடப்படுவது நல்ல விடயமே.

# நற்குணம் நாலு நடக்கும் உலகிலே

## நரியிடம் கோழிப் பராமரிப்புக்கு ஆலோசனை கேட்பது

வடக்கில் உயர் பாதுகாப்பு வலயங்களைப் பேணிக் கொண்டே மீள் குடியேற்றத்தை எப்படி நடைமுறைப்படுத்தலாம் என்பதைப் பற்றி அமைச்சர் மிலிந்த மொறகொட இளைப்பாறிய இந்திய ராணுவத் தளபதி நம்பியாருடன் கலந்தாலோசித்து இருப்பதாக செய்திகள் வந்துள்ளன. நம்பியாரும் அறிக்கை கொடுத்துவிட்டார்.

இலங்கையில் அமைதிப் பேச்சுவார்த்தைகளைத் திரை மறைவிலிருந்து குழப்புவதற்கு மேலாக ஒரு விதமான அக்கறையும் இந்தியாவின் அரசாங்கத்திற்கு இல்லை. இந்நிலையில் இந்தியாவின் ராணுவ ஆலோசகரிடம் மொறகொட கலந்தாலோசிப்பது எந்த அடிப்படையில்?

இது இந்தியாவின் எசமானர்களது ஆசிகளுடனா அல்லது தனிப்பட்ட முறையிலா?

## எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் என்.ஜி.ஓ.தானென்று சங்கே முழங்கு!

அரசாங்க ஆதரவில் நடைபெறுகிற இலக்கியப் பரிசளிப்புகளில் முறைகேடுகள் இருந்துள்ளன. அரசியற் குறுக்கீடுகளும் பாரபட்சமும் பற்றிய முறைப்பாடுகள் வருவதும் உண்மை. எல்லா முடிவுகளும் சரியானவையில்லை.

1990களில் என்.ஜி.ஓ. இலக்கிய இயக்கங்கள் வளர்ச்சி பெற்றன. இடதுசாரி அரசியலிலிருந்து ஓய்வு பெற்ற முன்னாள் முற்போக்குப் படைப்பாளிகள் சிலர் இந்த என்.ஜி.ஓ. நிறுவனங்களில் ஓய்வூதியத்துக்கு உழைக்கத் தொடங்கினார்கள். சுதந்திர இலக்கிய விழா என்று சாகித்திய மண்டலத்தின் பரிசளிப்பு விழாவுக்கு மாற்றாகத் தொடங்கப்பட்ட விபவி என்ற என்.ஜி.ஓ. அமைப்பின் தமிழ்ப் பரிசளிப்புகள் தொடங்கிக் கொஞ்சக் காலத்திலேயே பல "தமிழ் இயக்க" அரசியல் இழுபறிகளுக்கு உள்ளாகத் தொடங்கின. விபவி நடத்திய தமிழ்ச் சஞ்சிகை ஒன்றும் இடதுசாரி விரோத அவதூறுகளில் மூழ்கிச் சீரழிந்து போனது.

அண்மையில் ஒரு குறிப்பிட்ட சிறுகதையைச் சிறந்தது என்று சிலாகித்துப் பேசிய முன்னாள் இடதுசாரி நடுவர் ஒருவர், அது ராணுவத்தின் கொடுமையைப் பற்றியது என்பதால், அதற்குப் பரிசு கொடுத்தால் தாங்கள் கொழும்பில் பாதுகாப்புடன் இருக்க முடியாது. என்று கூறி, அந்தக் கதைக்குப் பரிசு கொடுக்காமல் மறித்துவிட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இது பாரதூரமான விடயம். இது பற்றி விபவியும் சம்பந்தப்பட்ட நடுவரும் விளக்குவார்களா? அல்லது வழமைபோல மழுப்பி நழுவுவார்களா?

## தமிழ்க் காங்கிரஸின் புளுகுணிச் சித்தர்கள்

குமார் பொன்னம்பலத்தின் முக்கியமான (அல்லது ஒரேயொரு) அரசியற் பங்களிப்பு மற்றத் தமிழ்த் தேசியவாத அரசியல்வாதிகள், அவரது குடும்பச் சொத்தான தமிழ்க் காங்கிரஸ்காரரர் உட்பட, வாய் திறந்து பேச அஞ்சிய நேரத்தில் தமிழ் மக்களுக்காக அவர் குரல் கொடுத்தார் என்பது போலவே தெரிகிறது. மற்றப்படி, "புலிகள் எவ்வழி அதுவே எம்வழி" என்பது 1994க்குப் பிறகு அவர் கண்ட ஞானம். அதற்கு முன்பு அவரது புலி எதிர்ப்பு பிரசித்தமானது. இவற்றுக்காக அவரையாரும் இகழ நியாயமில்லை. ஆனால் உண்மைகளை மூடி மறைக்க முடியுமா? குமார் பொன்னம்பலத்தின் மனமாற்றத்துக்கு முதலிருந்தே, பலவிதமான நெருக்குவாரங்களுக்கும் கொலை மிரட்டல்கட்கும் நடுவே புதிய ஜனநாயகக் கட்சி ஒவ்வொரு கட்டத்திலும் தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுத்து வந்துள்ளது. நேர்மையான சிங்கள இடதுசாரிகள் குரல் கொடுத்துள்ளனர். குமார் பொன்னம்பலம் மூன்றாமாண்டு நினைவு மலரில் இவற்றை எல்லாம் மூடி மறைத்து, அவர் போக மற்றோர் எல்லாம் ஊமைகளாக இருந்தார்கள் என்ற விதமாக அவரது பக்தப் பெருமக்கள் பொய் சொல்வது குமார் பொன்னம்பலத்துக்குப் பெருமை சேர்க்காது.

## ராம பஜனை

இந்து" ராம் இருக்கிறாரே, அவருடைய இடதுசாரி வேஷம் கலைந்து அவருடைய பார்ப்பனிய மேட்டுக்குடி முகம் எப்படியோ வெளிப்பட்டு விடுகிறது. அவர் ஆசிரியரா்க இருக்கிற ஃபுறொண்ட்லைன் சஞ்சிகையில் சி.பி.எம். என்கிற சீரழிந்த இடதுசாரிக் கட்சிக்கு ஆதரவான ஒரு தோற்றத்துக்கு மேலாக முற்போக்கான பார்வையே கிடையாது. இது பற்றி மார்க்சிச லெனினிச வாதிகள் கடந்த பல ஆண்டுகளாகச் சொல்லி வந்திருக்கிறார்கள்.

1978 அளவில் ராஜீவ்-ஜே.ஆர். உடன்படிக்கையின் முக்கியமான தரகர்களில் ஒருவராக இந்து ராம் என்கிற சி.பி.எம். ஆதரவு உள்வட்டப் பிரமுகரால் செயற்பட முடிந்தது என்றால், அவர் யாருடைய நண்பர் என்பது பற்றி நாம் ஐயமுற வேண்டியதில்லை.

இந்திய மேலாதிக்கத்துக்குச் சாமரம் வீசுகிற எல்லாருமே ராம் வணங்கும் கடவுளாரே. இதனாலேயே இன்னமும் சந்திரிகாவின் சமாதான எதிர்ப்புச் சூழ்ச்சி ஒவ்வொன்றுக்கும் ராமின் வாழ்த்துக்கள் கிடைக்கின்றன.

இது போதாமல், றோகான் குணரத்ன என்ற கேவலமான சிங்களப் பேரினவாத அமெரிக்க ஏகாதிபத்திய சார்பான "பாதுகாப்பு ஆய்வாளர்" எழுதுகிற கட்டுரைகளையும் ராம் மாணிக்கலிங்கம் எனப்படும் முன்னாள் விடுதலை இயக்கக்காரரும் அமெரிக்காவின் றொக்க ஃபெல்லர் நிறுவன ஊழியருமானவரது புலி எதிர்ப்புப் பிரகடனங்களையும் அடிப்படையான நேர்மை கூட இல்லாத டி.பி.எஸ்.ஜெயராஜ் போன்ற செய்தி ஆய்வாளர்களையும், பேராசிரியர் சூரிய நாராயணன் போன்ற அப்பட்டமான இந்திய விஸ்தரிப்பு வாதிகளையும் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்துக்கு எதிரான தனது பத்தி எழுத்தாளர்களையும் கொண்டு இதழ் தவறாமல் அமைதிப் பேச்சுவார்த்தைகளைக் குழப்புகிற நோக்கில் கட்டுரைகளை எழுதுவித்துப் பிரசுரித்து வருகிறார்.

சென்ற ஆண்டு இவருடைய அமிர்தலிங்கம் நினைவுப் பேருரை பற்றிய உள்ளூர் விமர்சனம் ஒன்று பலராலும் வரவேற்கப்பட்டதுடன் இந்தியத் தூதரகத்தையும் அவ்விமர்சனம் பற்றிய விசாரணைகளை நடத்தத் தூண்டியது ஊரறிந்த கதை. ஜனவரி மாத நடுவில் ஃபுறொண்ட் லைனில் ராம் அமைதிப் பேச்சு வார்த்தைகள் குழம்புவதற்கான சாத்தியப்பாடுகளைப் பட்டியலிட்டு ஆறு பக்கக் கட்டுரை ஒன்று எழுதியிருக்கிறார். இக் கட்டுரை மூலம் அவரது ஆதங்கமும் அரசியல் நயவஞ்சகமும் தெரிகிற அளவுக்கு நிதானமான பார்வையோ ஆய்வுத்திறனோ தெரியவில்லை.

பாவம் ராம்! பயனற்ற கட்டுரைகளை எழுதிப் பக்கங்களைப் பாழாக்காமல் சமாதான எதிர்ப்புப் பிரார்த்தனைக் கூட்டம் நடத்தலாமே!

## இப்படியும் ஒரு அவமரியாதையா?

முதுபெரும் எழுத்தாளர் கணேஷஉிக்கு கொழும்பில் வழங்கப்பட்ட மரியாதையில் பங்கு பற்றிய பலர் அவர் தனது வாழ்வில் ஆற்றிய பணிக்கு விரோதமாக இருந்தவர்கள் தான். அது ஒரு புறமிருக்க, கிடப்பில் போடப்பட்டிருந்த அவரது பல தமிழாக்கங்களை நூலாக்க கடும் முயற்சி செய்த தோழர் தம்பையா, தேவராஜா பற்றியோ தேசிய கலை இலக்கியப் பேரவை பற்றியோ விழாவிற் பேசிய எவருக்குமே நினைவிருக்கவில்லை. இது நமக்குப் பழக்கப்பட்ட ஞாபக மறதிதான். அது கிடக்கட்டும்.

ஒரு முற்போக்கு எழுத்தாளருக்கு ஆறு நாட்டு வேளாளர் சார்பில் மாலை அணிவிக்கப்பட்டதே. அது சாதியத்துக்கான அங்கீகாரமா சாதிய எதிர்ப்புப் பேசி வந்த கணேஷஉிக்கு ஒரு சவுக்கடியா?

# திருகோணமலை சிரித்துக் கொண்ட அரச தமிழ் இலக்கிய விழா!

வட-கிழக்கு மாகாண அரச தமிழ் இலக்கிய விழா-2002 இழுபறிபட்டு ஒருவாறு டிசம்பர் 28, 29, 30ம் திகதிகளில் மண்டபம் நிறைந்த மாபெரும் மக்கள் கூட்டத்துடன் வெற்றிகரமாக நடந்தேறி முடிவுற்றது என்றால் நீங்கள் சிரிக்கக் கூடாது.

அரச இலக்கிய விழா என்பது பத்தோடு பதினொன்று ஆக வெறும் சடங்காச் சாரமாகவே நடந்து முடிவது என்பது தற்போது வழக்கமாயிற்று. அரசாங்க கோவை விதிகளின்படி வருடத்தில் ஒரு நிகழ்ச்சி இலக்கிய விழா அதற்கான செலவு, திட்டம் மற்றும் ஓட்டம், பாட்டம், ஆட்டம் என்பது எல்லாம் ஒரு பெரிய திட்டமிடல் வேலை! எல்லாமே அரசாங்க கோவை (FILE) விதிகளின் படியே நடந்தேறும். இதன்மூலம் கலை, பண்பாடு, இலக்கியம் வளர்கின்றதா என்பது வேறு விடயம். ஆனால், ஒழுங்கு விதிகளின்படி நடந்தேற வேண்டும். இல்லையென்றால் போட்ட திட்டம், ஒதுக்கப்பட்ட நிதிக்கு பதில் கூறப்பட வேண்டும். எப்படியோ நடந்து முடிந்துவிட்டால் கோவையை

**திரிகோணன்**

மூடிவிடலாம்! சிலர் உரிய நன்மைகளை அடைந்து கொள்ளலாம். மக்களின் பணம் அரசாங்கம் மூலம் எப்படி எல்லாம் சீரழிக்கப்படுகின்றது என்பதற்கு இவ் விழாக்களே போதுமான சாட்சியம். சுண்டங்காய் கால் பணம் சுமை கூலி முக்கால் பணம் என்ற மக்கள் மொழிக்கு ஏற்ப விழாக்களின் உண்மையான பயன்பாட்டுக்கு செலவு ஆகும் தொகையை விட விழாக்களின் ஊதாரித்தனமான செலவுகளின் தொகை மிகக் கூடுதலாகிப் போய் விடுவதும் உண்மை! அவ்வாறு இடம்பெறுவது அர்த்தப்பாடு களுடன் தான் என்பது புரியக் கூடியதாகும்.

அரச இலக்கிய விழாவில் விருது கொடுத்தல், பரிசு பெறுதல் என்பதுவும் ஒரு மரபு சார்ந்த நியதி. இதனால் அதற்கான மதிப்பும் இல்லாமல் போய் விடுவது வியப்பு அல்ல. இந்த நியதியிலும் பல்வேறு விடயங்கள் அடங்கி விடுகின்றன. இந்த பல்வேறு விடயங்கள் இவற்றை கேலிக் கூத்தாக்கி விடுவதும் வியப்பு அல்ல. உயர் மனிதர்களின் விருப்பு, வெறுப்பு.

தொடர்ச்சி 10ம் பக்கம்.

படிப்பகம்

www.padippakam.com



# பயங்கரவாத தடுப்புச் சட்டம் இன்னும் வேண்டுமாம்

இலங்கையில் இருபது வருட கொடிய யுத்தத்திற்கு சட்ட அங்கீகாரம் வழங்கி தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்படுவதற்கும், சித்திரவதைகள் புரியப்படுவதற்கும், பெண்கள் பாலியல் வல்லுறவுப் படுகொலைக்ளுக்கு உள்ளாக்கப்படுவதற்கும், சிறைகளில் இன்றுவரை தமிழர்கள் அடைத்து வைத்துக் கொடுமைப்படுத்தப்படுவதற்கும் பிரதான காரணமாக இருந்து வந்தது பயங்கரவாத தடுப்புச் சட்டமாகும். இக் கொடிய சட்டம் நீக்கப்பட வேண்டும் என்பது மக்கள் சார்பான கோரிக்கையாக ஆரம்பத்திலிருந்தே வற்புறுத்தப்பட்டு வந்தது. இச் சட்டத்தை ஜே.ஆர். 1979ல் கொண்டு வந்தபோது தமிழர் விடுதலைக் கூட்டணி எதிர்க்கவே இல்லை.

இடதுசாரிகள் ஜனநாயக சக்திகள் காட்டிய எதிர்ப்பின் சிறு அளவாவது தமிழ் தலைமைகள் அன்று பாராளுமன்றத்திற்குள் காட்டவில்லை. அண்மையில் தமிழர் கூட்டமைப்பைச் சேர்ந்த பா.உறுப்பினர் அ்.விநாயகமூர்த்தி (தமிழ் காங்கிரஸ்) பாராளுமன்றத்தில் இச்சட்டத்தை நீக்கக் கோரி ஒரு தனிநபர் பிரேரணை கொண்டு வந்தார். அது விவாதத்திற்கு வந்தபோது கூட்டமைப்பைச் சேர்ந்த பதின்நான்கு பாராளுமன்ற உறுப்பினர்களில் ஐந்து பேர்கள் மட்டுமே பாராளுமன்றத்தில் சமூகமாகி இருந்த கேவலத்தைக் காண முடிந்தது. அதன் அர்த்தம்தான் என்ன? மிகுதி ஒன்பது பேர் எங்கு சென்றார்கள். ஏன் வரவில்லை?

அச்சட்டம் இருந்தால்தான் அதன் பேரில் அரசியல் பிழைப்பு, சட்டத்தரணிப் பிழைப்பு, ஏமாற்றுக்கள் செய்யலாம் என்பதால் தானோ அச்சட்டத்திற்கு எதிராக பாராளுமன்றத்தில் பிரசன்னமாகிப் பேசாது விலகிக் கொண்டனர். தமிழ், தமிழர் தன்மானம் எனக் கூக்குரல் எழுப்பி வாக்குகள் கேட்ட போதும் ரோசத்துடன் வாக்களித்த தமிழ் மக்கள் இப்போதாவது கூட்டமைப்பு பா.உறுப்பினர்களின் சுயரூபத்தைப் புரிவார்களா?

# சமஷ்டி ஆராயும் சீமான்கள்

இப்போது சமஷ்டி அமைப்பு பற்றிய வாதப் பிரதி வாதங்கள் அலை வீசுகிறது. அதன் மத்தியில் பாராளுமன்றத் தூதுக் குழுக்கள் மேற்கு நாடுகள் சிலவற்றுக்குப் பறந்து சென்று ஆராய்ந்தும் வருகின்றன. ஒரு குழு வந்திறங்க மறு குழு செல்லத் தயாராகி நிற்கிறது. இப்படி ஒரு உல்லாச் பயணச் சந்தர்ப்பம் அரசாங்க உயர் மட்டத்தால் உருவாக்கி கொடுக்கப்பட்டிருக்கிறது. ஊர் சுற்றல், உல்லாசம், சல்லாபம் யாவும் இதனுள் அடக்கம். என்னத்தை ஆராய்ந்தனர், எதனை முன்மொழியப் போகிறார்கள் என்பதெல்லாம் பூச்சியம்.

பத்திரிகைகள் ஊடகங்களுக்கு கூட்டாகவும் தனியாகவும் போஸ் கொடுத்து பேட்டிகள் கச்சிதம். மலையக மக்களுக்கு அரசியல் தீர்வில் பங்கு கேட்காத யோகராஜன், சந்திரசேகரன் போன்றவர்கள் கூட சென்று வந்திருக்கிறார்கள். ரணில் மாத்தையா யாரை? எங்கே? எப்போது? அனுப்பி எடுத்தால் தனக்கு கீழே நின்று வாலாட்டுவார்கள் என்பதைத் தெரிந்தே வைத்திருக்கிறார். சமஷ்டி கிடைக்கிறதோ இல்லையோ ஆராயச் செல்லும் குழுக்களுக்கு சகல போகங்களும் கிடைக்கவே செய்கிறது.

# அமைச்சர் மகேஸ்வரனும் முதல்வர் கந்தையனும்

யாழ்ப்பாணத்தில் தற்போது தூள் கிளப்பி அறிக்கைகளும் பேச்சுக்களும் வெளியிடும் இருவர் காணப்படு கின்றனர். ஒருவர் இந்து அமைச்சர் மகேஸ்வரன். மற்றவர் யாழ் நகர முதல்வர் செல்லன் கந்தையன். இவ் இருவருக்குமிடையில் முறுகல் நிலையும் காணப்படுகிறது. அண்மையில் மகேஸ்வரனுக்கு, எதிராக முதல்வர் கந்தையன் கறுப்புப் பட்டிப் போராட்டமும் நடாத்தினார். ஆனால் தனக்கு சாதி சொல்லி அடித்த தனது கூட்டணிக்கார உறுப்பினரை பெரிய மனதுடன் மன்னித்து தனது கீழ் நிலை விசுவாசத்தை தெரிவித்துக் கொண்டு வரும் இதே முதல்வர்தான். இதை அறிந்து தான் முதல்வர் மேல் சிலர் சாதிக் குதிரை விட்டு வருகிறார்கள் போலும்.

அண்மையில் அமைச்சர் மகேஸ்வரனிடம் யாழ் மாநகர சபை வரி அறவிடும் ஒரு உத்தியோகத்தர் வரிப்பத்திரத்தைக் கொடுத்து அதற்குரிய பணத்தை கேட்டிருக்கிறார். உடனே மகேஸ்வரனுக்கு பொத்தெண்டு கோபம் வந்தது. என்னிடம அதுவும் செல்லன் கந்தையனை முதல்வராகக் கொண்ட மாநகர சபை வரிப் பத்திரம் அனுப்புவதா? என்று கோபப்பட்டார் போலும். அதனை எவ்வாறு வெளிப்படுத்தினார் தெரியுமா? "கந்தையன் குப்பை அள்ளிறான் இல்லை: வரிக்கு மட்டும் பத்திரம் அனுப்பிறான்" என்றவாறு வாய் விட்டுக் கூறினாராம். வரி வாங்கச் சென்ற உத்தியோகத்தர் ஒரு வழியில் முதல்வரின் உறவினர் என்றும் அறிய முடிகிறது. அமைச்சர் மகேஸ்வரன் சாதி பார்க்கமாட்டார் என்று அவரது கையாட்கள் நட்சாட்சிப் பத்திரம் வழங்கினார்கள் கடந்த தேர்தலில். யாழ் நகர முதல்வரைப் பல வழிகளிலும் மகேஸ்வரன் அவமதிப்பது முதல்வரின் சாதி காரணமாகவேதான். ஆனால் திக்கம் வடிசாராய நிலையம் போதாதென்று காரைநகரிலும் ஒரு நிலையம் திறந்து கள்ளுத் தொழிலாளர்களின் உழைப்பை காசாக்க நிற்பவரும் இதே மகேஸ்வரன்தான். இவருக்கு தாளம் போட்டு தத்தமது பைகளை நிரப்ப நிற்கிறது தாழ்த்தப்பட்ட பிரமுகர் கூட்டம் ஒன்று. வாழ்க மகேஸ்வரன். வளர்க அவரது அடிவருடும் கூட்டம்.

# தமிழ்த் தினசரியில் வெளிநாட்டு ஒற்றரா?

பிரபல தமிழ் தினசரி ஒன்றில் முக்கிய பதவி வகித்த ஒருவர் தற்போதைய சமாதான முயற்சிகளை குழப்ப வேண்டும் என்ற ஆர்வம் கொண்ட நாடு ஒன்றின் உளவு சேவையின் ஒற்றராக கடமை புரிந்தாரோ என்ற சந்தேகத்தின் பேரில் வேலை நீக்கம் செய்யப்பட்டார் என்று பரவலாகப் பேசப்படுகிறது.

அவர் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு பாதகமான செய்திகளை பிரசுரிப்பதில் மிகவும் ஆர்வம் காட்டியதாகவும், சமாதான முயற்சிகளை குழப்புவதில் ஈடுபட்டுள்ள அந்த நாட்டின் நிலைப்பாட்டிற்கு அதிகமாக பிரசாரம் செல்வதில் அக்கறை காட்டியதாகவும் கூறப்படுகிறது. இது பற்றி அப்பத்திரிகையின் நிர்வாகத்தினருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் அதன் அதிருப்தியை தெரிவித்திருந்த தாகவும் கூறப்படுகிறது.

அவர் வேலை நீக்கப்பட்டார் ஏன்ற உண்மையை புதியபூமி அறிந்து கொண்டுள்ளபோதும் அவர் ஒற்றராக செயற்பட்டதற்காகவா வேலை நீக்கப்பட்டார் என்பதை கண்டுபிடித்துக் கொள்ள வேண்டிய பொறுப்பை வாசகர்களிடமே விட்டுவிடுகிறோம்.

# வர்த்தக மூளையின் பொங்கல் விழா

அமைச்சர் மகேஸ்வரன் ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்கவிற்கு நெருக்கமானவராகியுள்ளதாக பேசப்படுகிறது. ஜனாதிபதி மாளிகையில் பொங்கல் விழாவை ஏற்பாடு செய்ததற்குப் பிறகு அந்நெருக்கம் ஏற்பட்டுள்ளதாம்.

ஜனாதிபதி சமாதான நடவடிக்கைகளுக்கு எதிராக செயற்பட்டு வருவதாக திட்டோ திட்டென்று திட்டியவர் தான் மகேஸ்வரன். ஜனாதிபதி சமாதான நடவடிக்கைகளுக்கு எதிரான நிலைப்பாட்டிலிருந்து மாறியதாக தெரிந்து கொள்ள முடியவில்லை. அப்படியென்றால் மகேஸ்வரன் ஜனாதிபதியை ஆதரிக்கும் நிலைப்பாட்டிற்கு மாறிவிட்டாரா? திடீரென்று பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டு விட்டால் இப்படி முடியாவிட்டால் அப்படியாவது முடிய வேண்டும் என்ற எதிர்பார்ப்பில் மகேஸ்வரன் செயற்படமாட்டார் என்று கூற முடியாதுதானே! மகேஸ்வரனின் வர்த்தக லாப மூளை சும்மா வேலை செய்யாது தானே.

# ஒரு சமயப் பெரியாரின் வக்கிர வார்த்தைகள்

நோர்வே தொழிலாளர் கம்யூனிஸ்ட் கட்சியின் தோழியர் ரூனா மரியா பிபரிக் யாழ்ப்பாணத்துக்கு சென்றிருந்த வேளையில் நயினாதீவு நாகபூசணியம்மாள் கோவிலுக்கும் சென்றிருந்தார். இலங்கை தமிழ் மக்களின் பண்டைய பண்பாட்டு அம்சங்களில் கோயில்கள் முக்கிய இடத்தை வகித்துள்ளமையால் அக்கோவிலுக்கு செல்வதில் அவர் ஆர்வம் காட்டினார்.

அக்கோவிலுக்குள் சென்றதும் அக்கோவில் நிர்வாகத்திற்கு பொறுப்பான ஒருவர் மிகவும் அக்கறையுடையவர் போன்று "அம்மையாரே வாருங்கள் "! என்று வரவேற்றார்.

தோழியர் ரூனா ஒரு கம்யூனிஸ்ட் என்பதை அறிந்து கொண்டதும் கம்யூனிஸ்ட்டுகளை நையாண்டி செய்துவிட்டு மிகவும் அவசரமாக அவ்விடத்திலருந்து மறைந்துவிட்டார்.

20,30 வயதுகளில் கம்யூனிஸ்ட்டுக்களாக இருப்பவர்கள் 50 வயதுகளில் பழமைவாதிகளாகிவிடுவார்கள் என்பது உண்மையா என்று அவர் கேட்டார். அதற்கு "அதில் உண்மையில்லை ஒரு சிலர் மாறுவார்கள் எல்லோரும் மாறிவிடுவதில்லை கம்யூனிஸ்ட்டுகளுக்கு எதிரான இவ்வாறான நையாண்டிகளை நிறையவே கேட்டிருக்கிறேன். அதனால் இந்நையாண்டி என்னை பாதிக்காது" என்று தோழியர் ரூனா பதிலளித்தார்.

அவ்வேளை அங்கிருந்த புதிய-ஜனநாயக கட்சியின் தோழர் ஒருவர் "இந்துக்க்ளாக இருந்தவர்களில் சிலர் மதம் மாறிவிட்டதால் எல்லா இந்துக்களும் இந்து மதத்தை கைவிட்டு விட்டார்களா" என்று கேட்டவுடன் நையாண்டி செய்த அந்த இந்து சமயப் பெரியார் அவசர அவசரமாக அவ்விடத்தை விட்டு மறைந்துவிட்டார்.

தமிழ் மக்கள் மீதான யுத்தத்திற்கு எதிராக இலங்கையில் இடதுசாரிகள் போராடி வந்தனர் என்பதையும் பல நாடுகளிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சிகள் இலங்கை தமிழ் மக்களின் போராட்டத்திற்கு ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்கியுள்ளன என்பதை அவர் அறிவாரா? அமெரிக்காவில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்டதை எதிர்த்து எடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கைகளுக்கு அமெரிக்காவிலுள்ள சில கம்யூனிஸ்ட்டுகளும் ஒத்துழைப்பு வழங்கினர் என்பதை அறிவாரா?

இந்துத்துவத்தின் பேரால் இந்திய குஜராத் மாநிலத்தில் மனித உயிர்கள் வேட்டையாடப்பட்டமை நியாயமானதல்ல என்பதை அறிவாரா? போர் அழிவுகளுக்கும் இழப்புகளுக்கும் பின்னர் யாழ் குடாநாட்டில் சில கோயில் கதவுகள் பல இந்துக்களுக்கும் திறக்கப்படுவதில்லை என்பதை அறிவாரா? அங்கு சில கிணறுகளில் எல்லோருமே தண்ணீர் அள்ள அனுமதிக்கப்படுவதில்லை என்பதை அறிவாரா?

# தோழர் நடேசனுக்கு அஞ்சலி

கடந்த மாதம் மறைந்த தோழர் எஸ்.நடேசனுக்கு புதியபூமி அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறது. இலங்கையின் முதலாவது பரம்பரை இடதுசாரி தலைவர்களில் தோழர் நடேசன் முக்கியமானவராவார். அவர் பெருந்தோட்டத் தொழிற்துறையில் இடதுசாரி தொழிற்சங்க இயக்கத்தை கட்டி வளர்ப்பதிலும், இடதுசாரி தொழிற்சங்க சம்மேளனத்தைக் கட்டி வளர்ப்பதிலும் கூடிய அக்கறை செலுத்தினார். அவர் ஐக்கிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைவராகவும், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு உறுப்பினராகவும் இருந்தார். பெருந்தோட்டத் தொழிற்சங்க கூட்டுக் கமிட்டியினை உருவாக்கி சிலகாலம் அதன் தலைவராகவும் செயற்பட்டார்.

அவர் பெருந்தோட்டத் தொழிற்சங்க கூட்டுக் கமிட்டியின் தலைவராக இருந்த காலத்தில் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் போராட்டங்கள் பல வெற்றியடைந்தன. அவ் வெற்றிகளுக்கு அவரின் உழைப்பு முக்கிய பங்காற்றியிருந்தது.

அவரின் கட்டுரைகள், பேச்சுக்கள் பெருந்தோட்டத் தொழிலாளர்களினதும், மலையகத் தமிழ் மக்களினதும் அவலங்களை வெளிப்படுத்தியருந்தது துடன் அதற்கான தீர்வுகளையும் வலியுறுத்தியிருந்தன.

'HISTORY OF HILL COUNTRY TAMILS' என்ற அவரின் நூல் மிகவும் காத்திரமானதாகும்.

இலங்கையின் இடதுசாரி இயக்கத்தின் வரலாற்றில் தோழர் எஸ்.நடேசனின் பங்கு முக்கியமானதாகும். கடந்த 25 வருடங்களாக இலங்கையில் வளர்ச்சியடைந்துள்ள இனவாத போக்கின் பாதிப்புகள் எவ்வாறிருந்த போதும் இறக்கும் வரை இடதுசாரி கொள்கையில் உறுதியாக இருந்தார்.

இலங்கையின் இடதுசாரி இயக்கமும், மலையகத் தமிழ் மக்களும் அவரை அங்கீகரிக்கவும், பாதுகாக்கவும், பராமரிக்கவும் தவறியதை விமர்சன ரீதியாக ஏற்றுக் கொண்டாக வேண்டும்.

# யூ.என்.பி.யின் ஓராண்டில்

உள்நாட்டின் மந்திரி மட்டுமல்ல கிறிஸ்தவ விவகாரங்களுக்கான அமைச்சர் யோன் அமரதுங்காவின் தகவலின்படி 2001 டிசம்பர் 5ம் திகதியிலிருந்து 2002 நவம்பர் முடியவுள்ள காலப்பகுதியில் 934 கொலைகள், 3715 கொள்ளைகள், 465 கடத்தல்கள், 58 மிரட்டல்கள் மூலம் பண வசூலிப்பு. இது சிக்காகோவை மிஞ்சியது அல்லவா? இத்தனைக்கும் அரசு பாதுகாப்புத்துறை என்ன செய்தது?

776 கொலை தொடர்பான கைது மட்டும், 1982 கொள்ளை தொடர்பான கைது மட்டும். 319 கடத்தல் தொடர்பான கைது மட்டும், 29 மிரட்டிப் பணம் பெற்றது தொடர்பான கைது மட்டுமே மிகுதியானோர்?

# பயன்தரும் நினைவு நூல்




மறைந்த மானிடநேயன் கி.சிவஞானம் நினைவாக வெளிவந்துள்ள நூல் பயன்தரும் ஒரு வெளியீடாகும். இறுதிவரை உறுதி குலையாத ஒரு கம்யூனிஸ்டாக வாழ்ந்து மறைந்த அவரது நினைவுகள் தோழர்கள் நண்பர்களால் மீட்கப்பட்டுள்ளன. அத்துடன் மிகவும் பயன்பாடு மிக்க கட்டுரைகள் அந்நூலில் இடம்பெற்றுள்ளன. 151 பக்கங் களைக் கொண்ட மேற்படி நினைவு நூல் 05.01.2003ல் கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெற்ற நினைவு அஞ்சலிக் கூட்டத்தில் வெளியிடப் பட்டது. சிறப்பான அட்டைப் படத்துடன் வெளிவந்துள்ள நூலின் அன்பளிப்பு விலை 75ரூபாவாகும். தமது இறப்பின் பின்பும் மக்களுக்கும் சமூகத்திற்கும் ஏதாவது பயன்தரும் ஆக்கங்கள் வர வேண்டும் என்னும் விருப்புடன் மறையும் தோழர்களின் வழியில் தோழர் சிவஞானத் தின் நினைவு நூலும் பயன் உள்ள வெளியீ டாகும். இந்நூலினை மாக்சிச கற்கை நெறி களுக்கான சண்முகதாசன் நிலையமும், குடும்பத்தினரும் இணைந்து வெளியிட்டுள்ளனர்.

# அமெரிக்கப் பயங்கரவாதம்

இலங்கையில் நடைமுறையில் உள்ள பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் தமிழர்கள் மட்டுமே பயங்கரவாதிகளாகக் கருதப்பட்டு இன்றும் பலர் இன்னமும் சிறையில் உள்ளனர்.

அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தவர்கள் இந்த யூஎன்.பி. அரசேயாகும். தற்போதைய சூழலில் இச்சட்டத்தை இரத்துச் செய்யுமாறு தமிழர் கூட்டமைப்பும், பொதுஜன ஐக்கிய முன்னணி கோரிக்கை விடுத்த போது அதற்கான தருணம் இன்னமும் வரவில்லையென சமாதான முன்னெடுப்பு பற்றியோ, கைதிகள் விடுதலை பற்றியோ வாய் திறக்காத முன்னாள் சட்டமா அதிபர் (தற்போதைய பாதுகாப்பு அமைச்சர்) திலக் மாரப்பொன தெரிவித்துள்ளார். என்றுமே யூ.என்.பி. ஆட்சிக் காலங்களில் ஒத்துழைப்பு நல்கும் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்தப் பதில் கிடைத்ததும் அமைதியாகி விட்டனர்.

தற்பொழுது அமெரிக்காவில் பயங்கரவாதத்தை எதிர்ப்பதென்ற போர்வையில் ஈரான், ஈராக், லிபியா, சூடான், சிரியா, பங்களாதேஷ், எகிப்து, இந்தோனேசியா, ஜோர்தான், குவைத்து ஆகிய நாடுகளின் பிரஜைகள் (அதாவது முஸ்லிம்கள்) அமெரிக்கா செல்ல விரும்பினால் அவர்கள் முன் கூட்டியே அமெரிக்க அரசுக்கு அறிவிப்பதுடன் தங்களின் கை விரல் அடையாளங்கள் பெறப்படுவதற்கு சம்மதம் உடையவர்களாகவும் இருக்க வேண்டுமெனக் கோரப்பட்டுள்ளது.

இலங்கையில் பயங்கரவாதச் சட்டம் தமிழர்களுக்கு எதிராகவே பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. அமெரிக்காவின் பயங்கரவாதச் சட்டம் முஸ்லிம்களுக்கு எதிராகவே பயன்படுத்தப்படுகிறது இங்கு கவனிக்கத்தக்கது.

• • • • •

படிப்பகம்

www.padippakam.com



# ஒரு மலையக மாணவனின் டயரி

எஸ். உதயசூரியன்

02.01.2003 - 03.01.2003 - தவணை விடுமுறை முடிந்து, பாடசாலை ஆரம்பமானது. புதிய வகுப்புக்கு தரம் உயர்த்தப்பட்டு, நண்பர்கள் சந்தோசத்துடன் வந்து சேர்ந்தனர். புதிய புத்தகங்கள் கிடைக்கும், முதல் நாளே படிப்பு ஆரம்பமாகிவிடும் என்ற எதிர்ப்பார்ப்புகள். 'போன வருசம்' போல இல்லாமல் இந்த வருடம் ஏதாவது படிப்பு நடக்கும் என்ற எண்ணம். ஆசிரியர்கள்- ஆசிரியைகள், விலைவாசி உயர்வு, சூழல் பாதிப்பு, மேல் கொத்மலைத் திட்டம் போன்றன குறித்து விளக்கமளிப்பார்கள் என்ற நப்பாசை. பந்தம் பிடித்தல், வால் பிடித்தல், ஜால்ரா போடுதல் போன்ற ஈனத் தனங்கள் குறைந்திருக்கும் என்ற 'நினைப்பு' எத்தனை எத்தனையோ எண்ணங்கள்.

முதல் நாள் 'டைம் டேபிள்' இன்னும் போட்டு முடியவில்லை. நீங்கள் வகுப்பறைகளை கூட்டி சுத்தமாக்குங்கள் என்று ஆறுமுகம் சேர் கூறினார். பிற்பகல் 2.30 வரை ஒரே கூட்டல்' தான். எல்லோரது உடுப்பும் மண்ணிறமாகி விட்டது. மறுநாளும் இந்த நிலைதான், நன்றாக விளையாடினோம். பாபு, ஓடி விழுந்து காயப்படுத்திக் கொண்டான். 'ஓ போடு' பாட்டுப்படித்து ஆடினோம். கிருஷ்ணன் மேசையில் நன்றாக தபேலா அடித்தான்.

பாடமில்லன்னு சொன்னாலும் ஓ போடு, / பருப்பு கறி குடுத்தாலும் ஓ போடு,

எக்சாம் பெயில் என்றாலும் ஓ போடு, / ஏசி உதச்சி தள்ளினாலும் ஓ போடு,

இப்படி ரவி படித்தான். எல்லோரும் ஓ போடு என்று கத்தினார்கள். சேர்மார்களும் டீச்சர்மார்களும் 'ஸ்ராப் ரூமில்' உட்கார்ந்து கொண்டு வேறு ஏதோ சொல்லி சொல்லி சிரித்துக் கொண்டிருந்தார்கள்.

06.01.2003 - 10.01.2003 - 'டைம் டேபிள்' இன்னும் முடிவடையாதபடியால் இந்த வாரமும் பாடம் ஒன்றும் நடக்கவில்லை. புதன் கிழமை தலவாக்கலை போயிருந்தேன். அங்கு ஒரு பாடசாலை அதிபர். புதிதாக வந்த அதிபருக்கு 'குவாட்டர்ஸ்' கொடுக்கவில்லை என்ற சண்டையாம். பழைய அதிபர் சி.டபிள்யூசி சப்போட்டராம். புதியவர் மற்றைய பக்கமாம். குவாட்டர்ஸ் கொடுத்தாக வேண்டும் என்று புதியவர். இதனால் ஏற்பட்ட களேபரம் இரண்டு பள்ளிக்கூடங்களில் படிப்பு கிடையாது. பழைய அதிபரை அதே குவாட்டர்ஸில் இருக்கும்படி கல்விசார் ஐயாமார்கள் சொல்லிவிட்டார்களாம். 'அப்பிடி' வரக்கூடிய நிலை உள்ளதாக பேசிக் கொண்டார்கள். பிள்ளைகள் தான் பாவம்.

'தைப்பொங்கல்' நெருங்கிவிட்டதால் பிள்ளைகள் வரவும் குறைந்துவிட்டது. தைப்பூசம் கோயில்களில் ஓகோ என்று நடைபெற தொடங்கி விட்டது. தைப்பூசம் சேர்மார்களும் டீச்சர்களும் புது ஆடை அணிந்து, கூட்டம் கூட்டமாக கோயிலுக்குப் போய் வந்தனர். நெற்றியில் பட்டை கண்களில் பக்திப்பரவசம் ஏதோ இமயமலையிலிருந்து வருவது போல என்ன பக்தி! என்ன பரவசம்!!

செவ்வாயன்று எங்கள் ஸ்கூல் பூசை என்று பேசிக் கொண்டார்கள். நாங்கள் ஓடி விளையாடினோம். 'சித்தி' என்று நாங்கள் சொல்கின்ற டீச்சரின் 'செயின்' எங்கோ விழுந்துவிட்டதாம். எல்லா இடமும் தேடிப்பார்த்தோம். எடுப்பவருக்கு நூறு ரூபாய் என்றார்கள். கோயிலுக்குள் கூட்டமாக போன ஓ.எல். அண்ணன்மார்களும் அக்காமார்களும் நன்றாக ஏச்சு வாங்கிக்கொண்டு வந்தார்கள். எங்கள் வகுப்புக்குரிய 'டஸ்டர்' அதிபர் நாற்காலிக்குக் கீழ் கிடந்து, ரவி எடுத்தான்.

'ஹோம் சயன்ஸ்' டீச்சர் பூசை முடிந்து லேட்டாகத்தான் வந்தார்கள். ஹோம் சயன்ஸ் அறையைத் திறந்தபோது அங்கு அந்த 'செயின்' கண்ணாடிக்குப் பக்கத்தில் இருந்து எடுக்கப்பட்டதாக சிவா சேர் சொன்னார். கோவிலுக்குப் போக 'தயாரான' போது, அங்கு கழற்றி வைத்துள்ளார். அந்த 'சித்தி'யின் நூறு ரூபாய் யாருக்கும் கிடைக்காமல் போய்விட்டது.

13.01.2003 - 17.01.2003 - பொங்கல் வாரம் என்பதால், மாணவர் வரவு குறைந்தது. இதனால் கிறிக்கெட் விளையாட முடிந்தது. 'ஸ்கூலிலும்' பொங்கல் வைக்க வேண்டும் என்று ஆறுமுகம் சேர் சொன்னார். மாட்டுப் பொங்கல்தான் இங்கே பொருத்தம் என்று, பாலா சேர் சொல்ல எல்லோரும் 'ஓ' என்று சிரித்தார்கள். பொருள் விளங்கியதோ, என்னவோ எனது நண்பர்களும் சிரித்தனர். 'மாட்டுமந்திரி', மந்திரிமாடு' மேய்ப்பர்கள், 'கழுத்துமணிகள்' 'ஜால்ராக்கள்' மந்தைகளாக்கப்பட்ட மாணவர், மாட்டுப்பொங்கல் பாடசாலைக்கும் பொருந்துமோ என்ற யோசனையோடு வீடு சென்றேன்.

18ம் திகதி சனிக்கிழமை ராகலை போயிருந்தேன். பொங்கல் விழா பார்க்கவல்ல எனது மாமா வீட்டிற்கு. அவரது வீட்டிலிருந்து பார்க்கும்போது, இராகலை சிங்கள வித்தியாலயம், மெயின்றோடு எல்லாம் நன்றாகத் தெரியும். அநியாயங்கள் நடக்க இடமளிக்கக்கூடாது என்றோ என்னவோ மழை வெளுத்து வாங்கியது. குளிர் இன்னொரு பக்கம். எல்லா ஸ்கூல்களும் 'ஊர்தி' கொண்டுவர வேண்டும் என்றதால், இரவுபகலாக அதிபர்களும், ஆசிரியர்களும், மாணவர்களும் பட்டப்பாடு அடேயப்பா' இப்படியான ஒரு வேலையை நாள்தோறும் கல்விக்கு செய்தால், நினைத்துப்பார்க்க முடியும்.

"இந்த நாசமாய்ப் போனவனுங்க" பொங்கல் விழா நடத்திறதுனால நாங்க பட்டபாடு தெரியுமா? தூக்கமில்லாம, சாப்பாடு இல்லாம, பெரிய பானை செய்வோம். சமாதான ஊர்தி செய்வோம், அது செய்வோம், இது செய்வோம். எல்லாம் "மந்திரிமார்கள சந்தோஷப்படுத்திற மாதிரி இருக்கனும்' சங்கக்கொடியில உள்ள மூனு நிறமும் வார மாதிரி 'ரெட்ட' கட்ட வேணும் நம்ம ஸ்கூல் முன்னுக்குவரனும்! மந்திரிவுட்டு படத்த முன்னுக்கு வைத்தால் நன்றாயிருக்கும் இது இன்னொரு அதிபரின் விருப்பம்.

ஊர்தி ஊர்வலம் வந்தது, மழையும் சற்று அதிகமாகவே வந்தது. மாணவர்கள் பட்டபாடு.... நேரிலே பார்த்திருந்தால்தான் தெரியும். பாதையெல்லாம் சேறும் சகதியுமாக மாணவர் நன்றாக உழுதனர். நிகழ்ச்சிக்கு ஏற்றபடி நன்றாக சிரிப்பவர் போட்டியும் நடைபெற்றது, இந்த கூத்தை பார்த்து என்ன அழவா முடியும்.

அழுகையிலும் குறைவைக்கக் கூடாது என்பதற்காக 'அழுகைப்போட்டி'. அதிபர்கள் அந்த மழைக்குள்ளும் 'சிரிப்பும்' ஓட்டமுமாக எதையாவது செஞ்சி ஒப்பேத்துங்கப்பா' கல்வி அதிகாரி காலையில இருந்து இதையே சொல்லிக் கொண்டிருந்தார்.

பல போட்டிகள் நடந்தது. கல்வியதிகாரிகள் அமைச்சர்களின் முன்னிலையில் ஆயிரம் 'குட்டிக்கரணம்' அடித்தால் பிற்காலத்தில் பல விடயங்களுக்கு உதவும் எனக் கூறி ஒரு போட்டி வைத்திருந்தால் 'சுப்பராக' இருந்திருக்கும். தோப்புக்கரணம் போடும் போட்டியும் வைத்திருக்கலாம். அடுத்தமுறை இந்தப் 'பொங்கல்' நிகழ்வை நடத்துவோர் இதை சிறப்பு நிகழ்ச்சியாக நடத்தலாம்.

'பெரிய' அமைச்சர் வந்தார் 'பறிபட்டு' ஓடினார்கள். சேறும், சகதியுமாக அமைச்சர் முன் சிரித்துக்கொண்டு நின்றதை பார்த்திருக்க வேண்டும். முகத்தை எப்படியும் காட்டிவிட வேண்டும் என்ற போட்டி போலிருந்தது. மாலையில் 'மியூசிக்'. தண்ணியும் ஆட்டமும், மழையும் குளிரும். சாராயத்தண்ணியில்' மிதக்குறோமா 'மழைத் தண்ணியில்' நீந்துகிறோமா என்று தெரியாத நிலை.

20.01.2003 - 24.01.2003 - ஸ்கூலில் விளையாட்டுப் போட்டி வைக்க வேண்டும் என்று பேசிக் கொண்டார்கள். ஹவுஸ் பிரித்தல், யாரை அதிதியாக கூப்பிடுவது என்ற கலந்துரையாடல் வாதப்பிரதிவாதங்கள் 'ஒப்பிசிலும்'. 'ஸ்டாவ் ரூமிலும்' ஒரே சத்தம். இவ்வாரம் ஒரு பாடமும் நடைபெறவில்லை.

27.01.2003 - 31.01.2003 - காலையில் 'ரெஜிஸ்டர் மார்க் பண்ணிய' பின்னர் கிரவுண்டுக்குப் போய் விளையாடி னோம். பலர் அப்படியே வீட்டுக்குப் போய் விட்டனர். விளையாட்டுக்குப் பெயர் கொடுத்தவர்கள் அங்கும் இங்கும் ஓடி 'பிரக்டிஸ்' பண்ணிக் கொண்டிருந்தனர். ஆறுமுகம் சேரை காணவில்லை. அதனால் எங்களுக்குக் கொண்டாட்டமாக இருந்தது.

# மேல்கொத்மலைத் திட்டத்தை எதிர்க்கும்

## அமைச்சர் ஆறுமுகம் அரசிலிருந்து வெளியேறுவது நல்லது.

எவ்வாறான எதிர்பார்ப்புகள் இருந்த போதும் மேல்கொத்மலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தியே தீருவேன் என்று மீண்டும் ஒருமுறை நீர் மின்சக்தி அமைச்சர் கரு.ஜயசூரிய தெரிவித் துள்ளார். அவர் அத்திட்டத்தை கை விடாவிட்டால் ஐ.தே.மு. அரசாங்கத் திற்கு இ.தொ.கா. வழங்கும் ஆதரவை விலக்கிக் கொள்ள வேண்டி வரும் என்று இ.தொ.கா. தலைவரும் அமைச் சருமான ஆறுமுகம் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

ஆறுமுகம் தொண்டமானின் மேற்படி அறிக்கைக்கு உள்நோக்கம் அவரு டைய சுய அரசியல் எதிர்பார்ப் பாக இருந்தபோதும் அறிவுபூர்வமான மேல் கொத்மலை நீர் மின்திட்டத்தை கைவிடும்படி கோருவது வரவேற்கத் தக்கதாகும்.

மேல்கொத்மலைத் திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கமும் மக்கள் மத்தியில் அறிவூட்டும் நிகழ்ச்சிகளை முன்னெடுத்தது. சிங்களத்திலும் தமிழிலும் துண்டுப்பிரசுர இயக்கங்கள் நடத்தப்பட்டன. அவ்வியக்கம் நடத்திய கையெழுத்து இயக்கத்திற்கு ஆதர வாக ஆயிரக் கணக்கானோர் கையெ ழுத்திட்டிருந்தனர். இ.தொ.கா. தலைவரும் அமைச்சருமான ஆறுமுகம் தொண்டமான் மேல்கொத்மலைத் திட்டத்திற்கு எதிராக ஊர்வல மொன்றையும் பொதுக் கூட்ட மொன்றையும் நடத்தினார். அதில் பௌத்த பீடாதிபதிகளும் கலந்து கொண்டனர். சூழலியளாளர்களும் அத்திட்டத்தினால் சூழல் பாதிக்கப்படும் என்று எச்சரித்திருந்தனர்.

இவ்வாறான சூழ்நிலையில் அத்திட்ட த்தை நடைமுறைப்படுத்தப் போவதாக மீண்டும் மீண்டும் அமைச்சர் கரு.ஜயசூரியவும், பிரதியமைச்சர் நவீன் திசாநாயக்காவும் கூறிவருகின்றனர். ம.ம.மு. தலைவரும் அமைச்சருமான சந்திரசேகரனும் அத்திட்டத்தை ஆதரித்தார். மக்களின் எதிர்ப்பை அடுத்து அத்திட்டம் கைவிடப்படும் பட்சத்தில் அம்முடிவை தான் ஏற்றுக்கொள்வதாக அவர் பின்னர் தெரிவித்தார்.

அப்பிரதேச மக்களும், சூழலியளாளர் களும், அப்பிரதேச மக்களின் பிரதிநிதி களும் எதிர்க்கின்றபோது அமைச்சர் கரு.ஜயசூரியவும், பிரதியமைச்சர் நவீன் திசாநாயக்கவும் அத்திட்டத்தை முன்னெடுக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருப்பது அவர்களின் மலையகத் தமிழ் மக்களுக்கு எதிரான அரசியல் நிலைப்பாட்டையே வெளிக் காட்டுகிறது.

அத்திட்டத்தினால் அப்பகுதியிலுள்ள வளமான பெரும் நிலப்பரப்பு நீருக்குள் மூழ்கடிக்கப்படுவதுடன், சூழலுக்கு பாதிப்பும் ஏற்படும் புதிய குடியேற்றத் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டு அப்பகுதியில் வாழும் மலையகத் தமிழ் மக்களின் குடிப்பரம்பலில் வீழ்ச்சியை ஏற்படுத்தும். இதனால் அம் மக்கள் அரசியல், பொருளாதார ரீதியான பாதிப்புகளுக் குள்ளாக்கப்படுவர்.

மலையகத் தமிழ் மக்களின் தலைவர்கள் எனப்பட்டவர்களின் கடந்த கால வரலாற்றைப் பார்த்தால் வேலை நிறுத்தப் போராட்டங்கள், எதிர்ப்பு போராட்டங்களை அவர்கள் அவர்களின் அரசியல் பலத்தை உறுதி செய்வதற்கே பயன்படுத்தினர். அதனால் மக்களின் போராட்டம் வெற்றியடையவில்லை. மக்களின் போராட்டங்கள் அவர்களின் தலைவர்கள் எனப்பட்டவர்களால் காட்டிக் கொடுக்கப்பட்டது.

மேல்கொத்மலைத் திட்டத்திற்கு எதிர்ப்பை தெரிவிக்கும் ஆறுமுகம் தொண்டமானின் நிலைப்பாடு வரவேற்கத்தக்கதெனினும், தொடர்ந்து நம்பக்கூடியதாக இருக்கும் என்று கூற முடியாது. அதனால் மக்கள் அவர்களின் எதிர்ப்பு போராட்டங்களை தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும். அத் திட்டம் கைவிடப்படும்வரை முன்னெடுக்கப்பட வேண்டும்.

மக்களுக்கு பாதிப்பற்ற வகையில் அத் திட்டம் சில திருத்தங்களுடன் முன்னெடுக்கப்படலாம் என்பதை ஏற்றுக்கொள்ளக் கூடாது. அத் திட்டம் முற்றாகவே கைவிடப்பட வேண்டும்.

# உண்மையில் பொருளாதார வளர்ச்சி இடம்பெறுகிறதா?

## மக்கள் ஏமாற்றப்படுகிறார்கள்!

நாட்டின் பொருளாதார வளர்ச்சி பற்றி அவ்வப்போது மத்திய வங்கி புள்ளி விபரங்களை வெளியிட்டு பொருளா தாரம் வளர்ச்சியடைவதாக மக்க ளுக்கு கூறி வருகிறது. புதிய அரசாங்கம் வந்ததும் முன்னைய ஆட்சியில் கடைசி ஆண்டில் பொருளா தாரம் பின்னடைந் ததாக தெரிவித்தது. அதற்கு ஆதார மாக மத்திய வங்கி புள்ளிவிபரங்களைத் தந்தது. ஆனால் முன்னைய அரசு பதவி வகித்த போது இதே மத்திய வங்கி பொருளாதார வளர்ச்சி பற்றியே கூறி வந்தது கவனிக்கத்தக்கது.

இப்போது மத்திய வங்கி 2002ம் ஆண்டின் கடைசிக் காலாண்டில் பொருளாதாரம் வளர்ச்சியடைந்த தாகக் கூறுகிறது. எந்தத்துறை வளர்ச்சி யடைந்தது என்பதுதான் பிரச்சினை.

கைத்தொழில்துறை குறித்த கடைசிக் காலாண்டில் 3.1%சதவீதத்தால் வளர்ச்சியடைந்ததாகக் கூறுகிறது. மிகவும் முக்கியமான விவசாயத்துறை 1.2% வீதத்தால் வளர்ச்சியடைந்த தாகக் கூறுகிறது. ஆனால் அதே புள்ளி விபரத்தின்படி தெங்கு உற்பத்தி யானது 22%வீதத்தால் வீழ்ச்சி யடைந்தது. குறித்த காலாண்டில் தேயிலை உற்பத்தி 18.2% வீதத்தால் அதிகரித்தது. அதற்குக் காரணம் காலநிலை சீராய் இருந்ததாம். (தோட்டத் தொழிலாளர் கள் அல்ல என்பதே பொருள். சம்பளம் மட்டும் கூட்ட முடியாது) அதேசமயம் ரப்பர் உற்பத்தி ஓரளவு வீழ்ச்சி. (எவ்வளவு என்பது தரப்படவில்லை) கண்ட தெனவும் அதற்குக் காரணம் மழை நாட்கள் கூடவாம். இதிலிருந்து ஒன்று புலனாகிறது. மொத்த விவசாய வளர்ச்சியான 1.2% சதவீதமென்பது தேயிலை உற்பத்தியின் அதிகரிப்பா லேயே ஏற்பட்டது. அல்லாவிடில் விவசாயத்துறை பின்னடைந்ததையே புலப்படுத்துகிறது.

மரக்கறி விலையானது பத்து மடங்காக அதிகரித்துள்ளதாக பாராளுமன்றத்தில் ரிச்சட் பத்திராண தெரிவித்தார்.

சந்தையில் பொருட்கள் விற்கும் விலையைக் கொண்டே மக்கள் பொருளாதார வளர்ச்சியை மதிப்பிடு கிறார்கள். மத்திய வங்கி புள்ளி விபரங்களில் அவர்களுக்கு அக்கறை இல்லை. மொத்தத்தில் பொருளாதார வளர்ச்சியைப் பற்றி பெரிதாகக் கதைப்பதெல்லாம் சேவைத்துறையின் 79% சதவீத வளர்ச்சியினாலேயாகும்.

பொருளாதார வளர்ச்சி பற்றி ஆராயும் போது சேவையும் கணக்கிலெடுக்கப் படுகிற போதும் நாட்டின் கைத் தொழில்-விவசாய வளர்ச்சியில்லாமல் சேவை மட்டும் வளர்ச்சியாகிடாது.

தொலைத்தொடர்பு 1996ல் இருந்து வளர்ச்சிப் போக்கிலேயே இருந்து வந்துள்ளது. கடந்த காலாண்டில் இது 16.5% வளர்ச்சி பெற்றது. கையடக்கத் தொலைபேசிகள் 29% வளர்ச்சி பெற்றது. இன்டெர்நெற், ஈமெயில் சேவை 16% வீதத்தாலும் அதிகரித்தது. வடக்கு-கிழக்கில் தொலைத்தொடர்பு சேவைகளின் தேவை அதிகரித்ததும் தொலைத் தொடர்புத் துறை அதிகரிப்புக்குக் காரணமாகும்.

2003ம் ஆண்டில் பொருளாதார வளர்ச்சி எப்படியிருக்கப் போகிற தெனக் கேட்டபோது வெளிக் கார ணங்களான அமெரிக்க, மேற்குலக, யப்பானியப் பொருளாதார வீழ்ச்சி, இராக் மீதான யுத்தம் என்பன இலங்கையையும் பாதிக்குமென இலங்கை வர்த்தக சம்மேளனத் தலைவர் திரு.திலக் டீ சொய்சா தெரிவிக்கிறார்.

பிரதமர் நாட்டு மக்களுக்கு ஜனவரி 5ம் திகதி ஆற்றிய உரையில் பின்வருமாறு கூறியிருந்தார்:-

"உலக நாடுகளுக்குக் கடன்பட்டே கடந்த 19 வருடங்களாக யுத்தத்தை மேற்கொண்டு வந்திருக்கிறோம். இன்று இலங்கையின் மொத்தக் கடன் சுமை மொத்த தேசிய உற்பத்தியில் 103% சதவீதமாகும். இந்தக் கூடுதல் கடன் சுமை நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு பெரும் இடை யூறாகவே உள்ளது. நாட்டின் மொத்த தேசிய வருமானத்தில் பெருந்தொகை யை கடன்களைச் செலுத்தவே செல விட்டால் மக்களிடமிருந்து அறவிடும் வரியையும் அதிகரிக்க நேரிடும்...

2005ம் ஆண்டாகும்போது இலங்கை யின் கடன் சுமையை மொத்த தேசிய உற்பத்தியில் 87% சதவீதமாகக் குறைத்துக் கொள்ள முடியும். இத்தகைய நடவடிக்கையை நாம் தொடர்ந்து கடைப்பிடித்தால் 2013ம் ஆண்டளவில் கடன் சுமையை 60% சதவீதமாகக் குறைக்க முடியும்".

பிரதமரின் உரையிலிருந்து நாட்டின் பொருளாதார நிலை மோசமாகவே உள்ளது என்பது வெளிப்படை. இந்த அரசாங்கம் தனக்குத் தேவையான செலவினங்களுக்கான நிதியில் 80% சதவீதத்தை ஏழை மக்களிடமிருந்து வரியாகப் பெற்றுக் கொள்கிறதெனவும் செல்வந்தர்களிடமிருந்து 18% சதவீதமான வரியையே அறவிடுவதாக முன்னாள் நிதிஅமைச்சர் ரொனி டிமெல் அண்மையில் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

மக்கள் சிறுகச் சிறுகச் சேமித்த பணத்தை வங்கியில் போட்டால் வரியின் பெயரால் அரசு கொள்ளையிடு கிறது. பணத்தை வீட்டில் வைத்தால் கொள்ளையர்கள் கொலை செய்து பணத்தைச் சுருட்டிச் செல்கிறார்கள் என மாத்தறை மாவட்ட பா.உ. மகிந்த யாப்பா நாடாளுமன்றத்தில் தெரி வித்தார். நாட்டின் தொழிற்சாலைகள் மூடப்படுவதாகவும் தென் இலங்கையில் எட்டு ஆடைத் தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஷெல் காஸ் நிறுவனமானது 12.5 கிலோகிராம் காஸ் வெற்று சிலிண்டர் ஒன்றிற்காக நுகர்வோரிடமிருந்து 2150/-ஸ்ரீ ரூபாவை வைப்புப் பணமாக அறவிடுகிறது. இத்தொகையில் 1150/- ரூபா மட்டுமே மீளச் செலுத்தும் தொகையாகவுள்ளது. எஞ்சிய 1000/- ரூபாவை தனது முதலீட்டிற்குப் பயன்படுத்துகிறது. சிலிண்டரின் வைப்புத் தொகையான 2150/- ரூபாவிற்கு அந்த நிறுவனம் வருடாந்த வட்டியாக 269 ரூபா 60 சதத்தைப் பெறுகிறது. 2002ம் ஆண்டில் 1 கோடி 33 இலட்சம் சிலிண்டர்கள் சுழற்சி முறையில் நுகர்வோரால் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஷெல் நிறுவனத்தின் கொள்ளையோ கொள்ளை.

முன்பு பெட்டோலியம் தனியாரிட மிருந்த போது ஷெல் கொம்பனி அன்றைய இலங்கை வானொலி வர்த்தக சேவையில் "ஷெல்லில் செல்லுங்கள் நன்றாகச் செல்லுங்கள்" என்று தமிழிலும் ஆங்கிலத்தில் GO WELL GO SHELL என்ற விளம்பரம் அடிக்கடி ஒலிபரப்பப்பட்டது.

பின்னர் ஷெல் நிறுவனம் பண்டார நாயக்க அரசினால் தேசிய மயமாக்கப் பட்டது. அப்போது நாடாளுமன்றத்தில் பீட்டர் கெனமன் பின்வருமாறு கூறினார். "OF COURSE WE ARE GOING WELL EVEN WITHOUT SHELL" கெனமன் கூறியது இதுதான் ஷெல் இல்லாமலே நாம் நன்றாகவே செல்கின்றோம். இதுதான் இன்றைய நிலையும்-ஷெல் இல்லாவிட்டாலும் நாம் நன்றாகவே இயங்க முடியும்.

- சிறீ -

படிப்பகம்

புதிய பூமி
පුදිය පුමි REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA PUTHIYA POOMI
சுற்று 10 பெப்ரவரி 2003 பக்கம் 12 விலை 12/- சுழற்சி 55

எஸ்.47. 3ம் மாடி. கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி. கொழும்பு 11. இலங்கை. தொ.பே.: 435117, 335844 பாக்ஸ்: 01-473757

## ஜனநாயகமும் மனித உரிமைகளும் முன் நிபந்தனைகள்!

கடந்த ஒரு வருட காலமாக வடக்கு கிழக்கில் 15இற்கு மேற்பட்டவர்கள் காணாமல் போயுள்ளதாகவும், சிலர் மர்மமான முறையில் இறந்துள்ளதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன. அவற்றுக்கு தமிழீழ விடுதலை புலிகள் இயக்கமே பொறுப்பேற்க வேண்டும் என்று குற்றச்சாட்டுகளும் வெளிவந்துள்ளன. சிறுவர்களை சேர்த்துக் கொள்வதாகவும் தொடர்ந்து குற்றஞ்சாட்டப்படுகிறது.

யுத்த நிறுத்தக் கண்காணிப்பு குழு த.வி.பு. இயக்கத்திற்கு எதிராக செய்யப்பட்டுள்ள முறைப்பாடுகள் பற்றியும் அவற்றில் சிலவற்றுக்கு அவ்வியக்கம் பொறுப்பேற்க வேண்டும் என்றும் கூறியுள்ளது.

மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் (UTHR) என்ற பெயரில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையை மேற்கோள் காட்டி த.வி.பு. இயக்கம் அதிகமான யுத்த நிறுத்த மீறல்களை செய்துள்ளதாக ஜனாதிபதி செயலகம் அறிக்கை செய்துள்ளது. பிரசாரரீதியாக குறிப்பிட்ட இடத்தைப் பிடித்துள்ள UTHR என்ற பெயரிலான அறிக்கைகளில் பல விடயங்களை மிகைப்படுத்துவதும் உண்மைக்குப் புறம்பான விடயங்கள் இருப்பதும் தெரிந்ததே. சிலவேளைகளில் இலங்கை பாதுகாப்பு படையின் அறிக்கையை அவ்வறிக்கை பிரதிபண்ணுகிறதா அல்லது பாதுகாப்பு படையின் அறிக்கை அவ்வறிக்கையைப் UTHR பிரதிபண்ணுகிறதா என்ற சந்தேகம் ஏற்படுவதுண்டு. கெட்டிக்காரனின் புரட்டு எட்டு நாளைக்கு என்பது உண்மையானாலும் ஒரு விடயத்தைத் திரும்பத் திரும்ப ஓங்கி வலியுறுத்துவதன் மூலம் பிரசார ரீதியான தாக்கத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதுண்டு.

இக்குற்றச்சாட்டுக்கள் யாவும் த.வி.பு. இயக்கத்திற்கு எதிரானவையாக காட்டப்பட்டாலும் தற்போதைய சமாதான சூழலில் சமாதானத்தின் எதிரிகளுக்கு தீனி போடுவதாக அமைகின்றது. குற்றச்சாட்டுக்களின் உண்மைத்தன்மை எவ்வாறிருப்பினும் சமாதான நடவடிக்கைகளில் த.வி.பு. இயக்கத்தின் நம்பகத்தன்மையை கேள்விக்குட்படுத்தும் பிரசாரங்களை மேற்கொள்ள இடமேற்பட்டுள்ளது.

போராட்டச் சூழ்நிலையில் ஆயுத நடவடிக்கைகளின் உச்சத்தில் ஏற்படும் ஜனநாயக. மனித உரிமை மீறல்கள் 'தவறுகள்' என்ற வரைவிலக்கணத்திற்குள் நியாயப்படுத்தப்படும். அந்த சூழ்நிலையில் கூட அவை தவறுகள்தானா என்ற 'சோதனை'குட்படுத்தப்படுவதும் உண்டு.

சமாதான சூழ்நிலைக்கு யுத்தநிறுத்த சூழ்நிலைக்கு ஜனநாயகமும், மனித உரிமைகளும் மதிக்கப்படுவது என்பது அடிப்படையான நிபந்தனை ஆகின்றது. யுத்தநிறுத்தத்திற்கு இணங்கியுள்ள எல்லா தரப்புகளும் அவற்றை மதித்து நடப்பது மிகவும் அடிப்படையானதாகும். தேசிய சூழலிலும், சர்வதேச சூழலிலும் ஜனநாயகத்திற்கும் மனிதஉரிமைகளுக்கும் எதிரானவர்கள் கூட அவற்றின் பாதுகாவலர்கள் போன்று அவற்றை உச்சரிப்பார்கள். இன்று எந்தவொரு நபர் மீதோ, அமைப்பு மீதோ, நாட்டின் மீதோ மிகவும் வசதியாக தாக்குதல் செய்வதற்கும் ஜனநாயகமும், மனித உரிமைகளும் சிறந்த ஆயுதங்களாகப் பயன்படுத்தப்படுகின்றன.

அவை அவ்வாறு ஆயுதங்களாக பயன்படுத்தப்படுகின்றன என்பதற்காக மட்டுமன்றி ஆரோக்கியமான சமூகமொன்றை கட்டிவளர்ப்பதற்கு ஜனநாயகமும் மனித உரிமைகளும் அடிப்படையாகின்றன. வர்க்க சமூகத்தில் அவற்றுக்கு வர்க்கரீதியான வரைவிலக்கணங்களே செல்லுபடியானாலும் அவற்றை அனுபவிப்பதற்கான உரிமையில் தலையிடுவது பொதுமக்கள் சார்ந்த நிலைப்பாடல்ல.

ஆயுத நடவடிக்கைகளின்போது கருத்திற் கொள்ளப்படுகின்ற விடயங்களும், அந்நடவடிக்கைகளற்ற சூழ்நிலையில் கருத்திற் கொள்ளப்படுகின்ற விடயங்களும் வித்தியாசமானவையாகவே இருக்கும். அதற்கேற்ப வித்தியாசமான மதிப்பீடுகளும் செய்யப்படும். யுத்தம் செய்யாத இரத்தம் சிந்தாத அரசியலை முன்னெடுக்கின்ற போது அச்சூழ்நிலையை பலப்படுத்திக் கொள்வதற்கு கால அவகாசமும், தீர்க்கமான நடவடிக்கைகளும் இன்றியமையாதன ஆகும். அதில் கவலையீனங்களும் தவறுகளும் நிச்சயம் தவிர்க்கப்பட வேண்டும்.

அரசியல் முரண்பாடுகள் ஜனநாயக வழிமுறைகளால் தீர்க்கப்பட வேண்டும். ஜனநாயக பண்புகளுடனான மக்கள் வாழ்க்கைமுறை கட்டமைக்கப்படுகின்ற போது சமாதானத்தின் விரோதிகளுக்கு உரிய பாடங்கள் புகட்டப்பட்டு விடும். ஜனநாயக வழிமுறைகளில் நம்பிக்கை வைத்து நடவடிக்கைகளை முன்னெடுக்கின்ற போதுதான் ஆயுத நடவடிக்கைகளிலிருந்து ஆயுதமற்ற நடவடிக்கைகளுக்கு மாறுகின்ற இடைக்காலத்தில் ஏற்படுகின்ற அசமத்துவ போக்குகளை மேவ முடியும்.

வடக்கு கிழக்கில் இயல்பு வாழ்க்கை என்பது இடம்பெயர்ந்தவர்களின் மீள்க்குடியேற்றம், புனரமைப்பு புனர்வாழ்வு அபிவிருத்தி போன்றவற்றின் அடிப்படையிலேயே அமைய முடியும். மீள்குடியேற்றம், புனரமைப்பு, அபிவிருத்தி போன்றவற்றை மேற்கொள்வதற்கு சிவில், ஜனநாயக கட்டமைப்பு அவசியம். அதற்கு ஜனநாயகமும், மனித உரிமைகளும் மதிக்கப்பட்டு போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டும் என்பது முன் நிபந்தனை ஆகும். அப்போது பரந்துபட்ட மக்களின் பங்களிப்புடன் இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்த முடியும்.

தேசிய இனப்பிரச்சினைக்கான ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் தீர்வு எய்தப்படுவதற்கும் மக்களின் ஜனநாயக கலந்துரையாடல்களுக்கூடாக அவர்களின் பங்களிப்புடனுமான இயக்கங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். அப்போதுதான் சவால்களையும் முட்டுக்கட்டைகளையும் எதிர்கொண்டு முன்னேற முடியும்.

- ஆசிரியர் குழு -

# சிறி லங்கா-ஜே.வி.பி கட்சிகளின் நோக்கும் போக்கும் எதிர்காலமும்

**ஆண்ட பரம்பரையில் வந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஆளப்பட்டவர்கள் சார்பாக 'புரட்சி' செய்யப்புறப்பட்ட ஜே.வி.பி.யும் இணைந்து நிற்பது பாராளுமன்ற ஆட்சி அதிகார வேட்கைக்கே ஆகும்.**

வெகுஜனன்

இலங்கையின் பாராளுமன்ற ஆட்சி அதிகார அரசியலில் ஆதிக்க நிலை பெற்ற இரண்டு பெரிய கட்சிகளில் ஒன்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியாகும். கடந்த அரை நூற்றாண்டு காலத்தில் நான்கு தடவைகளில் மொத்தம் இருபத்தி நான்கு ஆண்டுகள் ஆட்சி செய்திருக்கிறது இக்கட்சி. நிலவுடமை - முதலாளித்துவக் குடும்பமான பண்டாரநாயக்க குடும்ப வாரிசுகளே அதன் தலைமைப் பாத்திரத்தை வகித்து வந்துள்ளனர். இக்குடும்ப ஆதிக்கம் இக்கட்சியில் முன்னிலை வகித்து வந்திருக்கிறது. இன்றும் அது தொடர்கிறது. தற்போது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா இருந்துவரும் அதே வேளை பாராளுமன்றத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியே பிரதான எதிர்க் கட்சியாக உள்ளது. எதிர்கட்சித் தலைவராக தென்னிலங்கையின் மேட்டுக் குடியைச் சேர்ந்த மகிந்த ராஜபக்ஷ இருந்து வருகிறார். அவர் பண்டாரநாயக்கா குடும்பத்தைச் சேர்ந்தவரல்ல என்பது ஜனாதிபதிக்கும் அவரது நெருங்கியவர்களுக்கும் பெரும் உறுத்தலாகவே காணப்படுகின்றது. இதனை அக்குடும்பத்தின் தற்போதைய ஆண் வாரிசாக இருந்து வரும் அனுரா பண்டாரநாயக்கா பகிரங்கமாக வெளிப்படுத்தி வருகிறார். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமை தனக்குரிய வாரிசுரிமையாகும் எனத் தெரிவித்திருந்தார்.

இத்தகைய சிறிலங்கா சுதந்திரக் கட்சி இலங்கையின் முதலாளித்துவ பாராளுமன்ற ஆட்சிமுறைத் தொடரில் நிலவுடமை பெரு முதலாளித்துவக் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கு மாற்றாக வளர்ந்து வந்தது. மக்கள் இக் கட்சிக்கு ஆதரவு கொடுப்பதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன. ஒன்று, நிலவுடமை பொருளியல் கருத்தியல் சிந்தனை நடைமுறைகள் உடைத்தெரியப்படாத சூழலில் மக்கள் இக் கட்சியின் சில சீர்த்திருத்தங்களை நம்பி தமது இரட்சகர்களாக ஏற்று ஐக்கிய தேசியக் கட்சிக்கு மாற்றாக அதிகாரத்திற்கு கொண்டு வந்தனர். ஆரம்ப காலத்தில் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா அவருக்குப் பின் மனைவியான திருமதி பண்டாரநாயக்கா ஆகியோர் வரையறைக்கு உட்பட்ட தேசியநலன் சார்ந்த ஏகாதிபத்திய எதிர்ப்பு நடவடிக்கைகள் சிலவற்றை மேற்கொண்டனர். இரண்டாவது அவ் அரசாங்கங்களில் பங்கு கொண்ட பாராளுமன்ற இடதுசாரிகள் ஆதரவாக இருந்து பலம் சேர்த்தனர். அதனால் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு ஒரு இடதுசாரி ஆதரவுத் தோற்றமும் கிடைத்தது. அது உண்மையான இடதுசாரி நிலைப்பாடல்ல. அடிப்படையில் தேசிய முதலாளித்துவ வர்க்க நிலையேயாகும். ஆனால் சீரழிந்த பாராளுமன்ற இடதுசாரிகள் இன்றும் பழைய நிலைப்பாட்டையே கதையாக்கி முற்போக்கு முலாம் பூசித் தமது ஓரிரு பாராளுமன்றப் பதவிகளுக்குப் பங்கமேற்படாது பார்த்து வருகின்றனர்.

ஆனால் தனது கணவரது இடதுசாரி நிலைப்பாட்டைப் பயன்படுத்தி பாராளுமன்றத்திற்கும் பின் ஜனாதிபதி ஆசனத்திற்கும் வந்துகொண்ட சந்திரிகா அம்மையார் 1994-2001 ஆட்சிக் காலத்தில் தனக்கும் இடதுசாரித்துவத்துக்கும் ஒட்டுமில்லை உறவுமில்லை என்பதை நிரூபித்துக் கொண்டார். 17 வருட இருண்ட ஆட்சி நடாத்திய ஐக்கிய தேசியக் கட்சியை மீண்டும் ஆட்சிக்கு கொண்டு வருவதற்கு தனது மோசமான பொருளாதார அரசியல் வழிமுறைகளாலும் கொடிய இன யுத்தத்தாலும் வழிவகுத்துக் கொடுத்தவராக சந்திரிகா ஆட்சி நடாத்தினார். அதன் விளைவாகப் பாராளுமன்றத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தோல்வி கண்டது. இன்று எப்படியாவது மீண்டும் அதிகாரத்திற்கு வந்துவிட வேண்டும் எனத் துடித்து நிற்கிறது. அதற்கு ஜனாதிபதிப் பதவியைப் பயன்படுத்தவும் துணைக்கு ஜே.வி.பியை அரவணைக்கவும் முயன்று வருகின்றது. இதற்கு அப்பால் நாட்டையும் மக்களையும் பெரு முதலாளித்துவ ஏகாதிபத்திய சார்புமிக்க பிற்போக்கு ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியை தூக்கி எறிவதற்கான ஒரு நேர்மையான மக்கள் சார்பு வேலைத்திட்டம் எதுவும் அக்கட்சியிடம் காணப்படவில்லை. இனப்பிரச்சினையின் தீர்வுக்கு குறுக்கே நின்று பேச்சுவார்த்தையைக் குழப்பி பேரினவாத கூக்குரலை உயர்த்தி மீண்டும் பதவிக்கு வர எத்தனிப்பதைத் தவிர வேறுவழி இல்லாத வங்குரோத்துவத் தனத்துடனேயே சிறிலங்கா சுதந்திரக் கட்சி இருந்து வருகின்றது.

இந்நிலையிலேயே பாராளுமன்றத்தில் எதிர்க் கட்சியில் இரண்டாவது நிலையில் இருந்து வரும் ஜே.வி.பி. என அழைக்கப்படும் மக்கள் விடுதலை முன்னணி தன்னை மூன்றாவது அரசியல் சக்தி எனக்கூறிக் கொண்டு பாராளுமன்ற சந்தர்ப்பாவாத அரசியலில் புரண்டெழுந்த வண்ணம் உள்ளது. இலங்கை மக்களுக்காகப் புரட்சி செய்யப் புறப்பட்டு 1971ல், 1988-89 காலப்பகுதிகளில் ஆயுதம் தாங்கி அராஜகம் புரிந்துகொண்ட கட்சிதான் ஜே.வி.பி. அதன் தலைவராக இருந்தவர் றோகண விஜயவீரா. தென் இலங்கையைச் சேர்ந்த சாதாரண குடும்பப் பின்னணியும். லுமும்பா பல்கலைக் கழகத்தில் படித்தபோது மாக்சியம் பேசியும், பின் இலங்கையில் புரட்சி செய்ய இளைஞர் யுவதிகளைத் திரட்டியும் கொண்டவர் விஜயவீரா. ஐந்து அரசியல் வகுப்புக்கள் (அதில் ஒன்று மலையகத் தமிழருக்கு எதிரானது) நடாத்தி ஒரேநாளில் பொலீஸ் நிலையங்களைத் தாக்கி அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றும் புரட்சியை நடாத்தியவர் விஜயவீரா. இவரது சிறு முதலாளித்துவ அதிதீவிரப் புரட்சி எனப்படுவது ஒரு முறைக்கு இருமுறை தோல்வி கண்டதுடன் லட்சத்திற்கு மேற்பட்ட இளைஞர் யுவதிகள் மக்களை அரசு யந்திரத்திற்குப் பலிகொடுத்து கொண்டதுடன் தங்களையும் பலியாக்கிக் கொண்டனர். அதிலிருந்து எஞ்சிய ஒரே ஒருவர்தான் தற்போது லண்டனில் இருந்து அஞ்ஞாத அரசியல் தலைமை ஜே.வி.பி.க்கு வழங்கி வரும் சோமவன்சா ஆவார்.

அவ்வழியில் வந்து இன்று நேர்மாறான முதலாளித்துவப் பாராளுமன்ற அரசியலில் மட்டுமன்றி கேடுகெட்ட பேரினவாதத்தை தமதாக்கி பாராளுமன்றப் பதவிகளைப் பெற நிற்பவர்கள் தான் விமல் விரவன்சா- ரில்வின் சில்வா ஜே.வி.பி. தலைமையாகும். இன்று ஜே.வி.பி. ஒரு தேசிய முதலாளித்துவ நிலைப்பாட்டை பேரினவாதத்தின் ஊடாக முன்னெடுக்கும் நிலைக்குச் சென்று நிற்கிறது. அதனாலேயே சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து செயல்பட பேச்சுவார்த்தையில் ஈடுபட்டும் வருகின்றது. காலப்போக்கில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியானது தனது தேசிய முதலாளித்துவ நிலைப்பாட்டை இழந்து வந்துள்ளபடியால் அந்த இடத்தை தானே நிரப்பிக் கொள்ளலாம் என ஜே.வி.பி. முற்றுமுழுதாக நம்பிச் செயல்படுகிறது. அதற்கேற்ற விதமாக தமது கொள்கையில் ஆங்காங்கே இருந்து வந்த மாக்சிசம் சார்ந்த உச்சரிப்புகளை எல்லாம் தூக்கி வீசிவிட்டு நடை உடை பாவணைகளில் கூட சிகப்புநிறம் இடம் பெறாதவாறு பாராளுமன்ற அரசியலில் மூழ்கி எழுந்து நிற்கின்றது. மேதினம் மட்டுமே ஒரே ஒரு சிகப்பு அடையாளமாகும்.

முன்பு பாராளுமன்ற இடதுசாரிகள் எவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து நின்று சோஷலிசத்தை கொண்டு வரலாம் என்ற பொய்யுரைகளை முன்வைத்தனரோ அதையும் விட பல படிகள் மேலே சென்று ஆட்சி அதிகாரத்தில் பங்குகொள்ள ஜே.வி.பி. சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் கை கோர்த்து நிற்க பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகின்றது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியினுள் இருந்து வரும் இன வர்க்க பிற்போக்குவாதிகளான மங்கள சமரவீரா, அனுரா பண்டாரநாயக்கா, டி.எம். ஜெயரத்தினா, அனுரத்த ரத்வத்தை போன்றவர்கள் ஜே.வி.பியின் அந்நியோன்ய கூட்டாளிகளாகி நிற்கின்றனர். இவர்களது பிரதான ஆயுதம் பேரினவாதமாகவே உள்ளது. பேச்சுவார்த்தையைக் குழப்புவதும் அரசியல் தீர்வு ஏற்படாதவாறு சூழலை உருவாக்குவதும் சிங்கள மக்களை மீண்டும் மீண்டும் இனவாதத்தை விழுங்க வைப்பதும் தான் ஜே.வி.பி.யின் சமகால அரசியல் வேலைத்திட்டமாகும்.

இத்தகைய நோக்கத்திற்காக தான் முன்பு கடுரமாக எதிர்த்து வந்த இந்தியாவின் காலடியில் ஜே.வி.பி. இருந்தும் வருகிறது. நோர்வேயின் மூன்றாம் தரப்பு அனுசரனைக்கும் பதிலாக இந்தியா அவ்விடத்தை நிரப்ப வேண்டும் எனப் பகிரங்கமாகவே அறிவித்திருந்தது. ஜே.வி.பி.யின் இக்குத்துக் கரணம் தனியே புலிகள் எதிர்ப்பு மட்டுமன்றி இந்தியாவின் பெருத்த பணப்புழக்கம் என்றும் [illegible]சப்படுகிறது.

இவ்வாறே தனது ஆட்சிக் காலத்தில் இந்தியாவை உதறித் தள்ளி வந்த சந்திரிகாவும் பொதுசன முன்னணியும் இப்போது புது டில்லிக்கு முறைப் பயணம் வைத்து இலங்கையில் தலையிடுமாறு பிரார்த்தித்து வேண்டி நிற்கின்றனர்.

இத்தகைய இரண்டு கட்சிகளும் இந்தியாவை நாடி நிற்பதும் பேச்சுவார்த்தையைக் குழப்புவதும் அரசியல் தீர்வுக்கு பங்கம் விளைவிப்பதும் என்ற ஒரே நேர்க் கோட்டில் வந்து நிற்கிறது.

இவற்றைவிட சிறிலங்கா சுதந்திரக் கட்சி-ஜே.வி.பி. கூட்டுக்கு வேறு மார்க்கம் இல்லை. முழு நாட்டிற்கும் மக்களுக்கும் தேசிய இனப்பிரச் சினைக்கும் பரிகாரம் தேடக்கூடிய உருப்படியான வேலைத்திட்டம் வரைய முடியாது. ஏகாதிபத்திய உலகமய மாக்கலையோ அதன் கீழான தாராய-தனியார்மய நாசங்களை எதிர்த்து நிற்கும் ஆற்றலோ அதற்கான வேலைத் திட்டமோ இவ்விரு கட்சிகளிடமும் இல்லை.

இந்நிலையிலேதான் நேர்மையான இடதுசாரி, ஜனநாயக முற்போக்கு சக்திகள் நாட்டிற்கும் மக்களுக்கும் எதிர்காலத்திற்குமான சரியான மார்க்கத்தில் வழி நடக்க வேண்டியுள்ளது. கடந்த கால சமகால அனுபவங்களையும் பட்டறிவுகளையும் சீர்தூக்கிப் பார்த்து மறு மதிப்பீட்டிற்கு உள்ளாக்கி முன் செல்ல முன்வரல் வேண்டும். பாராளுமன்ற சந்தர்ப்பவாத அரசியல் பாதைக்கு அன்றி அதற்கும் அப்பாலான வெகுஜன புரட்சிகர பொது வேலைத்திட்டத்திற்காகவே செயல்படவேண்டும். ●

படிப்பகம்

www.padippakam.com



# தேசிய இனப்பிரச்சினையின் சமகாலம் பிரதிபலிப்புகள்

பேராசிரியர் சி. சிவசேகரம்

**மறைந்த தோழர் கி.சிவஞானத்தின் நினைவு அஞ்சலிக் கூட்டம் 5.01.2003 கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் இடம் பெற்றது. பேராசிரியர் சி.சிவசேகரம் "தேசிய இனப்பிரச்சினையின் சமகாலப் பிரதிபலிப்புகள்" என்னும் தலைப்பில் ஆற்றிய நினைவுரையின் சுருக்கம் இதுவாகும்.**

ஒரு வருடத்துக்கும் சிறிது முன்பு வரை இலங்கையின் தேசிய இனப்பிரச்சனை ஒரு நீண்ட இன ஒழிப்புப் போராகவும் அதற்கெதிரான ஆயுதப் போராட்ட மாகவும் நெடுங்காலந் தொடரும் என்ற அச்சம் மிகுதியாகவே இருந்தது. பேரின வாத அரசாங்கங்கள் இரண்டுமே, கட்சி வேறுபாடில்லாமல், சூதாடிகள் போல, போருக்குட் பொருளையும் மக்களையும் வீசிக் கொண்டிருந்தன. மறுபுறம் விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை, வெளிநாடுகளிலிருந்து பண உதவி செய்ய ஆயத்தமாக இருந்தளவுக்குத் தமிழ் நடுத்தர வர்க்கம் தன்னைப் போராட்டத்தில் நேரடியாக ஈடுபடுத்திக் கொள்ள ஆயத்தமாக இருக்கவில்லை. தமிழின விடுதலைப் போராட்டம் ஒரு வெகுசனப் போராட்டமாக விரிவடையாத காரணத்தால், விடுதலைப் புலிகள். சமூகத்தின் மிகப் பின்தங்கிய பகுதிகளின் மீதே தங்கியிருக்கவும் ஆட் பற்றாக்குறைக்கும் முகங்கொடுக்க வேண்டியிருந்தது. எனவே, இரு புறமும், உள் நிர்ப்பந்தங்கள் அமைதிக்கான தேவையை வற்புறுத்தின என்பது உண்மையே.

**போரும் அமைதியும் விரும்பப்படுவது அதிகார வர்க்கங்களின் ஆதிக்கத் தேவைகளுக்கேயாகும்**

இன்னொரு புறம், வெளி நிர்ப்பந்தங்களும் அமைதியை நோக்கிய நகர்வைத் துரிதப்படுத்தியுள்ளன. 1980 அளவில் இலங்கையிற் போரைக் கிளறி விடுவதில் முனைப்பாக இருந்த இந்தியா 1987க்குப் பிறகு அமைதியை நிலை நாட்ட முற்பட்டது எப்படி என்பதை யோசித்துப் பார்த்தால், இந்தியாவின் எசமானர்களுக்கு இலங்கையில் போர் பற்றியோ அமைதி பற்றியோ அக்கறை இல்லை என்பது விளங்கும். அதிகார வர்க்கங்களின் அக்கறை தமது ஆதிக்கத்தை எப்படி நிலைநிறுத்துவது என்பது பற்றியது மட்டுமே. எனவே அந்த நோக்கத்துக்குப் போர் உதவும் என்றால் போர் விரும்பப்படும். அமைதி உதவுமெனில் அமைதி விரும்பப்படும். போர் யாருக்கிடையிலானது என்றாலும், போரும் அதன் பின்னான அமைதியும், தாம் விரும்புகிற விதமான போராகவும் அமைதியாகவுமே இருக்க வேண்டும் என்பதிலேயே அவர்களது கவனங் குவிகிறது.

கொலனி ஆதிக்கவாதிகள் சமூகங்களிடையே இருந்து வந்த முரண்பாடுகளைப் பயன்படுத்தி அவற்றைப் பலவீனப்படுத்தி அதிகாரத்தைப் பிடித்த கதை இந்த உலகின் ஒவ்வொரு மண்ணிலும் நடந்தேறியுள்ளது. பின்பு தங்களை ஆதரித்த சமூகங்களை ஓநாய்களுக்கு இரையாக எறிந்து விட்டுப் போனதுவும் நாடு தவறாமல் நடந்த கதைதான். இவற்றிலிருந்து நமது தேசியவாதத் தலைமைகள் எதையுமே கற்றதாகத் தெரியவில்லை. இன்னமும் ஒரு அந்நிய நாடோ இன்னொரு அயல் நாடோ நமக்கு உதவும் என்ற நப்பாசையை ஒவ்வொரு

**பேரினவாதிகள் எந்தக் கட்சியில் இருந்தாலும் சுயநிர்ணய உரிமை சுயாட்சியை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்**

தமிழ்த் தேசியவாதக் கட்சிக்குள்ளும் நம்மால் காண முடிகிறது. சிலர் ஒரு குதிரையில் பணத்தைக் கட்டுகிற சூதாடிகள், மற்றவர்கள், பல குதிரைகளில் பணத்தைக் கட்டுகிறவர்கள். எனினும் இறுதியில் வெல்லப் போவது வெகுசனங்கள்தான் என்பது அவர்கட்குத் தெரியாததால் அந்நிய நாடுகளைப் பகைத்துக் கொள்ளக் கூடாது என்று தாமும் அஞ்சி மக்களையும் அச்சுறுத்துகிறார்கள்.

இன்றைய அமைதிச் சூழல் பற்றிய ஒரு சில விடயங்களில் நமக்குத் தெளிவான பார்வை தேவை. இன்றைய போர் நிறுத்தம் நல்ல விடயம் என்பது உண்மை. ஏனெனில் தமிழர் இதனால் மிகுந்த அழிவைச் சந்தித்துள்ளனர். சிங்கள மக்கள் பொருளாதாரப் பாதிப்பையும் வீண் உயிரிழப்புகளையும் கண்டுள்ளனர். முஸ்லிம்களும் போர்ச் சூழலாலும் போராட்டத்தின் தவறான போக்குகளாலும் தமது தலைமைகளின் தடுமாற்றங்களாலும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே போர் நிறுத்தத்தையும் அமைதிப் பேச்சுவார்த்தைகளையும் ஆதரிக்க மறுப்பது மக்களின் மன விருப்பை மறுக்கிற காரியமே.

போர் நிறுத்தம் என்றால் அமைதி என்று ஆகிவிடாது என்று சனாதிபதியும் கூறியுள்ளார். அது அமைதி என்று ஆகிவிடாமல் இருக்க, அவர் தன்னாலானதைச் செய்கிறார் என்பதும் உண்மை. அவருக்கு உதவ உள்ளூரிலும் வெளியிலும் நிறையப் பேர் உள்ளனர். எனினும் அமைதி என்பது யாருடைய அமைதி, யாருக்கான அமைதி என்பது பற்றி நாம் கவனமாக இருக்க வேண்டும்.

நோர்வே அரசாங்கப் பிரதிநிதிகள் இலங்கையில் அமைதியைக் கொண்டு வர எடுத்த முயற்சிகளுக்குரிய பின்னணி பற்றிய ஐயங்களும் ஊகங்களும் எப்படி இருந்தாலும், அமைதிக்கான முயற்சிகள் சாதகமான திசையில் நகரும் என்ற சாடை தென்பட்டவுடனேயே அமெரிக்கா தனது தலையீட்டுக்கான எண்ணங்களை வெளிப்படுத்தத் தொடங்கிவிட்டது. அமெரிக்க தூதுரும். அயல்விவகார அலுவலர்களும் யாழ்ப்பாணத்துக்குப் படையெடுத்தும் மிரட்டுகிற தொனியில் தமிழ் மக்களின் தாயகக் கோட்பாட்டையும் சுயநிர்ணயத்தையும் மறுத்துப் பேசியதும் பற்றி நாம் மறக்கக் கூடுமா? அதேவேளை, அமைதிப் பேச்சுக்கள் பற்றிய இந்தியாவின் நேரடியானதும் மறைமுகமானதுமான பகைமையின் பின்னணியில் அமெரிக்கா அமைதிப் பேச்சுவார்த்தைகளின் ஆதரவாளனாக மட்டுமன்றி எதிர்காலத் தீர்வில் தலையிடும் நோக்கமுள்ளதாகவும் தன்னை வெளியாகவே அடையாளப்படுத்திக் கொண்டுள்ளது. இது இந்திய-அமெரிக்க உறவில் ஒரு முரண்பாட்டை முன்னுக்குக் கொண்டு வந்துள்ளது.

யூஎன்.பி. தலைமையிலான அரசாங்கமோ, அமெரிக்காவிற்கு விசுவாசமான யூஎன்.பி. பாரம்பரிய நிலைப்பாட்டிற் தளராமல், அமெரிக்காவின் பொருளாதார ஊடுருவலுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொண்டு போகிறது. இன்றுங் கூட இலங்கையின் முப்படைகளையும் வலுப்படுத்துவதற்கு அமெரிக்காவின் ஆதரவு தொடர்ந்தும் இருக்கிறது என்பதும் கவனத்துக்குரியது.

அமைதிப் பேச்சுக்களைப் பற்றிய இந்திய நோக்கங்கள் பற்றிய எதுவிதமான மயக்கங்களும் இல்லாமலே இந்தியாவை மகிழ்விக்கிற முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறது. இந்தியாவின் மனங்கோணாமல் நடந்து கொள்வதில் நோர்வேயின் தூதுவர்களும் கவனமாகவே இருப்பதற்கு இலங்கை அரசாங்கத்தின்

**பேச்சுவார்த்தை பற்றிய நம்பிக்கைகள் வெறும் நம்பிக்கைகளாக மட்டும் இருந்துவிடக் கூடாது**

பூரண ஆசிகள் உண்டு என்பதில் ஐயமில்லை. 1987ம் ஆண்டு உரிமை கோரிய திருகோணமலை எண்ணெய்க் குதங்களை 2001ம் ஆண்டுதான் இந்தியாவின் தூதர் அவசர அவசரமாக இந்தியாவின் பொறுப்புக்குள் கொண்டுவர நடவடிக்கை எடுத்ததன் காரணத்தை விளங்கிக் கொள்ள ஒருவர் அரசியல் மேதையாக இருக்கத் தேவையில்லை. இந்தியாவையும் இலங்கையையும் இணைக்கும் பாலமும் நெடுஞ்சாலையையும் பற்றிய பிரதமரது அறிவித்தலும் மூன்று ஆண்டுகள் முன்னம் பொதுசன முன்னணி ஆட்சிக் காலத்தில் இந்தியாவுடன் செய்யப்பட்ட வர்த்தக உடன்படிக்கை இலங்கைக்குப் பாதகமானது என்று அறிந்தும் அதற்கும் மேலாக இந்தியாவுக்குச் சலுகைகள் வழங்குகிற காரியங்கள் இன்னமும் நடைபெறுகின்றன.

எனவே பிராந்திய மேலாதிக்க நோக்கில் இலங்கை பற்றி அமெரிக்காவும் இந்தியாவுக்கும் முரண்பாடுகள் இருந்தாலும் இன்றைய இந்தியப் பெருமுதலாளியத்தின் அமெரிக்கச் சார்பான போக்கையும் புறக்கணித்து இந்திய-அமெரிக்க முரண்பாட்டை நமக்குச் சாதகமாகப் பயன்படுத்தலாம் என்ற விதமான நெட்டைக் கனவுகளை நாம் வளர்க்க இடம் இல்லை. ஏனெனில் இன்று உள்ள நிலவரம் அமெரிக்க-சோவியத் கெடுபிடியுத்தக் காலம் எனக் கூடிய 1950-1985 கால இடைவெளியில்லா அமெரிக்காவும் இந்தியாவும் எவ்வளவுதான் போட்டியில் இறங்கினாலும் இலங்கையில் நடக்கக் கூடிய ஒரு போரில எதிரெதிர்த் தரப்புகளை ஆதரிக்கப் போவதில்லை. ஏனெனில், முடிவில், இலங்கை மீதான மேலாதிக்கம் இலங்கைத் தீவின் மீது அதிகாரம் செலுத்தக் கூடிய ஒரு ஆட்சியைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பது பற்றியதாகவே அவர்களால் காணப்படுகிறது.

எனவே இந்தியாவாலோ அமெரிக்காவாலோ அமைதி வற்புறுத்தப்படுவதும்

**பேச்சுவார்த்தையைக் குழப்பக்கூடாது எனக் கூறி இனப் போருக்கு காரணமான பிரச்சினைகளைப் பற்றி மௌனமாக இருக்க முடியுமா?**

போர் வற்புறுத்தப்படுவதும் இலங்கைத் தீவின் மீதான அதிகாரம் தொடர்பான பிரச்சனையே ஒழியத் தேசிய இனப் பிரச்சனையின் தீர்வு பற்றியதல்ல. எனவேதான், தேசிய இனப்பிரச்சனை இன்று இலங்கையின் அதி முக்கியமான பிரச்சனை என்பதை நமது நாட்டின் உள்விவகார கண்ணோட்டத்திலும் இப் பிராந்தியத்தில் அயல் மேலாதிக்க அரசியல் தொடர்பானதுமான அயல் உறவுகள் பற்றிய கண்ணோட்டத்திலும் நோக்க வேண்டியுள்ளது.

இன்று இந்த நாடு உலகின் பெரிய கடனாளி நாடுகளின் வரிசையில் உள்ளது. நாட்டின் உற்பத்தியில் கணிசமான பகுதி கடனை அடைக்கக் கூடச் செலவாகாமல் வட்டியைச் செலுத்தவே பயன்படுகிறது. இந்த நிலைமைகளின் கீழ் அந்நிய உதவி என்கிற பேரில் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காகத் தரப்படும் பல்வேறு கடன்களும் இந்த நாட்டை அந்நியர்கள் சூறையாடவே உதவுவதில் அதிசயமில்லை. இன்னமும் இந்த நாட்டின் பொருளாதாரத்தின் மீது நேரடியான அந்நிய ஆதிக்கம் பெருகி வருகிறது. இந்த நாட்டின் பாதுகாப்பின் பேரில் அயலார் தலையீட்டுக்கான ஏற்பாடுகள் அரசாங்கத்தாலேயே வலிந்து வரவேற்கப்படுகின்றன. எனவே தான், தேசிய இனப் பிரச்சினையின் தீர்வு பற்றிக் கவனம் செலுத்துகிற போது, அந்த உற்சாகம் நாட்டின் இறைமைக்கும், சுதந்திரத்துக்கும் உள்ள மிரட்டல்களைப் பற்றிக் கவனியாமல் இருப்பது, ஆபத்தானது. அன்று போரைக் காட்டி இந்நாட்டினுள் 'திறந்த' பொருளாதாரமும் தனியார் மயமாக்கலும் தாராளமயமாதலும் நுழைய விடப்

**திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் தொடர்கிறது. உயர் பாதுகாப்பு வலயங்களில் தமிழர்களது மீள் குடியேற்றம் தடுக்கப்படுகிறது.**

பட்டன. இன்று அமைதியின் பேரால் நாடு முழுமையான அடிமைத்தனத்தை நோக்கி நகரப் பார்க்கிறதா என்ற விடயம் நம் முழுமை யான கவனத்தை வேண்டி நிற்கிறது.

உள்நாட்டில் பாராளுமன்றத்தின் மூலம் தமிழ் மக்களுக்கு சுயநிர்ணயத்தின் அடிப்படையில் உண்மையான சுயாட்சியைப் பெற முடியுமா என்பது மிகவும் ஐயத்துக்குரிய விடயமே. பேச்சுவார்த்தைகளை மட்டுமன்றிப் போர் நிறுத்தத்தையே குழப்புகிற நோக்கில் மும்முரமாக இருக்கிற ஜே.வி.பி.யின் பாராளுமன்ற ஆசனங்களின் எண்ணிக்கையும் ஸ்ரீ.ல.சு.கட்சியில் உள்ள பேரினவாதிகளின் தொகையும் தங்கள் சுயநலத்துக்காக அமைதியான நியாயமான தீர்வைக் குழப்ப ஆயத்தமாக உள்ள தமிழ், முஸ்லிம் அரசியல்வாதிகளும் அரசியல் யாப்பை மாற்றுவதற்குத் தேவையான மூன்றிலிரண்டு பெரும்பான்மையை இலகுவாகவே மறுக்க இயலும். எனவே விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்குமிடையே தீர்வு பற்றிய உடன்பாடு ஏற்பட்டாலும் அதை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்ற கேள்விக்கு இன்னமும் தெளிவான பதில் இல்லை. யூஎன்.பி.யி.னுள்ளே உள்ள பேரினவாதிகள் தமிழ் மக்களின் சுயாட்சி பற்றி என்ன கருத்தைக் கொண்டிருக்கிறார்கள் என்பதை ஊகிப்பது கடினமில்லை. தேசிய இனப்பிரச்சனையின் தீர்வுக்கான தேடல் இன்னமும் தொடக்க நிலையிலேயே உள்ளது. போர் நிறுத்தத்திற்கு மேலாகப் பேரினவாதிகள் எவரும் எதையும் வேண்டுகிறார்களா என்பதுதான் நமக்கு முன்னுள்ள கேள்வி.

இன்றைய போர் நிறுத்தச் சூழலில் பலவேறு அசம்பாவிதங்கள் நடந்துள்ளன. அவற்றை விட முக்கியமாக யாரும் அறியாமலே திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் நடைபெறுகின்றன. இடம்பெயர்ந்த தமிழர்கள் தமது இருப்பிடங்கட்கு மீள்வது பற்றிப் பேசப்படுகிற அதேவேளை அவர்கள் மீள முடியாத சூழ்நிலையைப் பாதுகாப்பின் பேரால் ராணுவம் பேணி வருகிறது. மக்களால் தமது இருப்புக்குத் தேவையான குறைந்த பட்சப் பொருளாதார முயற்சிகளை மேற்கொள்ளவே கடுமையாகப் போராட வேண்டிய நிலைமையில் உள்ளனர்.

இன்று இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையில் பேரினவாதிகளின் இலக்குகள் ஐம்பது வருடங்கள் முன்பிருந்த விதமாக இல்லை. மொழி இன்று அவர்கட்கு ஒரு பிரச்சினை இல்லை. ஏனெனில் பேரளவில் தமிழ் அரச கரும மொழிகளில் நன்றாக இருந்தாலும் ஆங்கிலமும் சிங்களமுமே அரசோச்சுவது அவர்களும் ஏற்றுக் கொண்டுள்ள யதார்த்தம். அதை விடவும் சிங்களப் பேரினவாதம் ஏகாதிபத்திய எதிர்ப்பைக் கைவிட்டுப் பல ஆண்டுகளாகி விட்டது. மலையக மக்களின் வாக்குரிமையைப் பொறுத்தவரை. அவர்களில் பெருந்தொகையினரை நாடு கடத்தியாகி விட்டது. அவர்கள் செறிவாக வாழுகிற பகுதிகளில் அவர்களை ஒரு அற்ப சிறுபான்மையாக மாற்றுகிற முயற்சிகள் படிப்படியாக இடம்பெறுகின்றன. உத்தியோகங்களைப் பொறுத்தவரை இன்று சிறுபான்மைத் தேசிய இனங்களுக்கு விகிதாசாரப்படி கிடைக்க வேண்டியளவுக்கும் மிகக் கீழாகவே கிடைத்துள்ளது. கல்வித் துறையிலும் பெரிய சரிவு ஏற்பட்டுள்ளது. எல்லாவற்றிலும் முக்கியமாக. வடக்கு-கிக்குத் தமிழரில் மூன்றிலொரு பங்கினர் நாட்டை விட்டுப் போய்விட்டனர். அவர்களில் ஒரு சிறு பகுதியினரே திரும்பி வரக்கூடும். அதைவிட நாட்டுக்குள்ளே நடந்துள்ள இடப் பெயர்வின் பின் வடக்குக்-கிழக்கு மீளச் செல்லக்கூடியவர்களது எண்ணிக்கையும் பெரிதாக இராது.

தமிழரின் பாரம்பரியப் பிரதேசத்தில் உண்மையான சுயாட்சியை மறுப்பது இயலாத போது அதைப் பொருளற்றதாகவும் பொருளாதார அடிப்படையில் பலவீனமானதாகவும் மாற்றுவது பேரினவாதிகளது இலக்குகளில் முதன்மையானது. திட்டமிட்ட குடியேற்றங்களால் இழக்கப்பட்ட பிரதேசம் மீளுமா என்பதும் இன்னமும் தொடருகிற நிலப்பறிப்பைப் பின்வாங்கச் செய்ய முடியுமா என்பதும் முக்கியமான சவால்களாகவே உள்ளன. இவை அனைத்தினும் மேலாகக் கவலை தருவது ஏதெனில் இப் பிரச்சினைகள் பற்றிக் குரல் கொடுக்கத் தமிழ்த் தேசியத் தலைமைகளால் இயலாதிருப்பதே யாகும்.

அமைதிப் பேச்சுவார்த்தைகளைக் குழப்பும் என்ற காரணத்தால், ஒரு இன ஒழிப்புப் போருக்கே காரணமாக இருந்த பிரச்சினைகள் பற்றி நாம் மௌனமாக இருக்க முடியுமா?

இன்னொரு புறத்தில் அமைதிப் பேச்சுவார்த்தைகளில் தேசிய இனப்பிரச்சினையின் பிற பரிமாணங்கள் பற்றிய கவனம் முக்கியமானது. இன ஒழிப்புப் போரில் ஒரு முரண்பாடு மட்டுமே பிரதானமாகத் தெரிவதால் மற்றைய பிரச்சினைகள் முக்கியமற்றவை என்று கொள்ள முடியுமா?

முஸ்லிம்களையும் மலையகத் தமிழரையும் மொழி அடிப்படையில் வடக்குக்-கிழக்கில் உள்ள தமிழருடன் ஒரே தேசிய இனமாகக் கருதுவதன் அபத்தம் தமிழீழக் கோரிக்கை எழுந்த போது மட்டுமன்றி, அதற்கு முன்னரும் சுட்டிக்காட்டப்பட்டது. எனினும் தமிழ்த் தேசியவாதம் அதை ஏற்க ஆயத்தமாக இருக்கவில்லை. இன்று அந்த யதார்த்தம் கண்முன்னே நிற்கிறது. எனவே, அதை மறுக்க இயலாத போதும், அதை விளங்கிக் கொள்ளும் ஆற்றல் தமிழ்த் தேசியச் சிந்தனைக்கு இருக்கவில்லை. இதன் விளைவாகவே தமிழ்-முஸ்லிம் சமூகங்களிடையிலான முரண்பாடுகள் பகை முரண்பாடுகளாகத் தோன்ற நேர்ந்தது. இதைச் சரிவரக் கையாள்வது என்றால் தமிழ்த் தேசிய இனப் பிரச்சினைக்கு ஈடான தளத்தில் முஸ்லிம் தேசிய இனப் பிரச்சினையையும் வைத்து நோக்கும் மனப்பக்குவம் தேவை.

இன்று, முஸ்லிம்களின் தேசிய இன அடையாளம் பற்றியும் அவர்கள் எதிர் நோக்கும் இன

தொடர்ச்சி 10ம் பக்கம்..

படிப்பகம்

www.padippakam.com



# தமிழ் ஊடகங்கள் பற்றி (10)

## இணையத் தளச் சஞ்சிகைகள்

## மேட்டுக்குடிகளின் சமூக அரசியல் அக்கறைகளாலேயே ஆளப்படுகின்றன

கணனித் தகவற் பரிமாறல் வசதி மூலம் மின் மடல்கள் அனுப்பப்பட்டு வந்தன. அதன் பின்னர் தகவல்களை ஒரு இடத்தில் சேமித்துப், பலரும் பெறக் கூடிய விதமான வசதிகள் உருவாயின. இவ்வாறு தகவல்களைத் திரட்டி வைக்கும் இடம் வெப் சைற் எனப்படும் இணையத் தளமாகும். அதை அமைக்கவும் பரவலாய்ப் பெறவும் பாவிக்கப்படும் முறை இன்றர் நெற் எனப்படும் மின்வலைப் பின்னலாகும்.

மேற்குறிப்பிட்ட முறை மூலம் பல வகையான தகவல்களை வழங்கும் மின் தளங்கள் உருவாயின. இன்று மேலை நாடுகளில் மின் தளங்கள் மூலம் பல்வேறு வணிக நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. செய்தி ஏடுகள் தமது பத்திரிகைகளில் உள்ள முக்கியமான தகவல்களை இணையத் தளங்களில் பரவலான வாசிப்புக்காக வைக்கின்றன. பல்வேறு சஞ்சிகைகளும் இதைப் பயன்படுத்து கின்றன. நமது பிரதான ஆங்கில, தமிழ், சிங்கள நாளேடுகள் இணையத் தளத்தில் தமது பக்கங்களை வெளியிடுகின்றன. பத்திரி கைகளின் பக்கங்கள் கணனியால் வடிவமைக்கப்படுவதால் இணையத் தளத்தில் அப் பக்கங்களை வைப்பதில் மேலதிக சிரமம் அதிகமில்லை. இணையத் தளத்தைப் பேணுவதற்கு ஆகும் செலவும் பெரிய நிறுவனங்கட்கு மிக அற்பமானதே.

ஐரோப்பிய நாடுகளில் சிறு சஞ்சிகைகள் நடத்தியவர்களும் இணையத் தளத்தில் பல சஞ்சிகைகளை நடத்தி வந்துள்ளார்கள். அதுபோல, அரசியல் செய்திப் பரிமாற்றத்துக்கான இணையத் தளச் சஞ்சிகைகள் கடந்த பத்தாண்டு கட்கும் மேலாகப் பெருமளவில் இயங்கி வருகின்றன. தமிழ் இணையத் தளச் சஞ்சிகைகளைப் பொறுத்தவரை. அவற்றுட் பெருவாரியானவை. புலம் பெயர்ந்த ஈழத் தமிழர்களாலேயே நடத்தப்படுகின்றன. அவற்றில் தமிழ்த் தேசிய அரசியல், விடுதலைப் போராட்ட அரசியல் தொடர்பான விடயங்களே முதன்மை பெறுவதில் வியப்பில்லை.

அதேவேளை, இணையத் தளத்தில் இலக்கியச் சஞ்சிகைகளை வெளியிடு கிற முயற்சிகளும் நடைபெறுகின்றன. இந்த முயற்சிகள் ஏற்கெனவே இணையத் தளத்தைப் பாவிக்கிற வணிகச் சஞ்சிகைகளுடன் போட்டியிட வேண்டியுள்ளது. வணிக அடிப்படையில் தமிழ் இணையத் தளச் சஞ்சிகைகள் அதிகளவில் வெற்றி பெறுவதற்கு அவற்றுக்கு விளம்பர அனுசரணை தேவை. ஆங்கில வழி இணையத் தளச் சஞ்சிகைகட்கு உள்ள விளம்பர வலிமை தமிழ் இணையத் தள ஏடுகளுக்கு இல்லாமைக்கு வாசகர்களது எண்ணிக் கைக் குறைவு ஒரு முக்கிய காரணம்.

இணையத் தளச் சஞ்சிகைகள் ஆங்கி லத்திலோ வேறு எந்த மொழியிலோ இதுவரை அச்சில் வருகிற ஏடுகளுக்கு ஒரு மாற்று அல்லது போட்டியாக இல்லை என்பதை நாம் கவனிக்க வேண்டும். பிரபல நாளேடுகளும் சஞ்சிகைகளும் இணையத் தளத்தில் வருவதால் அவற்றின் விற்பனை பாதிக் கப்படுவதில்லை. இணையத் தளத்தில் இந்த ஏடுகளை ஒழுங்காக வாசிப்போர் தொகை ஒப்பிடுகையில் சிறிது. அதை விட இணையத் தள மூலம் இயங்குவ தால் இந்த ஏடுகள் தமது தொடர்பு களை விரிவுபடுத்திக் கொள்கின்றன. அனைத்திலும் முக்கியமாக, ஏடுகளின் வருமானம் விற்பனையை விட விளம் பரத்தின் மீதே தங்கியுள்ளது. எனவே எத்தனை பேரிடம் ஒரு குறிப்பிட்ட ஊடு போகிறது என்பதை வைத்தே அதன் விளம்பர வருமானம் அமைகிறது.

தென்னாசியச் சூழலில் உள்ள முக்கிய மான வேறுபாடுகளை நாம் கருத்திற் கொள்ள வேண்டும். மேலைநாடுகளில் கிட்டத்தட்ட ஒவ்வொரு வீட்டிலும் அல்லது இரண்டு வீடுகளுக்கு ஒன்றி லாவது கணனியுண்டு. இணையத் தளங்களைப் பார்ப்போரின் எண்ணி க்கை அந்த விகிதாசாரத்துக்கு ஏற்ப அதிகமாக இருக்கும். தொலைபேசி மூலமே இணையத் தொடர்பு ஏற்படுத் தப்படுகிறது. பல இணையத் தொடர்பு நிறுவனங்கள் தமது மாதாந்தக் கட்ட ணத்தினுள் இலவச தொலை பேசித் தொடர்பையும் உள்ளடக்கு கின்றன. எனவே மாதம் 1000-1500 ரூபாவுக்குள் இணையத் தளத்தை வரையறையின்றிப் பாவிக்க முடியும். இத்தொகை சராசரி ஐரோப்பிய மாத வருமானத்தில் ஒரு சிறு பகுதியே. இது தொலைக் காட்சிக் கட்டணத்திலும் குறைவு.

நமது சூழலில் எத்தனை வீடுகளில் கணனி இருக்கிறது? பெரும்பாலான வர்கள் அலுவலகங்களிலும், வணிக நிறுவனங்களிலுமே கணனியைப் பயன் படுத்துகின்றனர். மாதத்துக்கு 20,000-30,000ரூபாவுக்கு மேலே வருமானம் உள்ளவர்கட்குப் பெரிய குடும்பச் செலவு இல்லாது போனால் மட்டுமே கணனி வைத்திருக்கவும் இணையத் தொடர்பைப் பேணவும் இயலுமாக இருக்கும். இவர்களுள் எத்தனை பேர் தமிழிற் செயற்படுகிறவர்களாக இருக்கின்றனர்? எனவே இணையத் தளங்கள் சில நூறு ஆர்வலர்கட்கு அப்பால் யாரையும் ஒழுங்காகச் சென்ற டையும் வாய்ப்பே இல்லை. எனவே இணையத் தளச் சஞ்சிகைகள் ஆர்வலர்கள் நடுவே மட்டும் இயங்கு மளவுக்கு வரையறைக்கப்படுகின்றன. இன்னொருபுறம், கணனி, தொலைபேசி வசதிகளும் போதிய வருமானமும் உள்ளவர்கள் மட்டுமே பயன்படுத்தக் கூடிய ஒரு ஊடகமாக இணையத் தளத் தமிழ்ச் சஞ்சிகைகள் ஒடுங்கிவிட நேரிடுகிறது. எனவே இவை நடுத்தர. உயர்-நடுத்தர வர்க்க அக்கறைகளைச் சார்ந்து இயங்குவது தவிர்க்க இயலாது போகிறது. இந்தத் தன்மையை இணை யத் தளத் தமிழ் இலக்கியச் சஞ்சிகை களின் உள்ளடக்கத்தைப் பார்க்கும் போது தெளிவாகவே காண இயலும்.

**எந்தவொரு கருவியும் எந்த வர்க்கத்தின் ஆளுமைக்கு உட்பட்டு இருக்கிறதோ அதுவே அதன் பயனை நிர்ணயிக்கிறது.**

நமது செய்தி ஏடுகளின் ஞாயிறு சஞ்சிகைகளில் சினிமா போன்ற விடயங் களுக்கு முக்கியம் வழங்குவது போல இந்தச் சஞ்சிகைகளிலும் பொழுது போக்கு அம்சங்கள் முக்கியப்படுத்தப் படுகின்றன. இச் சஞ்சிகைகளுக்குப் பங்களிக்கப்போகும் உயர்-நடுத்தர வர்க்கச் சமூகத்தினராக அல்லது அந்த வர்க்க ரசனைக்கு உட்பட்டவர்களாக இருப்பதால் பழமைவாத, மரபுசார்ந்த சிந்தனைகளும் முக்கியத்துவம் பெறு கின்றன.

தேசபக்தன்

இன்னொருபுறம் இணையத் தளங்கள் மூலம் தமிழ் இலக்கியங்களைப் பரவலாக்கும் முயற்சி என்ற பேரிலும் இணையத் தளப் பல்கலைக்கழகம் போன்ற பேர்களிலும் சமகாலச் சிந்த னைகளைப் புறந்தள்ளிப் பழமைக் குள்ளேயே தேடல்களை நிகழ்த்துகிற போக்கையும் நாம் காணலாம்.

எனவே தமிழில் மின் தகவற் தொடர்பு கள் தமிழ் மக்களைப் பொறுத்தவரை. மேட்டுக்குடிகளின் சமூக-அரசியல் அக்கறைகளாலேயே ஆளப்படுகின்றன. இதற்கும் இந்த மின் ஊடகங்களை ஏகாதிபத்திய உலகமயமாக்கலுக்கு எதிரான போராட்டத்தில் வெகுசனங் களிடையே தொடர்புகளை உருவாக்கி அணி திரட்டப் பாவித்த அமெரிக்க ஐரோப்பிய சூழல்களுடன் ஒப்பிடும்போது நமக்குப் புலனாவது என்ன?

எந்த ஒரு கருவியும் எந்த வர்க்கத்தின் ஆளுமைக்கு உட்பட்டு இருக்கிறதோ அதுவே அதன் பயனை நிர்ணயிக்கிறது. புலம்பெயர்ந்த தமிழரிடையே தமிழ் இணையத் தளங்கள் குறுகிய காலத்தில் முற்போக்கான அரசியல் சிந்தனைகளைப் பரிமாறப் பயன்படக் கூடிய சூழல் உருவாகாலாம். அது அங்கு ஏற்படக்கூடிய சமூகச் சூழல் மாற்றங்களைப் பொறுத்தது.

நமது சூழலில் தமிழ் இணையத் தளங்கள் மூலம் பரந்துபட்ட மக்கள் பெறக் கூடியது சிறிதே. அதனால் அவற் றை யாரும் பகிஷ்கரிக்க வேண்டிய தில்லை. எவ்வாறு தகவல் களைப் பெற அயல் மொழி சஞ்சிகை களைப் பயன்படுத்துகிறோமே அவ்வாறே இங்கு கிடைக்காத சில தகவல்களைப் பெற அவை உதவலாம். அந்தப் பயனுக்கும் வெகுசனப் பயன்பாட்டுக்கும் இடையே இடைவெளி மிகுதி.

---

# யாழ்ப்பாணமும் நீர்வளமும்

## யாழ் குடா நாடு பாலைவனமாகுமா?

நிலநீர் ஆய்வாளர் க. நடனசபாபதி

## நிலநீர் பற்றிய அறிவும் நடைமுறையும் பேணப்படல் வேண்டும்.

பிராணிகளை வேட்டையாடி மகிழும் ஒருவனை நண்பர் ஒருவர் யாழ்ப்பா ணத்தி லுள்ள தமது வீட்டுக்கு அழைத் தார். வேட்டைப்பிரியர் கேட்டார்- உங்கள் பிரதேசத்தில் சிங்கம், யானை ஆகியவை உண்டா என்று. நண்பர் பதில் அளித்தார்- ஆம் ஆம் இரண்டுமே நிரம்ப உள்ளது எங்கள் ஊரில். வீரசிங்கம், துரைசிங்கம், தெய்வயானை, யானைமுகன் என்று அநேகமுண்டு. வந்து பாருங்களேன் என்றார்.

வேறொரு மலையக ஆசிரியர் ஒருவரை யாழ்ப்பாணத்துக்கு அழைத்தபோது கேட்டார். உங்களுரில் மலைகளே இல்லையே நான் எப்படி அங்கு மகிழ்ச்சி யுடன் வாழ்வேன்? என்று. யாழ்ப்பாண வாசி பெருமிதத் துடன் கூறினார். நீங்கள் அங்கு மலை களில்லை என்று கேலி செய்கிறீர்கள். நீங்கள் அங்குள்ள கீரிமலை, சுதுமலை, கம்பர்மலை, ஆகியவற்றைப் பற்றியெல்லாம் கேள்விப் படவில்லையா? கடல் மட்டத்தை விட உயரமான நிலமட்டபூமி இம் மலை களைக் காட்டிலும் உயரமாய் உள்ளது. தெல்லிப்பழைப் பிரதேசம் கடல் மட்டத்தி லிருந்து சுமார் 40அடி உயரத்தி லுள்ளது. இம்மலைகளோ இவ்விடத் தைக் காட்டிலும் தாழ்ந்தவையே. இதே போலவே கட்டைக்காடு. மணற்காடு என்ற பெயர்களில் காடுகளும் உண்டு. காடுதானோ என நம்பிச்சென்றால் ஏமாற்றமே மிஞ்சும்.

இதைப்போலவே ஆறு என்ற பெயரிலும் சில ஆறுக்ள் யாழ்ப்பாணக் குடா நாட்டில் காணப்படுகின்றன. தொண் டைமனாறு, உப்பாறு, வழுக்கையாறு என்பன. மாரிகாலங்களில் இவற்றில் நீரைக் காணலாம். கோடைக் காலங்களில் பெரும்பாலும் வெட்ட வெளியாகக் காட்சி தரும்.

தொண்டைமனாறு

தொண்டைமான் என்னும் மன்னன் வடகிழக்குப் பருவ மழைக்காலத்தில் மீன்பிடி வள்ளங்கள் பெருங்காற்றுக்கு இலக்காகி அடித்துச் சென்றுவிடு வதைத் தடுக்குமுகமாக வடக்கிலிருந்து வாய்க்கால் ஒன்றை வெட்டிவிட்டார். இதனால் கடல் நீர் நிலப்பகுதிக்குள் நுழைந்து வல்வை வரை உப்பு விளையும் உவர் நிலமாக மாறிவிட்டது.

உண்மையில் தொண்டைமானாறு என்பது ஆழியவளைப் பிரதேசத்தில் மாரிகாலத்தில் பெய்யும் மழைநீரானது, மருதங்கேணி, செம்பியன்பற்று, நாகர் கோவில், அம்பன்குடத்தனை வழியாக பருத்தித்துறை-கொடிகாமம் பாலம் வழியாக ஓடி, மன்டான், வல்லை ஊடாகக் கடலை அடைகிறது. இதனை ஆறு என்பதைக் காட்டிலும் ஒரு வெள்ள வாய்க்கால் என்று அழைப்பது பொருந்தும்.

உப்பாறு

கப்புதூ என்னும் மேட்டு நிலத்திலிருந்து மட்டுவில்-புத்தூர் வீதியிலிருக்கும் வண்ணாத்திப் பாலம் ஊடாக புத்தூர். நீர்வேலி, கோப்பாய் வழியாக ஓடி. கைதடி- கோப்பாய் பாலத்தின் வழியாக குடா நாட்டின் தென்புறத்திலுள்ள கடலில் கலக்கிறது. இதுவும் ஒரு வெள்ள வாய்க்காலாகவே கருதலாம். தொண்டைமானாறும் உப்பாறும் யாழ்ப்பாணக் குடாநாட்டின் பெரும் பகுதியை ஆக்கிரமித்துள்ளன.

தொண்டைமானாறு. உப்பாறு ஆகிய வற்றின் ஊடாக கடல்நீர் கோடைக் காலங்களில் உள் நுழைகிறது. இதனைத் தடுக்க வேண்டும் என்கின்ற யோசனை பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே அன்று வாழ்ந்தவர்கள் உள்ளங்களில் உதயமாயிற்று. இது 1948ம் ஆண்டு செயல்திட்டத்திற்கு வந்தது. தொண்டை மானாற்று அருகேயும் நாவற்குழி அருகேயும் கடல்நீர் தடுப்பு ஏற்பாடுகள் காட்டப்பட்டன. தொண்டைமானாற்று தடுப்பு முகாம் கதவுகள் அமைக்கப்பட்டு கோடை காலம் முழுவதும் மூடிய நிலை யிலே வைத்திருக்க வேண்டும் எனப் பொறியியலாளராலும் நீர் முகாமைத்துவ வல்லுநராலும் அறிவுறுத்தப்பட்டது.

தொண்டைமானாறு தடுப்புப் பாலத்தின் விவரங்கள்

நீரேந்து பகுதியின் பரப்பளவு 11.5. ச. மைல் பாலத்தின் நீளம் (முழுமையாக) 613 அடி நிரந்தரத் தடுப்பு.

நீளம்-200அடி
கதவின் கீழ்மட்டம் - 250 அடி கடல் மட்டத்திற்கு மேல்.
மேல்மட்டம் - 4.00 அடி கடல் மட்டத்திற்கு மேல்
கதவுகள் 18

கதவுகளின் பரிமாணம் 20' ஒ 4'

இதனை அமைக்க 1948ஆம் ஆண்டு ஏற்பட்ட செலவு ரூ. 11 லட்சம்.

உப்பாறு அல்லது தென்பகுதி உப்பேரி மீது நாவற்குழியில் அமைக்கப்பட்ட உப்புநீர் (கடல் நீர்) தடை ஏற்பாட்டின் விவரங்கள் வருமாறு - இது ஏ9 பாதையில் யாழிலிருந்து நீரேந்து பகுதி -8.5 ச. மைல். கதவுகள்.

மரக்கதவுகள்-10 மற்றக்கதவுகள் -32

இந்த இரு உப்புநீர் தடுப்பு ஏற்பாடு களால் யாழ்க்குடாநாட்டு பெரும்பகுதி கடல்நீர் உட்புகுவதிலிருந்து தடுக்கப் பட்டது.

ஆனையிறவு உப்பேரி

இது ஏ9 பாதையில் யாழ்ப்பாணத்திற்கு 30 மைல் தென்கிழக்கில் அமைந் துள்ளது. தென்மேற்குப் பருவக்காற்று மழையின் போது மேற்குப் புறமாகக் கடல்நீர் நுழைந்து உவர்த்தன்மை யடைகின்றது. வீதிப்பாலம் (ஏ-9) ஒரு புறமாகக் கடல்நீர் நுழைவதைத் தடுத்து நிறுத்துகிறது. பெருமளவு கடல் நீர் இப்பிரதேசத்திற்குக் கிழக்குப் புறமாக உட்புக சுண்டிக்குளம் என்னும் இடம் காரணமாக இருக்கிறது. இதனைத் தவிர்க்க சுண்டிக்குளத்தின் குறுக்கே கடல்நீரை புகவிடாது தவிர்க்க தடை முகாமொன்றை நீர்பாசனத் திணைக் களம் அமைத்துள்ளது. இவ்விரண்டு தடை ஏற்பாடுகள் சரிவர இயங்கினால் ஆனையிறவுப் பிரதேசம் நன்னீர் கொண்டபகுதியாக மாறும்.

கிழக்கே கட்டப்படும் உப்புநீர் தடுப்பு ஏற்பாடு அவ்வப்போது சரிந்து விழுவ தால் எதிர்பார்த்த பலன் கிடைக்காது போய் விடுகிறது. இது ஒரு பரிதாபமான நிலைமையாகும்.

இப்பகுதியில்தான் இராணுவம் பொலிஸ் நிரந்தர சோதனை முகாமை நெடுங் காலங்களாக அமைந்திருந்தமையால் பொது மக்கள் இந்நன்னீரைப் பயன் படுத்தி விவசாயத்தைத் தம் தொழிலாக மேற்கொள்ளவில்லை. இதன் காரண மாக இப்பகுதி விளை நிலம் தரிசு நிலமாகவே மாறிவிட்டது.

யாழ்ப்பாணக் குடாநாட்டு நன்னீர் ஏரித்திட்டம் நீரியல் அறிஞர்கள் ஆனையிறவு நன்னீரை முள்ளியான் கால்வாய் மூலம் தொண்டைமானாறோடு ஆழிய வளைக்கு இணைத்து விடுவதனால் தொண்டைமானாறு நன்னீர் ஏரியாக மாறிவிடும் என நம்பப்படுகிறது. இதற்கான ஏற்பாடு மேற்கொள்ளப் பட்டது. இந்த ஏற்பாடுகளுக்குப்பின் நன்னீர் ஏரியாகத் தொண்டைமானாறு மாறிவிட்டால் இந்நீரைக் கொண்டு செம்பியன்பற்று, நாகர்கோவில் அம்பன் குடத்தனைப் பகுதிகளில் கூடி வாழும் விவசாயிகளுக்குப் பயன்படும் முறையில் நீரை இறைக்க 18 காற்றாடிப் பொறிகளை பொருத்தவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. உவர்நீர் பாய்ந்து வந்த இந்த உப்பேரியில் புதிய ஏற்பாடுகளுக்குப் பிறகு நன்னீரில் வாழும் உயிரினங்களும் தாவரங்களும் படிப்படியாகத் தோன்ற ஆரம்பித்தன. இதனைக் கண்ணுற்ற இப்பிரதேச உயிரியல், இரசாயன, தாவரவிலயல், பௌதிகவியல் ஆசிரியர்கள் மாணவர் களுக்கு வெளிக்கள அறிவூட்டும் நோக்குடன் உயர்வகுப்பு விஞ்ஞான மாணவர்களை அழைத்துக்கொண்டு ஓகஸ்ற், டிசெம்பர் ஆகிய இரு மாதங்களிலும் தொண்டைமானாறு வல்லை நாகர்கோவில் பகுதிகளில் முகாமிட்டு நீர், உயிரினம், தாவரங்கள் ஆகியவற்றின் மாதிரிகளை எடுத்துக் கொண்டு தொண்டைமானாற்று நடமாடும் சோதனைக் கூடத்தில் ஆய்வுகளை மேற்கொண்டனர். இப்பணியை ஆண்டுதோறும் மேற் கொண்டு வந்தனர். தொண்டை மானாறு ஆற்றுப் படுக்கையில் சோதனைக் கூடமொன்றையும் தங்கும் விடுதியொன்றையும் ஆசிரியர்கள் அமைத்தனர். இதற்கு தொண்டை மானாறு 'வெளிக்கள நிலையம்' என்ற பெயரில் ஒன்றைத் துணிவுடன் தமது சொந்தப் பணத்திலிருந்தே அமைத்துக் கொண்டனர். இந்நிகழ்வு தென்னி லங்கை விஞ்ஞான

தொடர்ச்சி 10ம் பக்கம்

படிப்பகம்

www.padippakam.com



# எல்லாம் உலகமயம் IV

## உலகமயவாக்கம் சில கேள்விகள்

- ஐ. ஐ. ஓ. -

"உலகமயம்" என்ற சொற்சேர்வையைப் பார்க்கும்போது, அது மிகவும் அப்பாவித்தனமான ஒன்று என்று தோன்றும். "எல்லாரும் இன்புற்று இருக்க நினைப்பதுவே.·.அல்லாமல் வேறொன்று அறியேன் பராபரமே" என்றுதான் பராபரக் கண்ணி பாடிய தாயுமானவரும் சொன்னார்.

எல்லாரும் என்றால், யார் யார்? உலகிலுள்ள யாவரும் என்ற கருத்தையும் நாம் அந்தச் சொல்லுக்குக் கொடுக்கலாம். உலகு தழுவிய இந்த நோக்குத்தான், நாகரிகம், பண்பாடு, சால்பு என்றெல்லாம் பேசப்படுகிறது.

"தாம் இன்புறுவது உலகு இன்புறக் கண்டு.·.காமுறுவர் கற்றறிந்தார்" என்று வள்ளுவரும் பாடுவார்.

இங்கு உலகு அல்லது உலகம் என்பது, கல்லாலும் மண்ணாலும் காற்றாலும் கடலாலும் ஆன வெறும் சடப்பொருட் சேர்ப்பைத்தானா குறிக்கிறது?

இல்லை. அந்தச் சேர்மானத்துக்கு அப்பால், அதனோடு ஒன்றாகியும் வேறாகியும் உடனாகியும் மலர்ந்துள்ள உயிரினங்களையும் உலகு என்ற சொல் குறிக்கிறது. அந்தப் படிமலர்ச்சியின் சிகரமாய் மிளிரும் மனிதகுலம் முழுவதையும்கூட, உலகு என்னும் பதம் குறித்து நிற்கிறது.

உலகு இன்புறக் காண்பது என்றால் என்ன? ஒவ்வொரு மனிதப் பிறப்பும் ஏனையோரால் மதிக்கப்படாமல், ஏனையோரால் உழக்கப்படாமல், ஏனையோரால் ஒடுக்கப்படாமல், ஏனையோரால் வதைக்கப்படாமல், வாழ வேண்டும் என்ற நிலைப்பாடு மனிதகுல நாகரிகம் பிறப்பித்துத் தந்துள்ள உயரிய இலட்சியம்; உயர்வற உயர்ந்த குறிக்கோள்.

உலகு இன்புறக் காணுதல் என்பது மனித மாண்பு என்ற பண்பாட்டு நிலையின் மணிமுடி. இதனை நாம் "உலகியம்" என்று கூறலாம்.

உலகியம் உயர்ந்த அறம். தலைசிறந்த சிந்தனையாளர்கள் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு விதத்திலே, இந்த அறத்தின் மகத்துவத்தைக் கண்டறிந்திருக்கிறார்கள்; அடையாளம் காட்டியிருக்கிறார்கள். இந்த அறம் பரவலாக உணர்ந்து போற்றப்படுமானால், அது எவ்வளவோ நல்லது. "ஒரு பொல்லாப்பும் இல்லை" என்ற சூழ்நிலை தோன்றிவிடும். நாகரிகம், பண்பாடு என்னும் மகோன்னதங்களுக்கிடையிலே நாம் நடமாடலாம்.

ஆனால், இது சுலபமாக நடந்தேறக்கூடிய காரியமா? இல்லை.

அண்ணாந்து கொட்டாவி விட்டபடி, இரவு முழுவதும் கண்ட நெடுங்கனவின் குறைகளைப் பகல் முழுதும் நினைத்து நினைத்துப் பரவசப்படும் வசதி படைத்த பாக்கியவான்கள் வேண்டுமானால் வெற்றுக் கற்பனைகளை அசைபோட்டுக் கொண்டு ஆனந்த வெள்ளத்தில் அமிழ்ந்து போகலாம்; அல்லது நீச்சலடித்தும் சுழியோடியும் திளைத்துப் பூரிக்கலாம்.

வசதி குறைந்த சாமானியமான "மனிதப் பிறவிகள்" என்ன செய்யலாம்? அப்படிப்பட்ட பிறவிகளாகத்தான் நம்மிற் பலரும் உள்ளோம்!

ஏன் இந்தத் திண்டாட்டம்? ஏன் இந்த வில்லங்கங்கள்? ஏன் இந்தச் சூடும் புழுக்கமும்? ஏன் இந்த வதைப்பும் வதங்கலும்? ஏன் இந்தச் சுழற்சியும் உழற்சியும்? ஏன் இந்த அந்தரிப்பும் அங்கலாய்ப்பும்?

காரணம் வேறொன்றும் இல்லை. நாம் யார் என்பதை நாம் மறந்துவிட்டோம். நாம் எப்படிப்பட்டவர்கள்? எங்கள் பூர்வீக வரலாறு என்ன?

நம்மைப் பாத்திரங்களாக்கி நடந்துகொண்டிருக்கும் அவல நாடகக் காட்சிகளின் பூர்வகதைதான் என்ன?

பூர்வகதை

இப்படி எல்லாம் கேட்டால், நவீனப்பின்னியத்தைக் கொண்டாடும் அன்பர்கள் கோபித்துக் கொள்வார்கள். நாம் கற்பனையானதொரு பெருங்கதையாடலில் மூழ்கிக் கிடக்கிறோம் என்று உபதேசம் பண்ணுவார்கள். "சரித்திரம் என்பதோர் சாகாத் தொடர்கதை" என்னும் சிந்தனை வெறும் கற்பனைக் கட்டுமானம் என்று சொல்லித் தருவார்கள்.

ஆனால், அந்த அன்பான அறிவுசீவிகளின் கோபத்துக்குப் பயந்து, அல்லது அவர்களின் சீற்றங்களை ஒரு பொருட்டாக மதித்து, எங்கள் பொதுமதிகளையும் கண்கூடான அனுபவங்களையும் அப்படியே தூக்கி வீசிவிடலாமா?

கூடாது, கூடாது. அப்படியானால், கேள்விக்கு என்ன விடை? நம் பார்வைக்கு என்ன பதில்?

"குரங்கிலிருந்து பிறந்தவன் மனிதன்" என்று பாடுவது, ஒருவேளை, நம் தற்பெருமையைப் பாதிக்கும் முரட்டுத்தனமான கூற்று என்று நாம் ஒதுக்கிவிடலாம். அதேவேளை, நியாயமான (சான்று) கண்கூடு நிறுவப்பட்ட உண்மைகளைப் புறக்கணிப்பது குருட்டுத்தனம் அல்லவா?

பூனை கண்ணை மூடிக்கொண்டால் பூலோகம் எல்லாம் இருண்டு போகுமா, என்ன? இல்லைத்தானே! ஆனபடியால், நாம் கண்களை அகலத் திறந்து, பார்த்தால், பச்சைப்படியான உண்மைகள் சில நமக்கு முன்னே முழிப்பாகப் புலப்பட்டுத் தெரியும். அந்தப் பச்சை உண்மைகள் எவையெவை?

முதலாவது: மனிதர்களும் விலங்குகளும்;

இரண்டாவது: விலங்குகளும்உயிரினங்களே:

மூன்றாவது: உயிரினங்களின் பரிமாணம் அல்லது படிமலர்ச்சி

"வல்லது வெல்லும்" என்னும் அச்சியத்தின் (axiom) அடிப்படையில் நிகழ்வதே.

அறிவியல் ஆய்வுகளும் வரலாற்றுப் பொருளியச் சிந்தனைகளும் தெளிவுபடுத்தியுள்ள "பச்சை உண்மைகளிற் " சில, இவை.

"வல்லது வெல்லும்" என்ற கூற்றின் கருத்து என்ன?

எந்த உயிரினம் தன் சூழலுக்குத் தன்னை இசைவுபடுத்திச் சமாளிக்கும் வலிமையைப் பெற்றுள்ளதோ, அந்த இனம்தான் தப்பிப் பிழைக்கும் சங்கதி, ஒன்றும் பஞ்சு மெத்தையிற் படுத்து நித்திரை கொள்ளும் சமாச்சாரம் அல்ல. எதிர்ப்படும் சவால்களைத் தகுந்த முறையிற் கையாளும் செயல்வழி அது.

வேறொரு விதத்திலும் இதனை நாம் எடுத்துக் கூறலாம். குட்டக் குட்டக் குனிந்து போகும் உயிரினங்கள் கால கதியிலே வளைந்து சுருங்கி மடிந்துபோகும்; அருகி அருகிஅற்று ஒழிந்துபோகும். எனவே, பாதகமான சூழல்களை எதிர்கொண்டு வென்றுதான், ஆரோக்கியமான-வெற்றிகரமான-உயிரினங்கள் நீடித்து வாழ்கின்றன.

இதனை, நாம் பின்வருமாறும் விளங்கிக் கொள்ளலாம். "தன்னலம் கூடாது; பிறர் நலம் பேணுவதே உயர் பண்பு" என்ற சூத்திரத்தைக் கூட, நாம் கண்மூடித்தனமாகப் பிரயோகிப்பது புத்தியாகாது. இம்மியளவேனும் மற்றவர்களுக்குத் தீங்கு விளைவிக்காமல் இருப்போம் என்று தீர்மானித்து முயல்வோமானால், சிற்சில வேளைகளில், நாம் தோற்றுப்போய்விட நேரலாம்.

அப்படியானால், நாம் செய்யத்தக்கது எது? ஒரு திருப்திகரமான நிலைப்பாட்டை நாம் எப்படி வகுத்துக் கொள்ளலாம்? முயன்று பார்ப்போம்.

அந்த நிலைப்பாடுகள் அல்லது நியமங்கள் பின்வருமாறு அமையக்கூடுமா என்று பார்ப்போம்:

ஏனைய உயிரிகளுக்கு குறைந்த பட்ச பாதிப்பை மாத்திரமே தரும் செயல்கள் ஏற்கத் தக்கவை- அவை ஒரு குறிப்பிட்ட உயிரின் இருப்புக்கு இன்றியமையாதவையாக இருக்குமானால்:

பரிமாணப் படிநிலையில் ஒரே தரத்தில் உள்ளவர்களான மனிதர்கள் ஒருவரை ஒருவர் பகைத்து வென்றடக்குகிற அல்லது வென்று ஒழிக்கின்ற நிலைமை விலக்கத்தக்கது:

உயிர் தரிப்பதன் பொருட்டுச் சிற்சில தீங்குகளைச் செய்துதான் ஆகவேண்டும் என்றால், சம்பந்தப்பட்ட உயிரினங்களிடையே அதிகபட்சமான பரிணாமப் படிநிலை வித்தியாசம் இருப்பது விரும்பத்தக்கது-நண்பர் ஒருவரின் கழுத்தை அறுப்பதைவிட நுளம்புகளை அடித்துக் கொல்வது பரவாயில்லை.

தொடர்ச்சி 11ம் பக்கம்...

# இலங்கை இனப்பிரச்சினையில்

## சர்வதேசத் தலையீடு வரையறை உள்ளதாக இருக்க வேண்டும்.

### சமாதான முயற்சிகள் பற்றி

கம்யூனிஸ்ட்டுக்கள் போரை எதிர்ப்பவர்கள் நானும் கம்யூனிஸ்ட் என்பதால் போரை எதிர்க்கிறேன். சமாதான பேச்சுவர்த்தைகளின் மூலம் இலங்கை மக்களின் பிரச்சினைகளுக்கு ஏற்றுக் கொள்ளக் கூடிய நியாயமான தீர்வு கிடைப்பதற்கும், யுத்தம் நிரந்தரமாக நிறுத்தப்படுவதற்கும் ஏற்ற சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகவே நம்புகிறேன். அதேவேளை இன்றைய சர்வதேச சமூகம் எனப்படுவது மேலாதிக்கம், ஏகாதிபத்திய உலகமயமாதல் என்பவற்றை அடிப்படையாக கொண்டிருப்பதனால் சர்வதேச சமூகம் என்பதன் அங்கீகாரம், தலையீடு அதன் பங்களிப்பு என்பன இலங்கை வாழ் சகல தேசிய இனங்களுக்கும் இலங்கை நாட்டிற்கும் எல்லா விதத்திலும் நன்மை தருவனவாக அமையப்போவதில்லை என்ற எச்சரிக்கையை விடுக்க விரும்புகிறேன். இலங்கையின் இனப்பிரச்சினையில் சர்வதேச சமூகம் எனப்படுவதன் ஈடுபாடு தவிர்க்க முடியாமல் ஏற்பட்டிருப்பினும் அதன் வரையறைகளை இலங்கை மக்களே தீர்மானிக்க வேண்டும். இலங்கையின் இனப்பிரச்சினை உட்பட எல்லா விடயங்களையும் தீர்மானிக்கும் பொறுப்பை அச்சமூகத்திடம் விட்டுவிடக் கூடாது.

இவ்வாறு நோர்வே தொழிலாளர் கம்யூனிஸ்ட் கட்சியின் (ஏ.கே.பி.) வெளிவிவகாரங்களுக்கு பொறுப்பான தோழியர் ரூனா மரியா பிபரிக் புதியபூமிக்கு விடுத்த விஷேட செவ்வியில் தெரிவித்துள்ளார்.

புதிய-ஜனநாயகக் கட்சியின் அழைப்பை ஏற்று இலங்கைக்கு வந்திருந்த அவர் "இலங்கையின் இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தையின் மூலம் அரசியல் தீர்வு காணபபட வேண்டும் என்று வலியுறுத்தி அதற்கான வாழ்த்துக்களையும் தெரிவிக்கும் அவரது கட்சியின் ஒத்துழைப்பு செய்தியை இங்கு கொண்டு வந்திருந்தார்.

வடக்கு, தெற்கு, மலையகம் உட்பட இலங்கையின் பல பாகங்களுக்கும் விஜயம் செய்த அவர் எமது நாட்டு நிலைமையை தெரிந்து கொண்டு நாடு திரும்புவதற்கு முன்னர் இச்செவ்வியை வழங்கினார்.

நோர்வே தொழிலாளர் கம்யூனிஸ்ட் கட்சி உலக நாடுகளில் மக்கள் மீது நடத்தப்படும் யுத்தங்களை எதிர்த்து வருகிறது. அந்த வகையில் இலங்கை தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்ட யுத்தத்தை எதிர்த்து வந்தது. உலகெங்கும் நடைபெறும் உரிமைப் போராட்டங்களை எதிர்த்து வரும் எமது கட்சி இலங்கை தமிழ் மக்களின் தேசிய அபிலாசைகளுக்கான போராட்டத்தை ஆதரித்து வந்தது. அவர்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் இச்சந்தர்ப்பத்தில் அம்முயற்சிகளுக்கு ஆதரவையும், ஒத்துழைப்பையும் எமது கட்சி தெரிவித்துக் கொள்கிறது. அம்முயற்சிகள் வெற்றியடைய வேண்டிய ஒத்துழைப்புகளை எமது கட்சி வழங்கும் என்பதுடன் நிலைமைகளை சரியாக புரிந்து கொள்வதற்கு எனது இந்த பயணம் உதவியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

சமாதானத்தை நிலைநாட்டுவது என்பது மிகவும் கடினமான காரியம் சமாதானத்தின் எதிரிகளின் இடைஞ்சல்களையும், பல சவால்களையும் எதிர் கொண்டே சமாதானத்தை அடைய வேண்டியிருக்கும். சமாதானத்தை வலியுறுத்தி பரந்துபட்ட, சக்திமிக்க மக்கள் இயக்கங்களை தொடர்ச்சியாக முன்னெடுப்பதன் மூலமே சமாதானத்திற்கு எதிரானவர்களை தோற்கடிக்க முடியும். யுத்தத்தினால் ஏற்பட்டுள்ள அழிவுகள், உயிரிழப்புகள் என்பன மீண்டும் யுத்தம் ஏற்படுவதை தடுக்கும்படி வலியுறுத்துவதுடன் சமாதானத்தின் தேவையையும் வலியுறுத்துகின்றன எனவும் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது இனப் பிரச்சினைக்கான தீர்வு வெளியிலிருந்து திணிக்கப்பட முடியாது. இலங்கை மக்களுக்கான ஒத்துழைப்பு நடவடிக்கைகளை நோர்வே தொழிலாளர் கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வதேச நடவடிக்கைகளுடன் இணைக்கப்பட வேண்டும். நான் நோர்வே திரும்பியதும் இலங்கையுடனான நட்புறவு நடவடிக்கைகளை மேற்கொள்வேன். நோர்வே இலங்கை நட்புறவு சங்கத்தை அமைக்கவும் திட்டமிட்டுள்ளேன்.

நோர்வே அரசு அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு சார்பான அரசு என்பதில் எவ்வித ஐயமுமில்லை. ஆனால் நோர்வே மக்கள் அமெரிக்க, மற்றும் ஐரோப்பிய ஏகாதிபத்தியங்களை அங்கீகரிக்கவில்லை. நோர்வே அரசாங்கங்கள் கொசோவா, ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் யுத்தத்தை நடத்துவதற்கு ஆதரவு வழங்கின. இலங்கை விடயத்தில் நோர்வே அரசு சமாதானத்துக்கான தரப்பாக இருக்கிறது. இதுவரையும் இலங்கை விடயத்தில் அது ஆற்றியுள்ள



பங்கு மெச்சத்தக்கது. தொடர்ந்து அது சரியான திசையில் அதன் பங்கை ஆற்ற நோர்வே மக்களின் பங்களிப்பும் அவசியம் என்று நான் கருதுகிறேன். நோர்வே மக்களின் பங்களிப்பிற்கும், ஒத்துழைப்புக்குமான நடவடிக்கைகளை எமது கட்சி முன்னெடுக்கும். 40 லட்சம் மக்களைக் கொண்ட நோர்வேயில் 10 ஆயிரத்துக்கு அதிகமான இலங்கையர்கள் இருக்கின்றனர். அவர்களில் 3 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் நோர்வே பிரஜைகளாக இருக்கின்றனர்.

சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்த வரலாற்றுப் பாரம்பரியம் நோர்வே நாட்டுக்கு இருக்கிறது. அவ்வனுபவங்களிலிருந்து பாடங்களைக் கற்று வேறெந்த உலக மேலாதிக்க சக்திகளுக்கும் துணை போகாமல் நோர்வே அரசு சமாதான நடவடிக்கைகளை முன்னெடுக்க நாம் தொடர்ச்சியாகப் போராட வேண்டும்.

### உலக நிலைவரம் பற்றி

இன்று உலகமெங்கும் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நடுகள் எனப்படுபவைகளில் கூட மக்கள் வீதிகளில் இறங்கி ஏகாதிகத்திய உலகமய

**நோர்வே தொழிலாளர் கம்யூனிஸ்ட் கட்சிப் பிரதிநிதி தோழியர் ரூனா வழங்கிய கருத்துக்கள்.**

மாக்கலுக்கு எதிரான போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். இடது சாரிகள் பலமடைந்து வருகின்றனர். புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சிகள் வலுவடைந்து வருகின்றன. இந்நிலைமையில் சர்வதேச ரீதியாக கம்யூனிஸ்ட் கட்சிகளிடையே உறவுகள் பலப்படுத்தப்பட வேண்டும். கம்யூனிஸ்ட் கட்சிகள் ஒரே சர்வதேச அமைப்பாக இயங்குவது சாத்தியமில்லாவிட்டாலும் ஒன்றுக்கு மேற்பட்ட சர்வதேச இயக்கங்களில் அங்கம் வகித்து மீண்டும் பலமான பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தை கட்டி வளர்க்க வேண்டும். அந்த வகையில் இலங்கையில் புதிய-ஜனநாயகக் கட்சி உட்பட முற்போக்கு அமைப்புகளுடன் எமது கட்சி உறவை வளர்த்துக் கொள்ள விரும்புகிறது.

ஏகாதிபத்தியத்திற்கு தென்னாசியப் பிராந்தியம் மிகவும் முக்கியமாகிறது. அதனால் இப்பிராந்திய நாட்டு மக்களிடையே ஏகாதிபத்தியம் பற்றிய விழிப்புணர்வும், ஏகாதிபத்தியத்திற்கு எதிரான ஒருமைப்பாடுடைய செயற்பாடும் அவசியமாகிறது.

### புதிய-ஜனநாயகக் கட்சி பற்றி

மிகவும் மோசமான பேரினவாத, யுத்த, இனத் தேசியவாத சூழலில் ஒரு மாக்சிஸ்ட் லெனினிஸ்ட் கட்சியை கட்டிக் காக்கும் புதிய-ஜனநாயகக் கட்சித் தோழர்களின் பணி மிகவும் முக்கியமானதாகும். அடையாளங்களுக்கான அரசியலின் வரையறைகளை விளங்கிக் கொண்டு அடக்கப்படுகின்ற தேசிய இனங்களின் பக்கம் நிற்கும் அதேவேளை தொழிலாள வர்க்க அரசியலை முன்னெடுக்கும் அவர்களின் உழைப்பு மதிக்கத்தக்கதாகும். வேறெந்த நாடுகளிலும் இல்லாத சூழ்நிலையே இலங்கையில் இருக்கிறது. பெரும்பான்மை சிங்கள மக்கள் மத்தியில் ஸ்தாபன ரீதியாக இயங்கக் கூடிய புரட்சிகரக் கட்சியொன்று இல்லாத சூழ்நிலையில் பெரும்பாலும் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் புரட்சிகர ஸ்தாபன வேலைகளை புதிய-ஜனநாயகக் கட்சி செய்து வந்திருக்கிறது.

பெரும்பான்மை சிங்கள மக்கள் மத்தியில் பல மக்கள் இயக்கங்களையும், பரந்துபட்ட இடதுசாரி வேலைத் திட்டங்களையும் முன்னெடுத்தபோதும் அவர்கள் மத்தியில் புதிய-ஜனநாயகக் கட்சி ஸ்தாபன ரீதியாக வளர முடியவில்லை. இந்நிலைமையை மாற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

பெரும்பான்மை சிங்கள மக்கள் மத்தியில் புதிய-ஜனநாயகக் கட்சி ஸ்தாபன ரீதியாக பலமடைய வேண்டும் அல்லது அவர்கள் மத்தியில் வேறொரு புரட்சிகர அமைப்பொன்று கட்டி வளர்க்கப்பட வேண்டும். அதனூடாகவே இனத் தேசியவாத, இனவாத சூழ்நிலை வெற்றி கொள்ள முடியும்.

அதேவேளை பரந்துபட்ட இடதுசாரி, ஜனநாயக வேலைத்திட்டங்களினூடே மக்களை அணிதிரட்டி ஐக்கியப்படுத்த வேண்டும். புதிய-ஜனநாயகக் கட்சியின் மாதிரிக் கிராமங்களில் ஒன்றான புத்தூரை பார்த்து வியந்தேன். தமிழ் மக்களின் தேசிய அபிலாஷைகளுக்கான போராட்டச் சூழ்நிலையில் அவர்கள் தொழிலாளர் வர்க்க கட்சியான புதிய-ஜனநாயகக் கட்சி தொடர்ந்து இயங்கி வருவதும் இலங்கையின் தொழிலாளர் வர்க்கத்தின் பெரும்பகுதியினர் வாழ்கின்ற பெருந்தோட்டத்துறையில் கட்சி வேலைகள் முன்னெடுக்கப் படுவதும் அது பலமான அடிப்படையை கொண்டிருக்கிறது என்பதை உணர்த்துகிறது.

தேசிய இனப்பிரச்சினை இலங்கையின் பிரதான முரண்பாடாக கொண்டு வேலைத்திட்டங்களை முன்னெடுக்கின்ற அதேவேளை கட்சிக்குள்ளும் வெளியிலும் இனத்தேசியவாத, குறுகிய தேசியவாதங்களுக்கு எதிராக கடுமையான போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்று நாம் அபிப்பிராயப்படுகின்றன.

பெண்களை அதிகளவில் கட்சியில் அணி திரட்டுவதிலும் பெண்களின் உரிமைகள் தொடர்பாகவும் புதிய-ஜனநாயகக் கட்சி கூடிய அக்கறை செலுத்த வேண்டும்.

புரட்சிகர தொழிற்சங்க வேலைகளையும் முன்னெடுப்பது அவசியம்.

நோர்வே தொழிலாளர் கம்யூனிஸ்ட் கட்சி பற்றி நான் அங்கம் வகிக்கும் நோர்வே தொழிலாளர் கம்யூனிஸ்ட் கட்சி மாக்சிசம், லெனினிசம், மாசேதுங் சிந்தனையை ஏற்று ஒழுகுகின்ற கட்சியாகும். நான் நோர்வே கல்வியியலாளர் சங்கத்தின் முக்கிய உறுப்பினராவேன் கல்வியியல் சீராண்மையாளராக பணி புரிகிறேன். பாலஸ்தீனம், நிக்கரகுவா, எல்சல்வடோர் போன்ற நாடுகளின் நட்புறவு சங்கங்களில் முக்கியமான பொறுப்புகளை ஏற்று செயற்பட்டேன். நான் சர்வதேச ஒத்துழைப்பு பற்றி கூடிய அக்கறை செலுத்துகிறேன்.

தொடர்ச்சி 11ம் பக்கம்

படிப்பகம்

www.padippakam.com



# தமிழ்த் தேசியமும் குறுநலப் பித்தும் (12)

இலங்கையின் தேசிய இனங்களுக்கான அரசியல் தீர்வில் தற்போது தமிழ் மக்களின் சுயநிர்ணயத்தின் அடிப்படையில் பேச்சுவார்த்தைகள் பல கட்டங்களைத் தாண்டிச் செல்வதும் சர்வதேச சமூகத்தின் நேர்மையான பங்களிப்புடனும் முன் நோக்கிச் செல்வதையே மக்கள் விரும்பி வரவேற்கின்றார்கள்.

இலங்கையில் பெரும்பான்மை இனமாக சிங்கள இனத்தையும் சிறுபான்மை இனமாக இலங்கைத் தமிழர்களையும் கருத்திலெடுத்துக்கொண்டு இலங்கைத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமை பற்றிய வாதபிரதிவாதங்கள் நிகழ்ந்தேறுகின்றன.

பிறப்படிப்படையிலும் எண்ணிக்கை அடிப்படையிலும் பெரும்பான்மை, சிறுபான்மை என்ற எண்ணக்கருவைக் கணிப்பதற்குப் பதிலாக கருத்தின் - தீர்மானத்தின் அடிப்படையில் அவ்வப்போது மாற்றமடையக்கூடிய வகையிலேயே ஜனநாயக சமூகத்தில் விஞ்ஞானக் கண்ணோட்டத்தில் பல்லினப் பண்பாட்டுச் சூழலின் யதார்த்தத்தை புரிந்துகொள்ளும் மனப்பக்குவத்துடன் நோக்க வேண்டும்.

"நாம் போராடுவது, இவர்கள் இதற்குள் எப்படி வருவது" என்று தமிழர் தரப்பிலிருந்து குறுகிய இனவாதக் கண்ணோட்டத்தில் சிலர் கேள்வியெழுப்புவது அபத்தமானது.

போராட்டம் என்பது முழுமக்கள் சார்பானது. அதை தனியொரு இனம் முன்னெடுப்பதில் மும்முரமும் தலைமைப் பாத்திரமும் வகித்திருப்பினும் அது சகல மக்களினதும் தேசிய இனப்பிரச்சினையின் தீர்வுடன் சம்பந்தமுடையதாகும். எனவே தமிழருக்கும் சிங்களவருக்குமிடையிலான தனிப்பட்ட கொடுக்கல் வாங்கலாகக் கருதிக்கொள்ள முடியாது. நாட்டில் இருக்கும் இனத்தவர்களுக்கிடையில் பிரச்சினைகள் முனைப்படைந்திருப்பினும் அது சகல தேசிய இனத்தைச் சேர்ந்த மக்களை

மும் அணிவகுத்துள்ளன. இச்சூழலில் தான் தமிழ் தேசியவாதிகள் தம்மைச் சுதாகரித்துக் கொள்ள வேண்டுமென்பதுடன் தமது சகோதர ஏனைய தேசிய இனத்தவர்களையும் அரவணைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

இலங்கையில் வடக்குக் கிழக்குத் தமிழர் தாயகத்தில் சிங்கள, முஸ்லீம், மலையகத் தேசிய இனத்தவர் எண்ணிக்கையில் குறைவாக இருப்பினும் அவர்களின் தனித்துவமும் சுயநிர்ணய உரிமையும் உறுதி செய்துகொள்ளப்படுவதில் சிங்களப் பேரினவாதிகளை விடவும் முன்மாதிரியாக போராடியதன் பயனை அனுபவிக்கச் செய்யும் ஆர்வத்தில் ஒன்றிணைப்பது அவசியமாகும்.

அப்போதுதான் தென்னிலங்கையில் வாழும் பிறதேசிய இனத்தவரான தமிழர், முஸ்லீம்கள், மலையகத்தவரதும், வேடர், பறங்கியர் ஆகிய சமூகத்தவரதும் தனித்துவமும் தேசிய இனங்

## சகல தேசிய இனங்களையும் அங்கீகரிப்பதுவே சுயநிர்ணயத்துக்கான முன் நிபந்தனையாகும்

இவ்வெண்ணக்கரு பற்றி தீர்மானித்தல் ஆரோக்கியமானதாகும். ஜனநாயக சமூகத்துக்குரிய இயங்குதிசை நெறியாகிய பெரும்பான்மை-சிறுபான்மை என்ற கருதுகோள் தேசிய இனங்களுக்கு ஏற்புடையதல்ல. எத்தனை பேர் என்று எண்ணிக்கை அடிப்படையில் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வைக் கண்டுகொள்ள முடியாது. மாறாக, ஒரு தேசிய இன்த்தின் தேவைப்பாடுகளை ஓர் இனம் கொண்டிருக்குமாயின் அவ்வினத்தை அங்கீகரிப்பதும் அதன் சுயநிர்ணயத்துக்கான ஏற்பாடுகளை வரையறை செய்வதும் சகல தேசிய இனங்களினதும் முன்தேவையாகும்.

சிறுபான்மை இனம் என்பதிலும் தேசிய இனம் என அழைப்பதே ஆரோக்கியமானதாகும். தேசிய இனம் என்பதும் அதன் சுயநிர்ணயத் தகுதி என்பதும் அவ்வினத்தைச் சேர்ந்தோரில் எத்தனை பேர் உள்ளனர் என்பதோ, எப்படிப் போராடினர் என்பதோ, எவரெவருடன் கூடினர் என்பதோ கேள்விக்குரியனவல்ல.

இவ்வடிப்படையில் நோக்கும்போது இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வை தமிழ்க்குறுந்தேசியக் கண்ணோட்டத்திலோ அல்லது சிங்களப் பெருந்தேசியக் கண்ணோட்டத்திலோ காணமுடியாது. மாறாக, சமூக

**செண்பகன்**

யும் பாதித்திருப்பதை நிராகரிக்க முடியாது.

எனவேதான் சிறுபான்மையினர் என்ற அடிப்படையில் பிரச்சினைகளை நோக்குவதற்குப் பதில் தேசிய இனத்தவர் என்ற கணிப்பில் தீர்வை நோக்குவது பரந்த மனப்பாங்கைத் தோற்றுவிப்பதாகும்.

பெரும்பான்மையினம் என்பது சிறுபான்மையினத்துக்கு தனது நலன்களையும் உரிமைகளையும் கையுதிர்ப்பதென்றும் மண்ணை விட்டுக் கொடுப்பதென்றும் ஒப்பாரி வைப்பதும் நாடு துண்டாடப் படுகிறது என்று அயல் நாடுகளுக்கு தூது சென்று கூப்பாடு போடுவதும் குறைப்பிரசவக் கருத்துக்களின் குழப்பத்தினாலேயேயாகும். இதனாலேயே ஜே.வி.பி யினரும் சிஹலஉறுமயவினரும் சிந்தை கலங்கி இந்தியாவே கதியென்று வரவுப்பாட்டுப் பாடுகின்றனர்.

இந்நிலையில் தமிழ் மக்களுடைய சுயநிர்ணயத்துக்கெதிராகத் தற்போது நேரடியாக பொதுஜன முன்னணியும் மறைமுகமாக மிகப்பயங்கரமாக் யூ.என்.பியும் ஏனைய சிங்கள துவேஷிகளும் ஒன்று கூடியுள்ளனர். இவர்களின் பின்னால் இந்தியப் பிராந்தியமும் அமெரிக்க ஏகாதிபத்திய

களுக்கான கௌரவமும் அங்கீகரிக்கப்படுவதும் நடைமுறையில் சாத்தியமாகும். அதுவே அமைதிக்கும் அந்நியரின் ஆக்கிரமிப்பில் இருந்து தவறுவதுக்கும் வழி சமைப்பதாகும்.

அதே சமயத்தில். தமிழர்கள் மத்தியில் போராடும் விடுதலை இயக்கங்கள் மக்களினதும் ஏனைய கட்சிகள், ஸ்தாபனங்களினதும் அரசியல், சமூக, ஜனநாயக உரிமைகளை ஏற்றுக்கொள்வதும் மனித உரிமைகளுக்கு மதிப்பளிப்பதும் தேசிய இனத்தின் உறுதிக்கும் ஒற்றுமைக்கும் பலம் சேர்ப்பதாகும்.

மனித உரிமைகளும் ஜனநாயக உரிமைகளும் தனிமனிதர்களுக்கானதென்பது அங்கீகரிக்கப்பட்டு அனுபவிக்கப்படும் பொழுதே சுயநிர்ணய உரிமை என்பது முழுச் சமூகத்துக்கும் செழுமை சேர்க்கும் ஓர் வல்லாயுதமாக எழுச்சி பெறமுடியும்.

மனித உரிமைகள் மக்களிடம் மறுக்கப்படும்போது சமூகத்தின் சுயநிர்ணயம் நிராகரிக்கப்பட்டு தனி மனித உரிமை தாக்கப்படும்போதும் ஆரோக்கிய சமூகம் சாத்தியப்படாது.

அரசியல் தீர்வு என்பது ஜனநாயக மனித உரிமைகளின் விரிவாக்கமும் மலர்ச்சியும் எழுச்சியுமாகவே தேசிய இனங்களின் சுயநிர்ணயம் அமைதல் வேண்டும்.

# ஒளியில் எழுதலும் இருளில் ஒளிதலும்

லண்டனில் உள்ள அமிர்தலிங்கம் நினைவு அறக்கட்டளை "அமிர்தலிங்கம்: ஒளியில் எழுதுதல்" என்ற தலைப்பில் ஒரு 500 பக்கப் புகைப்பட நூலை வெளியிட்டுள்ளது. இதற்கான முன்னுரையை எழுதியுள்ள முதலாவது பதிப்பாசிரியர் மு. நித்தியானந்தன், "புகைப்படங்கள் சங்கேதக் குறிகளற்ற செய்தி" என்று, பின்நவீனத்துவாதி றோலன்ட் பார்த்தை மேற்கோள் காட்டுகிறார். படங்களின் வலிமையைக் கூறுகிற பதிப்பாசிரியர் கூறத் தவறுவது ஏதெனின் புகைப்படம் எடுக்கப்படுகிற கோணமும், குவிவும், எடுக்கும் நேரமும், முறையும் ஒரே நிகழ்வை முற்றிலும் வேறுபட்ட விதங்களில் விளங்கிக் கொள்ளத் தூண்டுகின்றன. புகைப்படக் கருவி அதன் சடப்பொருள் இயல்பில் மட்டும் இயங்குவதில்லை. அது இயக்கவும் படுகிறது. எனவே. "வாசகன் இறந்துவிட்டான்" என்ற பின்நவீனத்துவ நிலைப்பாட்டிலிருந்து பார்த்தால். பார்வையாளர்களைக் கொண்ட சமூக ஊடாட்டத்திற்கும் மேலாகப், படமெடுத்தவரது பார்வையும் புகைப்படத்தினுட் பொதிந்துள்ளது என்பதை நாம் எளிதாகவே தவற விடலாம்.

இப்படத் தொகுப்பில், படங்களின் தெரிவு. தொகுப்பாளர்கள் அமிர்தலிங்கத்தை எவ்வாறு காண விரும்புகின்றனர் என்பதையும் சுட்டி நிற்கிறது. முன்னுரையில் அமிர்தலிங்கம் பற்றிக் கூறப்பட்டுள்ள சில, மிகைப்படுத்தப்பட்ட விடயங்கள். சில முக்கிய விடயங்கள் தவிர்க்கப்பட்டுமுள்ளன. உதாரணமாக, "பத்திரிகையாளர்களுடன் அவர் என்றும் பழகுவதற்கு எளியவராக-இனியவராக" இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது. 1980-83 இடைவெளியில் 'சற்றடே றிவ்யூ' பத்திரிகையாளர்களாயிருந்தவர்கட்கு இது பற்றி வேறு கருத்து இருக்கும் என நினைக்கிறேன். சாதியத்திற்கு எதிரான போராட்டத்தின் போது அவரது நிலைப்பாடு பற்றியும்

**அமிர்தலிங்கம் பற்றிய கண்ணோட்டம்**

இந்த ஆவணப்படுத்தலின்போது நினைவூட்டுவது அசவுகரியமானதுதான். ஒருவரது நிலைப்பாடு பற்றிய நேர்மையான மதிப்பீடின்றி அவரது பங்களிப்புப் பற்றிப் பேசுவது ஒரு சராசரியான இரங்கலுரைக்கு மேலாக எதுவுமாகாது. முன்னுரையின் முடிவில், நித்தியானந்தன், நோம் சொம்ஸ்கியை மேற்கோள் காட்டியுள்ளார்: "முடிவற்ற ஏமாற்று வலைப்பின்னல்களுள் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அதிகாரத்தின் கட்டளைகளாலேயே வடிவமைக்கப்படும் இந்த சமூகத்தில் உண்மைகள் தாம் மிக எளிதாக நழுவிப்போய் விடுகின்றன."

அமெரிக்க அரச நிறுவனமும் செய்தி ஊடகங்களும் பற்றிய சொம்ஸ்கியின் மேற்படி கூற்று, இந்த ஆவணத்துக்கும் பொருந்தக்கூடும். 1957ல் ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டமும், 1961ல் தமிழரசு தபால் சேவையும் பற்றிய படங்கள் அவற்றின் பின்னணி பற்றிய முழுமையான உண்மைகளை நமக்கு என்றுமே கூற முடியாது. 1974 தமிழாராச்சி மாநாட்டு அசம்பாவிதம் ஏன் நடந்தது என்பது பற்றிய உண்மையில் முக்கியமான சில பகுதிகள் நமக்கு இப்படங்களினின்று தெரியவராது. துரையப்பா கொலையின் பின்னாலிருந்த 'அகிம்சாவாதிகள்' பற்றியும் தெரியவராது. 1981 யாழ் நூலக எரிப்பின் பின்பு கூடக் கைவிட மனம் வராத எதிர்க்கட்சித் தலைவர் பதவியும் அந்தப் பதவியின் பேரால் தமிழ் மக்களுடைய விடுதலைக்கு எதுவித பயனும் இல்லாமல் அமிர்தலிங்கம் அனுபவித்த உபசாரங்களும் நூலின் காற்பகுதியளவுக்கு இருக்கின்றன.

நூலில் கூசாமற் கூறப்பட்டுள்ள முக்கியமான ஒரு தகவல், இலங்கையில் இந்தியக் குறுக்கீட்டை அமிர்தலிங்கம் மிகவும் வேண்டி நின்றார் என்பதாகும். திரை மறைவில் நடந்த அரசியல் பேரங்களுக்குச். சங்கேதக் குறிகளோடோ சங்கேதக் குறிகள் இல்லாமலோ. இன்னமும் முழுமையான தகவல் ஏதும் இல்லை.

தொடர்ச்சி 11ம் பக்கம்..




## மாக்ஸியமா மாக்ஸியங்களா?

மாக்ஸியம் என்றால் என்ன என்பதை வெறுமனே ஒரு தத்துவார்த்தப் பிரச்சினையாக்கி அதைப் பலவாறாக வியாக்கியானம் செய்ய முடியும் என்றும் ஒவ்வொரு வியாக்கியானமும் சமமான அளவு செல்லுபடியானது என்றும் சிலர் சொல்லி வருகிறார்கள். மாக்ஸியம் விறைப்பான ஒரு கோட்பாடல்ல. எப்போதும் எல்லா இடத்திலும் எல்லாப் பிரச்சினைகளிலும் ஒரே விதமாகப் பாவிக்கக்கூடிய ஒரு மந்திரமோ வாய்ப்பாடோ அல்ல. மாக்ஸியம் என்பது சமூகத்தை மாற்றும் நோக்கத்துக்காகச் சமூகத்தை ஆராயும் ஒரு விஞ்ஞான முறை; அந்த விஞ்ஞான முறை மூலம் கண்டறியப்பட்ட உண்மைகளின் தொகுப்பு: அனைத்தினும் முக்கியமாக உலகை மாற்றுவது பற்றிய ஒரு தெளிவான இலக்கும் அதற்கான போராட்டப் பாதையுமாகும். இந்த இறுதி உண்மையை மறுத்துவிட்டு மாக்ஸையும் இன்னொரு மெய்யியலாளர் என்று பார்த்தால் மாக்ஸியம் என்ற கோட்பாடே பயனும் பொருளும் அற்றது.

உலகில் சோஷலிஸ அலை மேவிய போது தங்களை மாக்ஸியவாதிகளாகவும் அனுதாபிகளாகவும் காட்டிக் கொண்டவர்கள் பலர் உள்நாட்டிலோ உலக அளவிலோ அதற்கு எதிரான போக்கு மேவுவதாகக் காணும் போது தமது பழைய அடையாளத்தை மறுப்பதையும் மறைப்பதையும் காணலாம். இதனிலும் கபடமான போக்கு ஒன்று உண்டு. அது. மாக்ஸியத்துக்கு முரண்பாடான கருத்துக்களை வற்புறுத்தி அவற்றை மாக்ஸியத்தின் பேரால் நியாயப்படுத்துவது. அதுவும் போதாது என்று. அதை மாக்ஸியவாதிகள் மறுதலித்துப் பேசினால் தாங்கள் சொன்னதும் மாக்ஸியம் தான் என்று வாதிப்பது தான் அது. பின்நவீனத்துவத்தின் "ஆசிரியன் இறந்து விட்டான்" என்ற சுலோகத்தை வெகு வசதியாகப் பாவித்து மாக்ஸ் சொன்னதையும் அதே அடிப்படையில் எவ்வாறும் "வாசிக்க" முடியும் என்று இவர்கள் நியாயப்படுத்துகிறார்கள். இதனாலேயே பின்நவீனத்துவத்தின் வரலாற்று மறுப்பும் பொதுமை மறுப்பும் அதன் வழிவரும் விஞ்ஞான மறுப்பும் மாக்ஸிய விரோதிகட்கும் மாக்ஸியத் திரிப்புக்காரர்களுக்கும் வசதியாக இருக்கிறது.

மாக்ஸின் காலத்திலேயே மாக்ஸின் கருத்துக்கள் சிலரால் திரிக்கப்பட்டு மாக்ஸியம் என்று வரையறுக்கப்பட்டபோது மாக்ஸ் "அப்படியானால் நான் ஒரு மாக்ஸியனல்ல" என்று குத்தலாக மறுப்புக் கூறியது பற்றிப் பலரும் அறிவார்கள். மாக்ஸின் இறப்பின் பின்பு புரட்சிகர இயக்கத்தை முன்னெடுப்பதில் பலவேறு கருத்து வேறுபாடுகள் எழுந்துள்ளன. மாக்ஸியத்தை ரஷ்யாவில் அறிமுகப்படுத்திய முன்னோடிகளில் ஒருவரான கவுட்ஸ்கி காலப்போக்கில் ஒரு வலது சந்தர்ப்பவாதப் பாதையில் இறங்கிய போது "பாட்டாளி வர்க்கப் புரட்சியும் பின்னிழுப்பாளன் கவுட்ஸ்கியும்" என்ற சிறு நூலில் லெனின் கவுட்ஸ்கியின் திரிபுவாதத்தைக் கடுமையாக விமர்சித்தார். இதுபோலவே இடது திவிரவாதப் போக்குகளைச் சிறுபிள்ளைத்தனம் என்று அவர் அதே அளவு கடுமையாக விமர்சித்தார்.

லெனின் மிகவும் தெளிவாகவே பாட்டாளிவர்க்கப் புரட்சி பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம். ஆகியனவற்றை ஏற்காத எவருமே மாக்ஸியவாதியல்ல என்று கூறியிருந்தார். வர்க்கங்களின் இருப்பைப் பற்றி மாக்ஸுக்கு முதலே பலர் கூறியிருந்தார்கள். வர்க்கப் போராட்டத்தின் தன்மையும் வரலாற்றைத் தீர்மானித்தல் அதன் பங்கையும் தெளிவுபடுத்தியதுதான் மாக்ஸின் பெரிய பங்களிப்பு. ஆயுதமேந்திய போராட்டம் என்பதை வெறும் வன்முறையாகக் கொள்வது மாக்ஸியமல்ல. அரசு என்பது வன்முறை மூலமே தனது இறுதி அதிகாரத்தைச் செலுத்துகிறது என்று அரசு பற்றிய மாக்ஸிய நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்திய லெனினும். மாக்ஸிய இயங்கியலில் முரண்பாடுகளின் ஒற்றுமையும் மோதலுமே அடிப்படையானது என்று நிறுவி அதனின்று வெகுசன மார்க்கத்தை விருத்தி செய்த மாஓவும் வர்க்க சமுதாயத்தில் ஆதிக்கச் சிந்தனையின் மேலாண்மைபற்றி விளங்கிய கிராம்ஸ்சியும் மாக்ஸியத்தின் அடிப்படை இலக்கையோ ஆய்வுமுறையையோ உலக நோக்கையோ. திரித்ததாக யாரும் குற்றஞ்சாட்ட இயலாது. இவர்களும் இன்னும் பல மாக்ஸியச் சிந்தனையாளர்களும் மாக்ஸியத்தை வளர்த்தெடுக்கப் பெரும் பங்களித்தவர்கள் தாம். இதனால் இவர்கள் ஒவ்வொருவரையும் வெவ்வேறு வகையான மாக்ஸியர்கள் என்றும் வெவ்வேறு வகையான மாக்ஸியங்களை முன்மொழிந்தவர்கள் என்றும் சொல்வதற்கில்லை.

புரட்சிகர நிலைப்பாடுகளை மேற்கொள்கிற அறிஞர்கள் இருக்கிறார்கள். அது பேச்சளவில் உள்ளளவும். அவர்களுக்கு ஒரு இடரும் இல்லை. நடைமுறை அரசியலிலே தான் அவர்களது சிந்தனையின் வறுமை புலனாகிறது. ஒரு சமூக மோதலின் போது எத்தரப்பில் நிற்பது என்ற முடிவை எடுக்க வேண்டிய நிலையில், எந்த அணியுடன் தம்மை வெளிவெளியாக அடையாளங் காட்டுவது என்ற கேள்வி எழுகிறது. அப்போதுதான் ஒருவரது மாக்ஸிய நிலைப்பாட்டின் நேர்மை சோதிக்கப்படுகிறது.

தவறான முடிவுகளை மேற்கொண்ட எல்லாரையும் மாக்ஸியரல்லாதோர் என்றோ மாக்ஸிய விரோதிகள் என்றோ ஒதுக்க முடியாது. தனிமனிதராயினும் அரசியல் இயக்கமாயினும் போராட்ட அமைப்பாயினும் தவறுகள் செய்யலாம். தவறான முடிவுகட்கு வரலாம், தவறான பாதையை நாடலாம். அதற்கான காரணங்கள் பல உண்டு. நம்மிடம் உள்ள தகவல்களின் செம்மை போதாதிருந்தால் எந்த விஞ்ஞான அணுகுமுறையிலும் தவறுகள் நேர்வதைத் தவிர்க்க முடியாது. எனினும் தவறுகளை அடையாளங்கண்டு திருத்தி முன் செல்வதுதான் விஞ்ஞானரீதியான அணுகுமுறை. ஆளுக்கொரு மாக்ஸியம் பேசுகிறவர் செய்ய முனைவது ஏதென்றால் மாக்ஸியத்தின் சில அடிப்படைகளை ஒருவர் ஏற்கிறார் என்பதை வைத்து அவரது வியாக்கியானங்களை எல்லாம் ஒருவகையான மாக்ஸியம் என்று வரையறை செய்வதுதான். இந்தக் கணக்கின்படி, சிலரிடம் வேளைக்கொரு மாக்ஸியம் இருப்பதாகக்கூட நாம் எண்ண நேரும்.

பலவாறான மாக்ஸியங்களைப் பற்றிப் பேசுவதை விட, மாக்ஸிய அணுகுமுறையின் விளைவாகப் பெறுகிற முடிவுகளின் வேறுபாடுகள் பற்றிப் பேசுவது நியாயமானது. ஒவ்வொரு சமூகச் சூழலும் குறிப்பான சமூக நிலவரமும் அதற்கேயுரிய நடைமுறையை வேண்டி நிற்கிறது. அதுவும் போதாமல், மாறிவரும் சமூகச் சூழலிலேயே பாட்டாளி வர்க்கப் புரட்சிகர இயக்கத்தையும் புரட்சியையும் முன்னெடுப்பது எவ்வாறு என்பதைப் பற்றி கருத்து வேறுபாடுகட்கு நிறைய இடமுண்டு. இவை போராட்ட இயக்கங்கள் இடையிலும் ஒவ்வொரு இயக்கத்துக்கு உள்ளும் கடுமையான விவாதங்கள் நடக்கின்றன இவையெல்லாம் வெவ்வேறு மாக்ஸியங்களின் காரணமான விவாதங்களல்ல. இவை ஒவ்வொருவரும் நிலவரங்களை எவ்வாறு அறிந்தும் விளங்கியும் கொண்டுள்ளனர் என்பது பற்றியது.

எனவேதான் பலவேறு மாக்ஸியங்கள் என்ற போர்வையில் விஷயங்களை மழுப்பாமல் ஒரு அணுகுமுறையின் சில அடிப்படைகளைத் தேடுவது அது மாக்ஸியமா இல்லையா என்பதைத் தீர்மானிக்க உதவும். நடைமுறை அரசியலில் வர்க்கமும் வர்க்கப் போராட்டமும், பாட்டாளி வர்க்கப் புரட்சியும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமும் என்ற கேள்விகள் எளிதாகவே மாக்ஸியத்தையும் சீர்த்திருத்தவாத அரசியலையும் வேறுபடுத்துகின்றன. இவை இன்னமும் செல்லுபடியாகும் அளவு கோல்கள். இயங்கியல் பொருள்முதல்வாதமும் முரண்பாடுகளின் அடிப்படையில் மாற்றங்களை ஆராய்வதும் மாக்ஸிய அணுகுமுறையின் மையத்தில் உள்ளவை. இவற்றை நிராகரிப்பது ஒருவரது கருத்துச் சுதந்திரமாகும். இவற்றை ஏற்காமல் நடக்கிற ஆய்வுகளை இன்னொரு மாக்ஸியம் என்பது சுத்தமான ஏமாற்று.

மாக்ஸியத்தின் அடிப்படையான நோக்கம் உலகை மாற்றுவது என்பது மாக்ஸ் சொன்ன மொழி. அதை விடுத்துச், சாப்பிட்டதை செரிப்பதற்காக நடக்கும் விவாதங்களுக்கான ஒரு ஆதாரமாக்குவது நிச்சயமாக மாக்ஸிய நோக்குடையதல்ல.

— இமயவரம்பன் —

படிப்பகம்

www.padippakam.com



# காஷ்மீர் முஸ்லீம்களின் நிலை பற்றி ஜம்மு பல்கலைக்கழகப் பேராசிரியர்

சென்ற ஜனவரி மாதம் 8ம் திகதி கொழும்பு-08ல் அமைந்துள்ள இன ஆய்வுக்கான சர்வதேச மையத்தில் ஜம்மு பல்கலைக்கழகத்தின் சட்டபீட துணைப் பேராசிரியர் கலாநிதி குலவன் சிங் "அகதிகளினதும் இடம்பெயர்ந்தவர்களினதும் சொத்துரிமை" என்ற தலைப்பில் ஒரு சொற்பொழிவாற்றினார். இச் சொற்பொழிவானது பொஸ்னியா, ஹெர்சேகோவினா, காஷ்மீர் ஆகியவற்றுடன் ஒப்பிட்டு மேற்கொள்ளப்பட்டது.

அமிற்ஸ்ரார் உடன்படிக்கையின் மூலம் பிரிட்டன் அப்போதிருந்த காஷ்மீர் (இந்து) அரசனிடம் ஒப்படைத்தும் பின்பு ஆட்சியில் இருந்த இந்து அரசன் இந்தியாவுடன் செய்து கொண்ட ஒப்பந்தம் மூலம் காஷ்மீரின் பெரும்பகுதி இந்தியாவின் கட்டுப்பாட்டில் வந்தது. எவ்வாறாயினும் காஷ்மீரில் அரசனின் ஆணைப்படியே சகலதும் இடம்பெற்றது.

அன்றும் இன்றும் அரசின் படைகளில் காஷ்மீர் முஸ்லிம்கள் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை. ஆயுதங்கள் இந்துக்கள் மாத்திரமே வைத்திருக்க முடியும். முஸ்லிம்கள் ஆயுதங்களை வைத்திருக்க முடியாது. அந்த உரிமை அவர்களுக்கு இல்லை.

இந்திய அரசியற் சட்டம் 19ம் சரத்தின் 1ம் பிரிவின் கீழ் சகல இந்தியப் பிரஜைகளும் சொத்துக்களை வாங்கவோ, விற்கவோ முடியும். காஷ்மீர் முஸ்லிம்கள் நாட்டின் வேறு பகுதிகளில் சொத்துக்களை வாங்க முடியாது. இந்துக்களுக்கு அது முடியும்.

காஷ்மீரில் மூன்று இலட்சம் குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளனர். இவர்களின் சொத்துக்களைப் பராமரிக்கவென இந்திய அரசு EVACUEES PROPERTY DEPARTMENT என்ற அமைப்பை ஏற்படுத்தியுள்ளது. இங்கு பயன்படுத்தப்படும் EVACUEES என்பது ஒருவர் தாமாகவே விரும்பி விட்டுச் சென்றது என்ற பொருள்படும். உண்மையில் அவர்கள் அகதிகள் அல்லது இடம்பெயர்ந்தவர்கள். இது REFUGEES அல்லது DISPLACED PERSONS என்றிருத்தல் வேண்டும். அப்படிச் செய்தால் இந்தப் பிரச்சினை சர்வதேசப் பிரச்சினையாகிவிடும் என்பதனாலேயே இந்திய அரசு "இவாக்குயீஸ் புறபெட்டி டிப்பார்ற்மென்ற்" என்ற பெயரில் அமைப்பை ஏற்படுத்தியது.

அகதிகள் தமது சொத்துக்கு நட்டஈடு கோரினால் அது ஒரு சுற்றுச் சுற்றி இறுதியில் விண்ணப்பித்தவருக்கு நீண்ட காலத்திற்குப் பின் நட்டஈடு கொடுக்கப்படும். ஆரம்பத்தில் இந்த நட்டஈடு எவ்வளவு தெரியுமா. ஆச்சரியப்படாதீர்கள் இந்திய ரூபாய் (300/-) முன்னூறு மட்டுமே.

இந்த நட்டஈட்டுத் தொகை இந்திய ரூபாய் (2,500/-) இரண்டாயிரத்து ஐநூறு ஆக பின்னர் உயர்த்தப்பட்டுள்ளது. (இந்துத்துவ ஆட்சியாளரின் மனிதாபிமானம் எப்படிப்பட்டது என்பது புரிகிறதா?).

இவ்வாறு முஸ்லிம்களிடம் சூறையாடப்பட்ட சொத்துக்களின் பெறுமதி பல நூறு கோடி ரூபாய் பெறுமதியானது. இவற்றில் பெரும்பகுதி செல்வாக்குள்ளவர்களுக்கும், இனபந்துக்களுக்கும் விற்கப்பட்டது. ஒருபகுதி கபடத்தனமாக மாற்றம் செய்யப்பட்டது.

சொற்பொழிவானது இந்திய அரசை விமர்சிக்கும் வகையிலும் காஷ்மீர் மக்களின் அபிலாசைகளுக்கும் ஆதரவாக அமைந்திருந்தது. இந்திய தூதரகத்தில் இருந்தும் சிலர் பார்வையாளர்களாக வந்திருந்தனர். அவர்களில் ஒருவர் "பதில் சொற்பொழிவை" நிகழ்த்தினார். இந்திய அரசின் செயலுக்கு நியாயம் கற்பித்தார்.

காஷ்மீரில் பல தேர்தல்கள் மூலம் அந்த மக்கள் இந்தியாவுடன் இருப்பதை விரும்புகிறமை வெளியாகியுள்ளதாக குறிப்பிட்டார். அத்துடன் காஷ்மீர் மகாராசா மட்டுமல்ல இந்தியாவின் அரசர்கள் எல்லாம் கொடுங்கோலர்கள்தான் எனவும் காஷ்மீர் மகாராசா இந்துவாகவிருந்ததால் மட்டும் முஸ்லிம்களை அடக்கவில்லையெனவும் அவன் அரசனாய் இருந்த காரணத்தாலேயே மக்களைச் சுரண்டிக் கொடூர ஆட்சி நடாத்தினான் எனவும் வாதம் புரிந்தார்.

இந்தியாவில் நிலவும் ஜனநாயகத்திற்கு மாற்றாக ஒரு முறை இல்லாதபடியால் அது சிறந்த அமைப்பென இந்தியத் தூதரகப் பிரமுகர் திருவாய் மலர்ந்தருளினார்.

கலாநிதி சிங் மிகவும் நுட்பமாகப் பதில் அளித்தார். காஷ்மீரில் கட்டுப்பாட்டு எல்லையை (லைன் ஒவ் கொன்றோல்) தாண்ட முடியாத நிலையில் மக்கள் இருப்பது ஏன்? என்ற கேள்வியையும் இந்தியத் தூதரகப் பிரமுகரிடம் கேட்டார். காஷ்மீரில் நிலவும் ஜனநாயகத்தை மிகவும் நாசூக்காக சாடினார்.

பொஸ்னியாவில் அகதிகள் சொத்துக்கள் தொடர்பாக சர்வதேச சமூகம் வேறு நடைமுறையையும் காஷ்மீரைப் பொறுத்தவரை பாராமுகமாய் இருப்பதையும் கலாநிதி சிங் சுட்டிக் காட்டினார். காஷ்மீரில் ஒரு தனியான சட்டம் இருந்துவருவதையும் குறிப்பிட்டார். இந்தியாவின் ஒரு பகுதியாக காஷ்மீர் விளங்கினால் அது இந்திய அரசியல் யாப்பிற்கு முரண்பட்ட விதத்தில் இருப்பது ஏன் எனவும் கேள்வி எழுப்பினார்.

# அமெரிக்க சர்வாதிகாரமும் முஸ்லிம்களும்

அமெரிக்காவில் உள்ள முஸ்லிம்களின் ஒன்றியம் ஈராக் மீது அமெரிக்கத் தாக்குதல் தடுக்கப்பட வேண்டுமானால் சதாம் குசேயின் பதவி விலக வேண்டுமென்றும் இஸ்லாம் சர்வாதிகாரத்திற்கு எதிரானது எனவும் தெரிவித்துள்ளது.

இந்தோனேசியாவில் மக்களின பேராதரவு பெற்ற டாக்டர் சுகார்னோ அரசைக் கவிழ்த்து, பல இலட்சம் மக்களைக் கொன்று குவித்து பிணங்களை அடக்கம் செய்யாமல் வீதிகளில் விட்டு வைத்த சர்வாதிகாரி சுகாட்டோவை பதவி விலக அமெரிக்க முஸ்லிம் ஒன்றியம் ஏன் கோரவில்லை? சுகாட்டோ சர்வாதிகாரி, கொலைகாரன், அமெரிக்காவினால் ஏவப்பட்ட கைக்கூலி என்பதாலா?

அமெரிக்காவின் கைப்பொம்மைகள் சர்வாதிகாரிகளாய் இருந்தால் அதை அமெரிக்கா வாழ் முஸ்லிம்கள் ஏற்றுக் கொள்வதும் அமெரிக்காவை எதிர்ப்பவர்களையெல்லாம் ஆட்சிக் கவிழ்ப்பு செய்ய வேண்டுமென்பதும் வேடிக்கையாகவில்லையா? ●

## யாழ்ப்பாணமும் நிலநீர்

7ம் பக்க தொடர்ச்சி..

ஆசிரியர்களின் கவனத்தை ஈர்த்தது. கண்டியில் அரசாங்க உதவியுடன் இன்னுமொரு வெளிக்கள நிலையம் அமைக்கப்பட்டது. ஆசிரியர், மாணவர் ஆகியோரின் ஆதரவு இன்மையால் இந்த வெளிக்கள நிலையம் செயலிழந்து போயிற்று. ஆனால தொண்டைமானாற்று வெளிக் கள நிலையம் நாளொரு வண்ணம் வளர்ச்சியுற்று பல்முக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள கல்விக் கூடங்களுக்கு பேருதவி புரியும் நிலையமாக மாறியது. தொண்டைமானாற்று வெளிக்கள நிலையப் பிரதேசம் பாதுகாப்புப் பிரதேசமாக மாறியபடியால் வெளிக்கள நிலையம் வேறோர் இடத்திற்கு இடம் பெயர்ந்து இயங்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டது.

நன்னீர் ஏரியின் அழிவு

தொண்டைமானாற்றின் தென்பகுதி நன்னீர் தேங்கும் நீர்நிலை என்பதைக் கண்ணுற்ற மீன்பிடி மக்கள் - கடலின் உவர்நீரும் நன்னீரும் கலக்கும் பகுதியில் இறால் பிடிக்க நல்லதோர் ஏற்பாடாக அமையும் எனக் கருதி, மூடிய கதவுகளைத் திறக்கச்செய்து கடல்நீரை உட்புகவிடுவர். இதன் விளைவாக நன்னீர் ஏரி உப்பேரியாக மாறத் தலைப்பட்டது. சுமார் மூன்று மைல் தூரத்திற்கு அப்பால் அமைந்துள்ள வல்வை வெளியில் உப்பு சேகரிக்க வசதியை ஏற்படுத்தியது. இறால் பிடிப்போரின் செயல் நீர்ப்பாசணத்திணைக்களம் இரு பாதுகாவலரை இக்கதவுகளைத் திறக்கவிடாது தடுக்க நியமிக்கப்பட்டனர். இவர்களை அதட்டியும், மிரட்டியும் தடைக்கதவுகளைத் திறந்து கடல் உட்புக வழிவகுத்தனர் இறால் பிடிப்போர். இப்பணியில் ஈடுபட்டோர் மிகச் சிலரே ஆயினும் நாசம் விளைவிக்கப் போதுமானவர்கள். ஒரு சுவாரசியமான கதையொன்று இது தொடர்பாக உண்டு. காவலாளி ஒருவன் மின்பிடிப்பாளர் கதவுகளைத் திறப்பதனைத் தடுக்கலானான். இதன் பலாபலன் இதுதான். பாலத்தில் பொருத்தப்பட்டிருந்த வெண்கலக் கைப்பிடி திருடுபோயிற்று. காவலாளியின் சம்பளத்தில் இதன் கிரயம் அறவிடப்பட்டது. இருமுறை இதுபோன்ற சம்பவங்கள் இடம்பெற்றதால் நேர்மையாக நடந்தால் தொடர்ந்து தண்டம் செலுத்த வேண்டியிருக்கும் என அஞ்சிய காவலாளி அதிகாரிகளின் உதவியுடன் வேறிடத்திற்கு மாற்றம் பெற்றுச் சென்றுவிட்டான்.

வேறொரு சம்பவமும் இங்கு நோக்கற்பாலது. அக்காலகட்டத்தில் பூகற்பப் பொறியியலாளர் காலம் சென்ற திரு. P.M. சிதம்பரப்பிள்ளை. இவர் இங்குள்ள அவல நிலையைக் காணும் பொருட்டு அக்கால நீர்ப்பாசனப் பணிப்பாளர் காலம் சென்ற H.D.C. மனம்பேரி என்பவரை அழைத்து வந்தார். அவர் யாழ்ப்பாணத்தின் இச்சிறந்த பணியை இரு காவலாளிகளின் பொறுப்பில் விட்டுவிடாது நீர்பாசன அலுவலகத்தைத் தொண்டைமானாறில் இருந்தால்தான் இந்த அவலநிலையைத் தவிர்க்கலாம் என்றார். அலுவலகக் கட்டிடம் அமைப்பதற்கான செலவைத் தாம் அங்கீகரிப்பதாக உறுதியளித்தார். அவர் கொழும்பு திரும்பிய பின் பொறுப்பதிகாரிகள் கூறியது இதுதான். "நாம் பாடுகள் பலப்பட்டு யாழ்ப்பாணத்திற்கு மாற்றம் எடுத்து வந்தது நன்னீர் அற்ற தொண்டைமானாற்றில் பணிபுரியவா? நாங்கள் எங்கள் அலுவல்களை யாழ்ப்பாணத்திலிருந்து தான் செவ்வையாக ஆற்றமுடியும்" என்றனர். அலுவலகம் தொடர்ந்தும் யாழ்ப்பாண நகரிலேயே இயங்கி வருகிறது. யாழ்ப்பாணப் பகுதிக்கு மாற்றம் பெற்று வந்தவர்களின் ஆசையும் நிறைவேறியபடி இருக்கிறது.

## திருகோணமலை

2ம் பக்க தொடர்ச்சி..

பணம், அந்தஸ்து, செல்வாக்கு போன்ற பல விடயங்கள் விருது, பரிசுகளுக்குப் பின்னால் இருப்பது வழமையானதேயாகும். அதற்கு அரச இலக்கிய தமிழ் விழா விதிவிலக்கல்ல.

வட-கிழக்கு மாகாண அரச இலக்கிய விழா இரண்டு கட்டமாக நடைபெற்றது. ஒன்று காலையில் நடைபெற்ற ஆய்வரங்கும் கருத்தாடலும், மற்றது மாலையில் நடைபெற்ற பிரமுகர்கள் பேச்சும் கலைநிகழ்ச்சிகளும் ஆகும்.

காலையில் நடைபெற்ற ஆய்வரங்கம் தான் பொது சனத்தை கவர முடியாத நிகழ்ச்சி என்று கருதப்பட்டாலும், மாலை நிகழ்ச்சியான கலைநிகழ்ச்சி கலகலப்பை ஊட்டி மக்களை கவரும் என நினைத்தால் பொய்த்துப் போன காட்சியே நிலவியது. இரண்டு நிகழ்விலும் மக்களை மண்டபத்தில் காண முடியவில்லை.

இலக்கிய விழாவில் முக்கியமாக கலந்து கொள்ள வேண்டிய கலை, இலக்கிய ஆர்வலர்களுக்கு என்ன நடந்தது?

காலையில் நடந்த ஆய்வரங்கு "ஈழத்து இதழியலின் வரலாறும் மதிப்பீடும்" ஆக இருந்தது. மூன்று நாள் நடைபெற்ற உரைகளை அரித்து தெரிந்து எடுத்துப் பார்த்தால் ஈழத்தில் தோன்றி மறைந்த பத்திரிகைகளின் கணக்கெடுப்பாகவே இருக்கும் என சுவையர்கள் கூறிச் சென்றது உறுத்தவே செய்யும். உப்புச்சப்பற்ற ஆய்வரங்கம் என்பது மிகையல்ல.

கருத்தரங்கில் பங்கு பற்றிய ஆய்வாளர்களில் ஒன்றிரண்டு பேர்களை விட, கருத்தாடலில் பங்கு பற்றி கருத்துக்களைக் கூறியோர் முக்கிய பயன்பாட்டை விளைத்தனர் எனலாம். அடுத்த விடயம், ஆய்வு தலைப்புகளும் மாறிமாறி ஒரே விடயத்தையே சுட்டி நின்று ஒப்புவிப்பது போல் தோற்றம் காட்டியதும் சலிப்பை ஏற்படுத்தியது எனலாம். அறிஞர்களை ஒரே வட்டத்திற்குள் தேடாமல் பரவலாக தேடி துறை சார்ந்தவர்களை பயன்படுத்தியிருந்தால் ஓரளவு முக்கியத்துவப்பட்டிருக்கும். என்பது, சுவையர்கள் கருத்தாக ஒலித்தது.

மாலையில் நடைபெற்ற கலைவிழா ஒன்றிரண்டுடன் முடிவுற்றது மரியாதையைக் காப்பாற்றியது எனலாம். நடன நிகழ்ச்சிகள் ஓரளவு முக்கியத்துவம் பெற்றன. நடனம் முடிய மண்டபத்தில் இருந்த ஓரளவான கூட்டமும் கலைந்து செல்ல மண்டபத்தில் சொற்பகூட்டமுமே மிஞ்சியது எனலாம். நாடகம், கூத்து என்பன கவனிக்கப்பவேயில்லை.

இறுதி நாள் விருது வழங்கும் நிகழ்ச்சி தமிழ் சினிமாத்தனம் போல் காணப்பட்டது. விருது வழங்கும் இலக்கிய உணர்வைக் காண முடியவில்லை. விருது வழங்கலில் பேராசிரியர் சிவசேகரம், பேராசிரியர் நுஃமான் கலந்து கொள்ளவில்லை. இது சலசலப்பை ஏற்படுத்தியது. அவர்கள் தமது மரியாதையைக் காப்பாற்றிக் கொண்டனர் போலும்.

முடிவாக இத்தகைய தமிழ் இலக்கிய விழாக்களின் முக்கியத்தும் என்ன? புத்தகங்களுக்கு பரிசு; முக்கியஸ்தர்களுக்கு விருது இத்துடன் சரியாகி விடுகின்றதா? இதற்குள்ளும் பல சங்கடங்கள் நிகழ்ந்து விடுகின்றன என்பது கவனிக்கத்தக்கது.

இதைவிட்டால் படைப்பாளன், இலக்கியம் என்பவற்றுக்கு என்ன முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது? இன்று ஒரு படைப்பாளன் ஒரு நூலை வெளியிட எத்தகைய சிரமப்படுகிறான் அச்சிடும் கூலி எவ்வளவு செலவாகின்றது. ஆனால், கொடுக்கும் பணப்பரிசு அவன் கஸ்டங்களைப் போக்கி விடுமா? இந்த நிலையில், இதன் கௌரவம் என்ன? மறுபுறம், அரச விழாக்களில் ஊழல் பல வடிவம் கொள்வதும் வேறு விடயம். அதை விட்டு விட்டு இலக்கியக்காரனுக்கு என்ன மரியாதை-முக்கியத்துவம் உள்ளது?

கலை, இலக்கியம், எழுத்து என்றவுடன் பல்கலைக்கழக வாத்திமாரை உருவமர்த்தி ஒரு மாயத் தோற்றத்தை அனேகர் ஏற்படுத்தி விடுகின்றனர். அப்படியானதொரு வழமையும் பரவி விட்டது. இந்த நோய் அரச இலக்கிய விழாக்களிலும் பற்றி பிடித்துக் கொண்டது பற்றியும் குறிப்பிட வேண்டும்.

பல்கலைக்கழக வாத்திமாருள் கலை, இலக்கியப் படைப்பாளிகள் இருக்கலாம். ஆனால், எல்லா பல்கலைக்கழக வாத்திமாரும் கலை இலக்கியப் படைப்பாளிகள் ஆக முடியாது. பல்கலைக்கழக பதவி, பட்டம் என்பது அவ் அவ் துறை சார்ந்ததுடன் 'தொழில் வகுப்பாகவும் ஆகி விடுகின்றது. அவ் அவ் துறை சார்ந்து அவர்கள் புலமையாளர்கள் ஆக இருக்கலாம். அதற்காக அவர்கள் கலை, இலக்கிய முக்கியஸ்தர்களாகி விட முடியாது. கலை, இலக்கிய ஞானம் படைப்பாளர் ஆளுமை என்பது பல்கலைக்கழக வளைவையும் எல்லையையும் மீறியது: அது பரந்த விரிந்த உலகின் எல்லைகளை மீறியது.

ஆகவே, கலை, இலக்கியத்தை அரசு, அமைச்சு, திணைக்களம், பல்கலைக்கழக மட்டங்களுக்குள் மட்டும் அடக்கி விட முடியாது. கலை, இலக்கியம் பரந்தது. மக்கள் சார்பானது. பதவி, பட்டங்களை மீறியது. கலை, இலக்கிய விழாவில் அதன் படைப்பாளிகளுக்கு முக்கியத்துவம் இல்லை என்றால் அது என்ன விழா?

கலை, இலக்கிய படைப்பாளியின் கௌரவம் என்ன? திருவிளையாடல் படத்தில் தருமி வேடம் ஏற்று நடித்த நாகேஷ் போல், பரிசுக்கும், புகழுக்கும் அடிமை ஆகும் படைப்பாளிக் கூட்டமும் இருக்கலாம். பணத்துக்கும், அடக்குமுறைக்கும் ஆசைப்படாது.

"மன்னவனும் நீயோ

வள நாடும் உனதோ" என்று கேட்கும் கம்பன் போன்ற வீறார்ந்த தன்மான படைப்பாளிகளும் இருக்கலாம் என்பதை பார்க்க வேண்டும். அப்படிப்பட்ட படைப்பாளிகள் திணைக்களத்துக்கோ. அமைச்சுக்கோ படையெடுக்க மாட்டார்.

கலை இலக்கியத்தை அமைச்சுக்குள். திணைக்களத்துக்குள் இருந்து கொண்டு தேடவும் முடியாது. அவர்கள் தங்களிடம் வருவார்கள் என எதிர்பார்க்கவும் முடியாது. உண்மையான கலை, இலக்கியத்தை பரந்த மக்கள் மத்தியில் தேட வேண்டும். அமைச்சு. திணைக்களங்களை விட்டு பரந்த மக்கள் கூட்டத்தின் காலடிக்குச் செல்ல வேண்டும். அங்கே உண்மையான கலை, இலக்கியத்தை கண்டு கொள்ள முடியும்.

## தேசிய இனப்பிர...

6ம் பக்க தொடர்ச்சி..

ஒடுக்கற் பிரச்சினை களின் சிக்கலான தன்மை பற்றியும் முஸ்லிம் அரசியற் தலைமைகள் மிகவும் குழப்பமாகவும் தெளிவீனமாகவுமே கருத்துக்களை வெளியிட்டு வந்து ள்ளன. "முஸ்லிம் தேசம்" கோட்பாடு முதலாகப் பல்வேறு கோட்பாடும் குழப்பங்கள் முஸ்லிம்களை எதிர் நோக்குகின்றன. கடந்த சில ஆண்டு களில், அண்மைய மாதங்களிற் கூட, முஸ்லிம்கட்கு எதிரான சிங்கள-பௌத்த பேரினவாத வன்முறையை அனுபவித்த பின்னரும் தமிழ்-முஸ்லிம் முரண்பாட்டையே வற்புறுத்துகிற ஒரு போக்கைப் பரவலாகக் காண முடிகிறது.

தென்கிழக்கில் ஒரு முஸ்லிம் அலகோ சுயாட்சியோ பற்றி எதுவித மறுப்புங் கூறாத ஒருவர் கூட, அவ்வாறான ஏற்பாடு இலங்கையின் 8மு முஸ்லிம்களது பிரச்சினையை மட்டுமே கருத்திற் கொள்கிறது என்பதை ஏற்பார். முஸ்லிம்கள் வடக்குக்-கிழக்கில் எதிர்நோக்குகிற பிரச்சனைகட்கு அது போதுமானதல்ல. அதிலும் முக்கியமாகத் தென்னிலங்கை முஸ்லிம்களது பண்பாட்டு அடையாளம் முதலாக அடிப்படை உரிமைகள் வரையிலான உரிமை மீறற் பிரச்சனைக்கு ஒரு நூற்றாண்டு கால வரலாறு உண்டு. இது பற்றி முஸ்லிம் அரசியல் தலைமைகள் மட்டுமல்லாமல் தேசிய இனப் பிரச்சினையின் தீர்வில் அக்கறை யுள்ள அனைவரும் கவனமாகச் சிந்திக்க வேண்டும்.

வடக்கு-கிழக்கு முஸ்லிம்களின் பிரச்சனையைக் காரணங்காட்டி அமைதிப் பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம்கள் பங்குபற்றுவது ஏற்கப்பட்டுள்ளது. எனினும் இது முஸ்லிம்களின் தேசிய இன ஒடுக்கலுக்கு ஒரு முழுமையான தீர்வுக்கு வழி வகுக்காது என்பது பற்றி நாம் கவனமாக இருக்க வேண்டும். இந்த அடிப்படையிலேயே மலையகத் தமிழரது தேசிய இனப் பிரச்சனையும் அமைதிப் பேச்சுவார்த்தைகளின் அடுத்த கட்டமான தேசிய இனப் பிரச்சனையின் தீர்வில் கவனிக்கப்பட வேண்டும்.

மலையகத் தமிழ்ப் பாராளுமன்றத் தலைமைகளோ இந்திய வம்சாவழி என்ற பேரில் மலையகத் தமிழரின் தேசிய அடையாளத்தைப் பலவீனப்படுத்துகிற தலைமைகளோ இன்றைய பேச்சுவார்த்தைகளில் மலையகத் தமிழ் மக்களுடைய தேசிய இன உரிமைகள் பற்றியும் அவர்கட்கான சுயாட்சி அமைப்புகள் பற்றியும் பேசத் தயங்குகிற காரணம் என்ன?

இன்றுவரை தமிழ்த் தேசியவாதிகளிடையே உள்ள ஒரு மேலாதிக்க மனோபாவம் வடக்கு-கிழக்கு தமிழரது தேசிய இனப் பிரச்சினைக்கு அப்பால் மற்ற எந்தப் பரிமாணத்தையும் கணிப்பில் எடுப்பதைத் தவிர்ப்பதில் மும்முரமாக உளளது. இதன் நீண்ட கால விளைவுகள் பற்றியும் நாம் சிந்திக்க வேண்டும்.

அமைதிப் பேச்சுவார்த்தைகள் பற்றிய நம்பிக்கைகள் வெறும் நம்பிக்கைகளாக இருக்கக் கூடாது. பேரினவாத ஒடுக்குமுறைக்கு எதிரான தமிழ்மக்களின் போராட்டத்துக்குத் தமிழ்த் தேசிய அடையாளத்துக்கு வெளியிலும் முக்கியமான பரிமாணங்கள் உண்டு. அவற்றைக் கணிப்பில் எடுப்பதன் மூலமே நிலையான நீதியான ஒரு தீர்வை நோக்கி நாம் நகர முடியும்.

படிப்பகம்

www.padippakam.com



# காலத்தின் கோலம் :

## எழுத்தாளர் கணேஷின் ஒப்புதல் வாக்குமூலம்

எழுத்தாளர் கணேஷ் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் முன்னோடிகளில் ஒருவர். அவர் முக்கியமான ஒரு இலக்கிய மொழிபெயர்ப்பாளர் என்பதோடு அவருடைய தெரிவுகள் ஏறத்தாழ விலக்கின்றி மார்க்சிசவாதிகளது அல்லது மார்க்சிச அனுதாபமுடையோரது அல்லது மார்க்சிசவாதிகள் கொண்டாடிய படைப்பாளிகளது ஆக்கங்களாக உள்ளதை யாரும் தவறவிட இயலாது. அது மட்டுமன்றி. அவர் சுய விருப்பின்பேரில் தமிழாக்கிய நூல்களை வெளியிட்டவர்கள் முற் போக்கு எழுத்தாளர் சங்கத்தோடு தொடர்புடையவர்களும் பிற்காலத்தில் மாக்ஸிய லெனினியச் சிந்தனையுடன் தொடர்புடையவர்களே. கணேஷ் அவர்களுக்குக் கட்சி அங்கத்துவம் இருந்ததோ இல்லையோ. கம்யூனிஸ்ட் கட்சியின் தேசாபிமானி, நவசக்தி ஆகிய ஏடுகளில் பணியாற்றியவர். அதற்கு முன்னமே 1945ல் இந்தியாவில் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தை நிறுவிய ஒருவர் என்றும் உரிமை கொண்டாடுபவர். அவரது மேற்படி தொடர்புகள் பற்றியும் அவரது அரசியற் சார்பான சில பணிகள் பற்றியும் தி. ஞானசேகரன் அவர்களுடனான நேர்காணலில் தெளிவாகவே கூறியுள்ள எழுத்தாளர் கணேஷ் பற்றிய ஒரு சிறப்பிதழைக் (காலம்-17) கனடாவிலிருந்து வரும் மாக்ஸிய விரோத வக்கிரங்கள் சிலர் நடத்துகிற ஒரு அமைப்பு வெளியிட்டுள்ளது. சோழியன் குடுமி சும்மா ஆடுமா?

மாக்ஸிய விரோதமான ஒரு திரிப்பு இல்லாமல் காலம் சஞ்சிகையை வெளியிட்டால் ஏழேழு பிறவிக்கும் அந்தப் பாவம் தொடர்ந்து வரும் என்பதால், காலம் மாக்ஸிய மறுப்பு நோக்கிலேயே மனிதரைக் கொண்டாடுகிறது. போன தடவை ஏ.ஜெ. கனகரத்னாவின் பேரிலேயே அதை நடத்த முயன்ற ஒரு குழுவுக்கு கணேஷ் சிரமத்துக்கே இடம் வைக்கவில்லை.

### வயது சென்றதன் தடுமாற்றம் என்றும் எடுக்கலாமா?

கணேஷின் கடந்த காலப் பணிகள் காரணமாக அவரை ஒரு மார்க்சிச அனுதாபி என்று பலர் நினைத்திருந்தார்கள். அது முற்றிலும் தவறு என்று கணேஷ் தனது நேர்காணலில் புலப்படுத்தியுள்ளார். இந்தத் திருப்பணிக்காக அவர் இரண்டு முறை செவ்வி காணப்பட்டுள்ளார். முதற்தடவை ஞானசேகரனின் செவ்வியில் ஓரளவு நிதானமாகத் தன் வாழ்வும் இலக்கியச் செய்றபாடும் பற்றிச் சொல்லியுள்ள கனேஷ் பேராசிரியர் நு∴மானுடனான மற்றச் செவ்வியில் தனது சமுகப்பார்வையை அப்படியே அவிழ்த்து வைக்கிறார். அதற்கு அளிக்கப்பட்டுள்ள தலைப்பு "மாக்சீயவாதிகளும் பாஸிசத்தைத் தான் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்" என்பதாகும். இது உண்மையிலேயே அவரது அரசியல் அறிவினதும் அந்த ரங்க உணர்வினதும் சுத்தமான வெளிப்பாடு என்பது செவ்வியை வாசிக்கிறவர்கட்கு விளங்கும். சில கேள்விகள் மூலம் நு∴மான் அடியெடுத்துக் கொடுத்தது போல் தோன்றினாலும் கணேஷுக்கு அந்தத் தேவையே இல்லை. அந்தளவுக்குக் கடுமையான மொழிகளால் இடதுசாரிகளைச் சாடுவதோடு தனக்குள்ள இறை நம்பிக்கையை வற்புறுத்தவும் ஆத்மீக வழியிலேயே மனித சமூகத்தை உய்விக்க முடியும் எனப் போதிக்கவும் முற்பட்டுள்ளார். கணேஷிடம் சில கேள்விகள்:

* மார்க்சியத்தைத் தொடக்கத்தில் நம்பி மயங்கி ஏமாந்த ஒருவராகச் சொல்கிற கணேஷுக்கு எப்போது "ஞானம்" பிறந்தது?

* இளம் பருவத்திலிருந்தே மதத்தில் ஆழ்ந்த பற்று இருந்த ஒரு மனிதரது எழுத்தில் அந்த அடையாளமே தெரியாமல் இருந்தது எவ்விதம்?

* மார்க்சிசத்தில் கணேஷைக் கவர்ந்தது என்ற நு∴மானின் கேள்விக்கு அவரிடம் பதிலே இல்லாது போனது எவ்விதம்?

* எல்லாமுறைகளும் சுயநலத்தில் தான் முடியும் என்கிற கணேஷின் ஆன்மிகம் கூட அங்கேதான் போய் முடியாதா? அப்படியானால் கணேஷின் இலக்கிய நடைமுறையும் தெரிவுகளும் எவ்விதமான சமூக நோக்கால் உருவாகின?

* தேசிய இனப்பிரச்சினை பற்றிக் கூட ஒரு பார்வையை கணேஷால் முன்வைக்க இயலாது போனது ஏன்?

* உலக இலக்கியங்களையெல்லாம் மொழிபெயர்க்கும்போது கணேஷ் அந்தந்தச் சமூகச் சூழல்களை உள்வாங்கித்தான் செய்தாரா?

* ஆயிரக்கணக்கான மைல் தொலைவில் உள்ளவற்றைத் தமிழில் வழங்க முன்வந்த கணேஷுக்குத் தன் வீட்டிலிருந்து சில மைல் தூரத்திலுள்ள தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் பற்றி அறிய அக்கறையே இல்லாது போனது எவ்வாறு?

கணேஷ் என்றுமே மார்க்சியவாதியாக இருக்கவில்லை என்பதை என்னால் நம்ப முடிகிறது. மார்க்சியம் பற்றிய அவரது அறிவும் உலக வரலாறு பற்றிய அவரது விளக்கங்களும் நிச்சயமாக அவரை ஒரு மார்க்சியவாதி என்று குற்றஞ்சாட்ட இடமளியாது. ஆனால் அரை நூற்றாண்டுக்காலமாக அவரை எல்லாரும் ஒரு மார்க்சிச அனுதாபி. இடதுசாரி. முற்போக்காளர். பகுத்தறிவு வாதி என்று நம்பி ஏமாற முடிந்தது என்றால், குற்றம் யாருடையது?

கணேஷின் பாராட்டு விழாப் பேர்ப்பட்டியலும் காலம் இதழில் உள்ளது. நூல் வெளியீட்டில் பேசிய ஒரு மார்க்ஸிய விரோதி கணேஷை ஒரு உண்மையான இடதுசாரி என்று போற்றியிருக்கிறார். கணேஷை நயப்பவர்களை வைத்தே அவரை மதிப்பிடுவதானால், அவர் அவர்களை நிச்சயமாக ஏமாற்றவில்லை என்பேன்.

~ சிவா ~

### உலகம(மா)யப் பொங்கல்

பொங்கலுக்கு அரிசி
பாகிஸ்தானில் இருந்து வந்தது
பானை, அடுப்பு தாய்வானில் இருந்து
முக்கனிகளோடு இன்னபிற
கனிவகைகளும் அவுஸ்திரேலியாவில்
பதப்படுத்தி அனுப்பப் பட்டிருந்தது.
"ஷெல்" விநியோகித்த வாயுவுடன்
பக்கற் பண்ணிய பலகாரங்கள்
பயறு வகைகளும் இறக்கு மதிதான்!
பொங்கல் பொங்கிப் படைக்க
புசிக்க வந்த சூரியனும்
அமெரிக்காவில் இருந்து வந்தது!
உலகம் குறுகி ஊராகிய
இன்ரர் நெற் பொங்கலும் மகிழ்ச்சிதான்!
பனை மரத்துப் பாளை பொறுக்கி
காவோலை சிராய்த்து
கங்கு மட்டை, மூரி, கொக்கறை
தேடிச் சேர்த்து
செம்மண் பிசைந்து கல் சமைத்து
புதுப்பானை அடுப்பேற்றி
ஊர் அரிசி, பயறு, பனங்கட்டி
பசுப்பால் விட்டு பொங்கலிட்டு
வளவுப் பழம் பிடுங்கி, வெட்டி
படையல் இட
கிழக்கில் சூரியன் எழுந்து வந்து
பொங்கி மகிழ்ந்த பொங்கல்
எங்கள் பழங்கதை தானோ!

~மாவை வரோதயன்~

### ஆசிரியருக்கு கடிதம்

இலங்கையின் தமிழ்ப் பத்திரிகைப் பரப்பில் ஒரு மாற்றுப் பத்திரிகைக்கான வெற்றிடத்தை ஈடு செய்து காத்திரமான அரசியல், சமூக, பொருளாதார செய்திகளை வழங்குவதில் இன்று "புதியபூமி" சாதனை படைக்கின்றது. இந்த மலர்ச்சிக்குள்ளும் சில போலிகள் நுழைவதைக் காண முடிந்தது.

"புதியபூமியின்" ஜனவரி-2003 இதழ் படித்துச் சென்ற போது ஒரு அதிர்ச்சி கிடைத்தது. அதன் பக்கம் 9ல் "மனிதம் மடியலாமோ" என்ற தலைப்பில் ச.சிவரூபன் என்பவரது பெயரில் ஒரு கவிதை பிரசுரமாயிருந்தது.

90களின் முற்கூறில் "மற்றொரு விடியல்" என்ற தலைப்பில் நான் எழுதிய கவிதை அது. அக்காலத்தில் பத்திரிகைகள்/சஞ்சிகைகளுக்கு அனுப்பியிருப்பேன். பிரசுரமானது பற்றி எனது பதிவுகளில் இல்லை. ஆனால் அது அக்கால அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த கவிதை.

அக்கவிதை பத்து வருடங்களின் பின் "மறு பிறப்பு" எடுத்தமை பற்றி நான் அதிர்ச்சியும். ஆச்சரியமும் அடைந்துள்ளேன். தயவுசெய்து அந்தப் புதிய பிறப்பாக்கியை எனக்கு அடையாளம் காண்பிப்பீர்களா?

நன்றி.

~ மாவை வரோதயன் ~

### இலங்கை இனப்பிரச்...

8ம் பக்க தொடர்ச்சி..க

எமது கட்சி செங்கூட்டணி (Red Coalition) என்ற பரந்துபட் ஐக்கிய முன்னணியிலும் செயற்பட்டு வருகிறது. அது தேர்தல் வேலைகள் உட்பட பகிரங்க வேலைகளுக்கான கூட்டணி ஆகும். 1994-1998 வரை எமது கட்சியின் தோழர் ஒருவர் செங்கூட்டணியூடாக பாராளுமன்ற உறுப்பினராக இருந்தார். தற்போது நானும் இன்னொரு தோழரும் ஒஸ்லோ சபையின் உறுப்பினர்களாக இருந்து வருகிறோம். நாம் பிரசாரத்திற்காகவே தேர்தலில் ஈடுபடுகிறோம். புரட்சிகர வெகுஜன போராட்டப் பாதையே எமது மார்க்கமாகும். எமது கட்சி "வர்க்கப் போராட்டம்" என்றொரு தினசரி பத்திரிகையை வெளியிட்டு வருகின்றது. இன்னுமொரு தினசரியையும் ஆரம்பிக்க இருக்கிறோம். எமது வர்க்கப் போராட்டம் என்ற பத்திரிகை சர்வதேச விவகாரங்களுக்கான ஆதாரமாக நோர்வே மக்களால் ஏற்று அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

எமது கட்சியில் பெண்கள் அதிகமாக அணிதிரண்டுள்ளனர். வர்க்கரீதியாக இன்றைய பெண்களின் நிலையும் பங்களிப்பும் பற்றி விரிவான ஆய்வுகளை செய்துள்ளோம். எமது 'COMRADE SISTERS' என்ற நூல் பெண்கள் தொடர்பானதாகும்.

#### மலையகத் தமிழ் மக்கள் பற்றி

ஒரே மொழியை பேசுகின்ற இலங்கை தமிழ் மக்கள். முஸ்லிம்கள். மலையகத் தமிழ் மக்கள் என்போர் மூன்று தனித்தனி வித்தியாசமான தேசிய இனங்களாக வாழ்கின்ற சூழ்நிலையை இங்கு வந்து பார்த்த பிறகே விளங்கிக் கொண்டேன்.

பெருந்தோட்டத் தொழிலாளரை அதிகமாக கொண்ட மலையகத் தமிழ் மக்கள் பற்றி வெளியுலகில் பேசப்படுவதில்லை. மலையகத்திற்கு சென்று பார்த்த பிறகுதான் யுத்தம் நடைபெறாத சூழலிலும் இவ்வளவு பின் தங்கிய நிலையில் அப்படியொரு சமூகம் வாழ்வதை புரிந்து கொண்டேன்.

மலையகத் தமிழ் மக்களின் பிரச்சினைகளும் அவர்களின் கோரிக்கைகளும் அவர்கள் மத்தியிலிருந்து வெளிவர வேண்டும். அப்போதுதான் சர்வதேச ஒத்துழைப்புகள் பற்றி சிந்திக்க முடியும். செயற்கையாக சர்வதேச சமூகத்தின் தலையீட்டை வேண்டி நிற்பதில் பயனில்லை.

மலையகத் தமிழ் மக்களின் பிரச்சினைகள், கோரிக்கைகள் பற்றி புதிய-ஜனநாயகக் கட்சியின் வெளியீடுகளில் வாசித்தேன். அவற்றை அடிப்படையாகக் கொண்டு மக்கள் இயக்கங்களை முன்னெடுக்க வேண்டும்.

### ஒளியில் எழுதலும்

9ம் பக்க தொடர்ச்சி..

இந்த நூலின் பயனுள்ள பகுதி. 1957 ஸ்ரீ எதிர்ப்பு. 1961 சத்தியாக்கிரகம் தொடர்பான படங்கள் தாம். அவற்றைக் கூர்ந்து கவனித்தால் இப்போராட்டங்கள் வெகுசனப் போராட்டங்களாக விரியாமல் சில களங்களுக்குள் தம்மை வரையறுத்துக் கொண்ட உண்மையையும் நாம் காண முடியும்.

அமிர்தலிங்கத்தின் அரசியல் வாழ்வின் ஒளியுள்ள பகுதியாக 1956-1961 காலகட்டம் அமைந்திருந்தது என்பேன். ஆயினும் அன்றும் அவரது அரசியல் அணுகுமுறையில் மறைவாக இருந்த எதேச்சாதிகாரப் பண்புகள் பிற்காலத்தில் வலுப்பெற்று அப்பட்டமாகவே தெரிய வந்தன. 1965-70 காலகட்டம் தமிழரசுக் கட்சி அரசியலின் மானக்கேடான எதிர்காலத்தின் முன்னறிவிப்பு. இதன் பின்பு. தமிழரசுக் கட்சியோ அதன் வாரிசுகளோ தமிழ் மக்களின் அபிலாசைகளைக் குறித்து நின்றதில்லை.

அமிர்தலிங்கத்தின் 75ம் பிறந்த நாள் விழா சென்ற ஆண்டு லண்டனில், தமிழர் சுயநிர்ணயத்தைத் தீவிரமாக எதிர்க்கும் என். ராமின் சிறப்புரையோடு நடந்தேறியதே. அதை விடச் சிறப்பாக அமிர்தலிங்கத்தின் அரசியலை அவரது ஆதரவாளர்கள் அறிந்து வைத்திருக்க முடியாது. அந்த ஒளி வெள்ளத்தில் புகைப்பட ஒளியில் எழுதப்பட்டவற்றுக்குப் பின்னால் இருளில் ஒளிந்தவை நமக்குக் கொஞ்சமேனும் தெரியக்கூடும்.

### உலகமயவாக்கம் சில கேள்விகள் 8ம் பக்க தொடர்ச்சி..

மேல்வந்த சூத்திரிப்புகள் சுமுகமான சுகவாழ்வுக்கு வழிகாட்டுவனவாக அமையக்கூடும்.

இந்த இடத்தில். ஓர் எச்சரிக்கை அவசியமாகின்றது. கால மாற்றங்களும் இட வித்தியாசங்களும்.

வழிவழியாக வந்த சான்றோர்களும் மகான்களும். பெரும்பாலும்- எல்லாருக்கும் எல்லாக் காலங்களிலும் பொருந்தி வரக்கூடிய நியதிகளைச் சூத்திரித்து (வகுத்துத்) தரவே முயன்றுள்ளனர். அவற்றுட் பெரும்பாலானவை இலட்சியமான நல்லெண்ணங்களின் வெளிப்பாடுகளாக உள்ளன. உயிரினங்களின் முழுப்பரப்புக்கும் அவற்றைப் பிரயோகிக்க முற்படும்போது சிக்கல்கள் சில தோன்றுகின்றன: தரும சங்கடங்கள் தலையெடுக்கின்றன: எதிர்பாராத பக்கவிளைவுகள் ஏற்படுகின்றன.

இப்படி இருப்பதனாலேதான். "ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர்" வகுத்து வழங்கிய நியதிகளிற்கூட. முரண்பாடுகள் காணப்படுவதைச் சிலர் சுட்டிக்காட்டுகின்றனர். இவ்விதமான பிரச்சினைகள் பற்றி. பாரதியார் கூட யோசித்துப் பார்த்திருக்கிறார். அதனாலேதான் அவர் பாடினார்.

"இன்று படுத்தது நாளை-உயர்ந்து/ஏற்றம் அடையும் உயர்ந்தது இழியும்".

ஒரு காலத்திலே இழிந்தது என்று இகழப்பட்ட நடத்தையானது. பின்னொரு காலத்திலே உயர்ந்தது எனப் போற்றப்படலாம். அதன் மறுதலையும் உண்மைதான். அதாவது. முன்னொரு காலத்திலே உயர்ந்தது எனப் போற்றிக் கொண்டாடப்பட்ட நடத்தை (அல்லது விழுமியம்). பின்னொரு காலத்திலே இழிந்தது என இகழப்படலாம்- இகழப்பட வேண்டி வரக்கூடும்.

இந்த உண்மையை விளங்க வைத்த பாரதியாருக்கு. முதலில் நினைவுக்கு வந்தவை ஸ்மிருதிகள். வேதாந்தங்கள். ஆகமங்கள். ஸ்மிருதிகள் என்பவை எல்லாம். பண்டைய இந்திய மரபின் பிரமாண நூல்கள். அந்தப் பிரமாண நூல்களில். நடத்தை நியதிகளும் ஒழுக்க வரையறைகளும் விதிக்கப்பட்டிருந்தன: அவற்றை மீறுவோருக்குக் கொடுக்கப்பட வேண்டிய தண்டனைகளும் வரையறை செய்யப்பட்டிருந்தன.

அவற்றில் முனைப்பாகத் தோன்றி ஆதிக்கம் செலுத்தியவை வருணாச்சிரம தருமங்கள் என்ற விதிவிலக்குகள் ஆகும். ஸ்மிருதிகளில் மக்களின் உரிமைகளும் கடமைகளும் பிறப்பின் அடிப்படையில் வரையறுக்கப்பட்டிருந்தன. இவை தெய்வ சம்மந்தமானவை என்றும் புனிதத்தன்மை கொண்டவை என்றும் ஒப்புக்கொள்ளப்பட்டு நிலவின. இந்த விதிவிலக்குகள் ஒரு போதும் மாறாத நிலைபேறு உடையன எனவும். கொள்ளப்பட்டன. இவை பிராமணர். ஷத்திரியர். வைசியர். சூத்திரர் என்ற பிரிவினைகளின் பிரகாரம் வகுத்து அமைக்கப்பட்டிருந்தன. இவை தெய்வீகத் தன்மை வாய்ந்த விதிகள் என்றும் புனிதப்பண்பு பொருந்தியவை என்றும் வற்புறுத்தப்பட்டன.

பாரதியார் இவற்றை ஒப்புக்கொள்ளவில்லை அவர் பாடினார்.

"பின்னும் ஸ்மிருதிகள் செய்தார்-அவை /பேணும் மனிதர் உலகில் இல்லை ∴மன்னும் இயல்பின அல்ல - இவை / மாறிப் பயிலும் இயல்பின ஆகும்".

என்று உறுதிபட முழங்கினார். மேலும் அவர் பாடினார்.

"காலத்திற்கு ஏற்ற வகைகள் -அவ்வக் / காலத்திற்கேற்ற ஒழுக்கமும் நூலும்/ஞால முழுமைக்கும் ஒன்றாய் - எந்த / நாளும் நிலைத்திடும் நூல் ஒன்றும் இல்லை".

இப்படி அவரை உரத்துப் பேசும்படி செய்தது எது?

கால மாற்றங்கள் பற்றியும். கருத்தியல்களின் விருத்திமுறை பற்றியும் அந்தக் கவிஞர் பெற்றிருந்த தெளிவுதான் அவரை இவ்வாறு பேச வைத்தது. அப்படிப்பட்ட தெளிவின் மூலம்தான் உலகு தழுவிய ஒரு நிதானமான பார்வையை நாம் பெறுகிறோம். அப்படிப்பட்டதொரு பார்வை "உலகியம்" அல்லது "செக்யுலறிசம்" (Secularism) எனப்படும். இது தமிழில் இன்று "மதச்சார்பின்மை" என்று வழங்குகிறது. இவ்வாறு எதிர்மறை வடிவத்தில் "உலகியம்" என்று சொல்வதுதான் நல்லது.

உலகியமும் உலக மயப்பாடும்

பழைய இந்திய மெய்யியல். உலகாயதம் (அல்லது லோகாயதம்) என்னும் பெயரில் ஒரு கொள்கை பேசப்பட்டது. அந்தக் கொள்கையும் இன்று "உலகியம்" என்று பேசப்படும் கருத்துகளும் நெருங்கிய தொடர்புடையவை. என்றாலும் அவை இரண்டும் ஒன்றல்ல. உலகியமும் லோகாயதமும் பல அம்சங்களில் வித்தியாசப்படுகின்றன.

பண்டைய இந்தியாவில் விருத்தி செய்யப்பட்ட லோகாயதம் சாங்கியம் என்ற மெய்யியலுடன் தோழமை பூண்டது என்று சொல்லுவார்கள். அந்த லோகாயதம். புறவுலகு பற்றி முற்காலத்தில் அறியப்பட்டதொரு சிந்தனை நெறியினைத் தழுவியது: பெரும்பாலும். கொள்கை சார்ந்த ஊகங்களையும் அனுமானங்களையும் தர்க்க நியாயிப்புகளையும் அடித்தளமாய்க் கொண்டது.

என்றாலும். இன்று நாம் நூதனமான கருவிகளைக் கொண்டு அவதானித்தும் சரி-பிழை பார்த்தும் விடயங்களைச் செப்பமாய் உய்த்தறியும் வசதிகளை நிறையப் பெற்றிருக்கிறோம்.

ஆனால். பழைய லோகாயதம் (அல்லது சாங்கியம்) நடைமுறை அவதானிப்புகளை மட்டுப்பட்டதோர் அளவுக்கு மாத்திரமே பயன்படுத்தக் கூடியதாய் இருந்தது.

எனவே. பண்டைய லோகாயதத்தையும் இன்றுள்ள உலகியத்தையும் சமன்படுத்திப் பார்ப்பது சரியல்ல.

இங்கு நாம் கருத்தில் இருத்த வேண்டியது ஒன்று உண்டு: நவீன ஆய்வு முறைகள் உலக இயல்புகளின் ஆழ நீளங்களை மிகவும் நுணுக்கமாயும் செப்பமாயும் நிச்சயிக்க வல்லவையாய் இருக்கின்றன. கணிதம். தருக்கம். புள்ளிவிபரவியல் முதலான கருவி நூற் புலங்களைப் பிரயோகிக்கும் வாய்ப்புகளும் பெருகியுள்ளன. தொழில்நுட்பத் துறையின் சாதனைகளும் மிகவும் வியக்கத்தக்க அளவுக்கு வளர்ச்சி பெற்றுள்ளன: பெருகியுள்ளன. இதனால். முன்பெல்லாம் கிடைப்பதற்கு அரியனவாய் இருந்த செய்திகள் பலவற்றை வசப்படுத்தும் வல்லமைகளை இன்று நாம் பெற்றுள்ளோம்.

உலகியச் சார்புள்ள இந்த இலாபங்கள் அற்பமானவை அல்ல. அவை நமது (அதாவது. மனிதர்களுடைய) ஆற்றல் வீச்சுகளை விரித்துள்ளன: பெருக்கியுள்ளன. ஆகவே. அவற்றின் முழுப்பயனையும் கறந்தெடுப்பதில் நாம் தயக்கம் காட்டக்கூடாது.

சில கேள்விகள்

ஆனால். இப்பொழுது சில கேள்விகளுக்கு விடை காண வேண்டிய தேவை உண்டு.

உலகியச் சார்பு என்பதும். உலகமயவாக்கம் (அல்லது உலகமயப்பாடு) என்ற "திருவாசகமும்" ஒன்றா. வேறு வேறானவையா? வேறு வேறானவை என்றால். அவற்றை நாம் எப்படி எல்லாம் வரையறை செய்து கொள்ளலாம். உலகியத்துக்கும் உலகமயப்பாட்டிற்கும் இடையே உள்ள ஒற்றுமை வேற்றுமைகள் எவை எவை?

உலகமயப்பாடு சகல விதமான நன்மைகளையும் நம்மீது சொரியும் என்று பரவசப்படுகிறார்களே! அதில் எவ்வளவு உண்மை? எவ்வளவு பொய்ம்மை?

உலகமயப்பாடு கலாசாரச் சீரழிவுகளுக்குக் காலாய் இருக்கிறது என்று சிலர் குறைபட்டுக் கொள்கிறார்களே! அந்த முணுமுணுப்பும் சிணுக்கமும் எவ்வளவு தூரம் நியாயமானவை?

இவைபற்றி எல்லாம் சற்று ஊன்றி விசாரணை செய்வது நல்லது.

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல். பல கற்றும் /கல்லார் அறிவிலாதார் " என்று குறள் சொல்லுகிறதே! அது ஏன்? இதனையும் நாம் பரிசீலிக்க வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



புதிய பூமி
REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA PUTHIYA POOMI
சுற்று 10 | பெப்ரவரி 2003 | பக்கம் 12 | விலை 12/- | சுழற்சி 55

## தோழர் சண்முகதாசன் வழங்கிய புரட்சிகரப் பங்களிப்பை முன்னெடுப்போம்

இலங்கையின் பொதுவுடமை இயக்கத்தின் தோற்றத்தோடும் அதன் வளர்ச்சியோடும் தம்மை இணைத்து அர்ப்பணிப்புடன் சமூக மாற்றத்திற்காக மாக்சிச லெனினிசத்தை உறுதியுடன் இறுதிவரை முன்னெடுத்து வந்த முன்னோடிகளில் தோழர் சண் முன் வரிசைப் போராளியாக நின்றவர். கட்சி தொழிற்சங்க இயக்கத்தின் வளர்ச்சிக்குத் தனது முழு ஆற்றலையும் பயன்படுத்தியவர். அறுபதுகளின் முற்கூறிலே நவீன திரிபுவாதத்திற்கு எதிரான போராட்டத்தின் தலைமைத் தளபதியாக நின்று புரட்சிகர இயக்கத்தைப் பாதுகாத்து முன்னெடுப்பதில் பெரும்பங்கு வகித்தவர். மா ஒ சேதுங் சிந்தனையை மக்கள் மத்தியில் பரவச் செய்வதில் அரசியல் தத்துவார்த்தப் பிரச்சாரத்தை முன்னெடுத்தவர். அவரது புரட்சிகரப் பங்களிப்பை முன்னெடுப்பதில் 10வது நினைவு தினத்தில் உறுதிகொள்வோமாக.



# நம்பியாரை நம்பினால் நாசம்தான் வரும்

## மீளக்குடியமர்வே முறுகல் நிலைக்கு முடிவு

வடக்கு கிழக்கில் உயர்பாதுகாப்பு வலயங்கள் எனப்படும் ராணுவத்தால் கையகப்படுத்தி வைத்திருக்கும் பிரதேசங்களில் மக்கள் மீளக்குடியமர்த்தல் முக்கிய பிரச்சினையாகும். தமது வீடுகள், விளைநிலங்கள், தொழில் மையங்கள், மீன்பிடிப் பிரதேசங்கள் போன்றவற்றை இழந்து கடந்த பதினைந்து ஆண்டுகளாக வடக்கு கிழக்கின் பல லட்சம் மக்கள் 'அகதிகள்' 'இடம் பெயர்ந்தோர்' என்ற பெயர்களில் துயரவாழ்வு வாழ்ந்து வருகிறார்கள். புரிந்துணர்வு ஒப்பந்தம் வந்து யுத்தநிறுத்தம் மேற்கொள்ளப்பட்டு ஒரு வருடமாகிறது. பல முனைகளில் இயல்புவாழ்வுக்கான செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. ஆனால் இந்த உயர் பாதுகாப்பு வலயங்கள் எனப்படும் பிரதேசங்களுக்குள் மக்கள் அனுமதிக்கப்படவில்லை. ராணுவத் தரப்பு இதில் மிகக் கடுமையாக இருந்து வருகின்றது. ஜனாதிபதி அதற்கு ஊக்கம் கொடுத்து விடாதை பிடி என்கிறார்.

அதேவேளை சமாதானம் பேசும் ரணிலின் அரசு இவ்விடயத்தில் அதிக தயக்கம் காட்டுகிறது. அமைச்சர் மிலிந்த மொறகொட இந்தியா சென்று முன்னாள் ராணுவ உயர் அதிகாரி சதீஸ் நம்பியார் என்பவரை அழைத்து வந்து ஆலோசனை கேட்டார்கள்.

ஆடுகளின் மேச்சலுக்கு ஓநாய்கள் பாதுகாப்பு ஆலோசனை வழங்கியமை போன்று தான் நம்பியார்அறிக்கைக் கொடுத்துச் சென்றார். 'வட்டுக் கோட்டைக்கு வழி கேட்க துட்டுக்கு இரண்டு கொட்டைப்பாக்கு' எனக் கூறியது போன்று மக்கள் மீளக் குடியமர்வுக்கு ஆலோசனை கேட்க புலிகளின் ஆயுதங்களைக் களைய வேண்டும் என்கிறார் நம்பியார். அதனால் அரசாங்க-புலிகளிடையே புதிய முறுகல் நிலை காணப்படுகின்றது. இதனால் அடுத்த நகர்வு கேள்விக் குறியாகி நிற்கிறது. இதற்கு முடிவின்றி தொடர்ந்து பேசுவதில் பயன் இல்லை என்கிறார்கள் புலிகள். அதேவேளை அரசாங்கம் மேலும் பிரித்தானியாவின் இந்தியாவின் உத்தியோகபூர்வ ஆலோசனை பெற இருப்பதாகப் பிரதமர் கூறுயுள்ளார். தமது சொந்த மண்ணுக்கும் வீடுவாசல்களுக்கும் திரும்பிச் செல்ல அயலாரின் அந்நியரின் ஆலோசனை ஏன் என்பதுதான் மக்களின் கேள்வியாகும். பேரினவாத யுத்தவெறி மனோநிலை ராணுவம் ஜனாதிபதி என்போரிடம் மட்டுமல்லாது ரணிலிடமும் படிந்து இருப்பதையே காணமுடிகின்றது.

## வடக்கு கிழக்கில் ஜப்பான் குதிப்பதேன்

வடக்கு கிழக்கு புனரமைப்பிற்கு பொறுப்பான நம்பிக்கை நிதியத்திற்கு முதலாவதாக ஜப்பான் அதன் கடனுதவியை வழங்குவதென அறிவித்துள்ளது. இலங்கைக்கு உதவிவழங்கு அமைப்பு நாடுகளின் கூட்டமும் டோக்கியோவில் எதிர்வரும் யூன் மாதம் நடைபெறவிருக்கிறது. இலங்கைக்கான ஜப்பானின் விசேட தூதுவர் அக்காசி இலங்கைக்கு விஜயம் செய்து வடக்கிற்கு சென்று திரும்பியுள்ளார். அவர் விடுதலை புலிகள் இயக்கத் தலைவர்களையும் சந்தித்திருக்கிறார்.

ஜப்பானின் இந்நடவடிக்கை இந்திய அரசை பெரிதும் ஆத்திரமூட்டியுள்ளது. ஜப்பானின் விஷேட தூதுவர் இலங்கை வருவதற்கு முன்னர் புதுடில்லிக்கு சென்றிருந்த வேளையில் இந்திய அரசத்தலைவர்கள் அவர்களின் அதிருப்தியை தெரிவித்துள்ளனர்.

1977இற்கு பிறகு இலங்கையில் முன்னெடுக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கையால் ஜப்பான் அதன் சந்தையை இங்கு விஸ்தரித்திருந்தது. குறிப்பாக பாவிக்கப்பட்ட பழைய ஜப்பானிய வாகனங்களின் குப்பை மேடாகவே இலங்கை மாறிவிட்டது. தொலைக்காட்சிப் பெட்டி, வானொலி, மின்சார உபகரணங்கள், குளிர்ச்சாதனப் பெட்டிகள் உட்பட அனைத்து ஜப்பானிய பொருட்களும் இலங்கையை ஆக்கிரமித்தன. ஆனால் யுத்தம் காரணமாக வடக்கு கிழக்கை அவை முழுமையாகச் சென்றடையவில்லை.

தற்போதைய சமாதான சூழ்நிலையில் புனர்நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப் படவுள்ள வடக்கு கிழக்கில் ஜப்பானிய பொருட்களுக்கு சந்தையை தேடிக் கொள்ளவும், அங்கு முதலீடுகளை செய்யவும் ஜப்பான் முடிவு செய்துள்ளது. அந்த அடிப்படையிலேயே ஜப்பானின் விசேட தூதுவரின் வருகை அமைந்ததுடன். வடக்கு கிழக்கு புனரமைப்பிற்கென ஜப்பான் கடனுதவியையும் வழங்க முன்வந்துள்ளது.

வடக்கு கிழக்கு புனரமைக்கப்படுவதன் மூலமே அங்கு இயல்பு வாழ்வை தோற்றுவிக்க முடியும் என்பதில் இன்னொரு அபிப்பிராயத்திற்கு இடமிருக்க முடியாது. ஆனால் சமாதானத்தின் பேரால் ஏகாதிபத்திய உலகமயமாதலை பொருளாதார ரீதியாக வடக்கு கிழக்கில் நடைமுறைப்படுத்தி லாபமடைய போட்டிப்போட்டுக்கொண்டு வெளிநாடுகள் முன்வருவது குறித்த எச்சரிக்கை அவசியம்.

ஜப்பான் போன்ற நாடுகள் இங்கு அவற்றின் சந்தையையும், முதலீட்டையும் ஸ்திரப்படுத்தி வடக்கு கிழக்கு உட்பட இலங்கையை அவற்றின் பிடிக்குள் கொண்டுவர முயற்சிக்கிறது. அதனால் இந்தியாவின் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைக்கும் இந்தியாவின் சந்தைக்கும் பாதிப்பு ஏற்படுமென்றே இந்திய அரச தலைவர்கள் அஞ்சுகின்றனர்.

வர்த்தகரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த இலங்கையை ஜப்பான் கைவிட முடியாத நிலையில் இருக்கிறது. இந்தியாவை போலன்றி இலங்கையில் பல வர்த்தக, சந்தை விடயங்களில் அதன் ஏகபோகத்தை நிலைநாட்டிக் கொள்ள வாய்ப்புகள் அதிகம் இருக்கின்றன.

அதற்காக இந்த சமாதானச் சூழ்நிலையையும் தமிழ்மக்களின் வரலாற்று ரீதியான தாயகத்தையும் பயன்படுத்திக் கொள்ள ஜப்பான் முற்படுகிறது.

### உலக வங்கியின்...

1ம் பக்க தொடர்ச்சி....

நாடுகளின் பொருளாதாரம் தற்போது மிகவும் வீழ்ச்சியடைந்துள்ளதையும், அங்கு அரசியல், சமூகப் பிரச்சினைகள் விஸ்வரூபம் எடுத்துள்ளதையும் கருத்தில் எடுத்துக் கொள்வது அவசியமாகும். பாலஸ்தீனத்திலும், கிழக்கு திமோரிலும் இல்லாத அக்கறை உலகவங்கிக்கு இலங்கை மீது ஏற்பட்டுள்ளதென்றால் அது இலங்கை தமிழ் மக்கள் மீதுள்ள காதலினால் அல்ல என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். புனரமைப்பு என்பதற்கு உதவ முன்வந்தாலும் சர்வதேச நிறுவனங்களும் வெளிநாடுகளும் அவற்றின் லாப நோக்கத்தை அடக்கிக் கொள்ளப் போவதில்லை.

புனரமைப்பு, மீள் கட்டியமைத்தல் போன்ற நடவடிக்கைகளின் மூலம் வடக்கு கிழக்கு பொருளாதார ரீதியாக ஏகாதிபத்தியத்தின் பிடிக்குள் மாட்டிக் கொண்டால் தமிழ் மக்கள் பொருளாதார ரீதியாக மட்டுமன்றி அரசியல், பண்பாட்டு, சமூக ரீதியாகவும் சுயநிர்ணயம் உடையவர்களாக இருப்பது என்பது சாத்தியமில்லை.

### பாராளுமன்றத்தை..

1ம் பக்க தொடர்ச்சி....

சக்திகள், பாராளுமன்ற மோகத்தில் மூழ்கி நிற்கும் ஜே.வி.பி., பிராந்திய மேலாதிக்கத்திற்கு அல்லும் பகலும் அலைந்து நிற்கும் இந்தியா போன்ற சக்திகள் நிற்பதாக அறிய முடிகின்றது. அப்படி ஒரு பொதுத்தேர்தலில் மக்களின் பணம் கோடிக்கணக்கில் விரயமாக்கப் படுவதையோ அன்றி தாங்கள் வெற்றி பெறுவது என்பதோ இவர்களுக்கு முக்கியமில்லை. பேச்சுவார்த்தையின் தொடர்ச்சியை இடை அறுத்து குழப்பிக் கொள்வது மட்டுமே ஜனாதிபதியின் குறிக்கோளாகும்.

ஐக்கிய தேசியக் கட்சியையும் ரணிலையும் வளர்த்து ஆட்சிக்கு கொண்டு வருவதில் எதிர்மறைப் பங்காற்றியவர்கள் வேறு யாருமல்ல ஜனாதிபதியும் பொதுசன முன்னணி ஆட்சியும்தான். அத்தகையவர்கள் தங்களால் இயலாமல் போன சமாதானப் பேச்சுவார்த்தையை ஐ.தே.மு. ஆட்சியும் ரணிலும் முன்னெடுப்பதற்கு சந்தர்ப்பம் வழங்காது குழப்பியடிக்க நிற்பது முற்போக்கான ஒன்றல்ல. ரணிலின் ஆட்சி எந்தளவுக்குச் செல்கிறது என்பதைப் பொறுத்திருந்து பார்ப்பதும் நியாயமான அரசியல் தீர்வுக்கு ஆதரவு வழங்கி நாட்டின் பிரதான பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வருவதுமே ஜனாதிபதி நேர்மை உடையவராக இருந்தால் செய்யவேண்டியதாகும். அதை விடுத்து குறுக்கு வழியில் சென்று மீண்டும் ஆட்சி அதிகாரத்திற்கு வருவதை மட்டும் வழிமுறையாகக் கொள்வதை மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். யுத்தத்திலும் மனித இரத்தத்திலும் நீச்சலடிக்க விரும்பும் போக்கிற்கு சிங்கள மக்கள் ஆதரவு வழங்க மாட்டார்கள் என்பது உறுதி. முழுநாட்டு மக்களுக்கும் இன்று தேவைப்படுவது யுத்தமற்ற சூழலும் நிரந்தர சமாதானமும் அதற்கான அரசியல் தீர்வுமேயாகும். அதனை முறியடிக்க முனையும் ஜனாதிபதியினது பொதுத்தேர்தல் என்ற தவறான வழிமுறையை மக்கள் நிராகரித்து எதிர்க்க வேண்டும்.

# தோட்ட தொழிற்சங்க மாநாட்டில் தொழிலாளர்களுக்கு வெறும் கை காட்டப்பட்டது

அண்மையில் யூஎன்.பி.யின் தோட்டத் தொழிற்சங்கமான இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர்களின் 23வது பேராளர் மாநாடு கொழும்பில் நடைபெற்றது. ரணில் விக்கிரமசிங்கா அதில் நீண்ட உரையாற்றினார். முக்கிய தலைவர்கள் கலந்து கொண்டு கருத்துக்கள் வழங்கினர். கரு. ஜெயசூரியா, நவீன் திசநாயக்கா, பா.உ.கே. வேலாயுதம் ஆகியோர் இவர்களில் முக்கியமானவர்கள். இத் தொழிற்சங்க மாநாட்டில் தோட்டத் தொழிலாளர்களின் எந்தவொரு பிரச்சினை பற்றியும் பிரதமரோ. ஏனையோரோ பேசவில்லை. சமாதானம், பொருளாதார வளர்ச்சி, யூஎன்.பி.க்கு வாக்களிப்பது பற்றியே பேசினர். தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வு இன்மை. மா-பாண்-தேங்காய்-அரிசி விலை அதிகரிப்பு பற்றியோ, அல்லது சிகப்பு கடவுச்சீட்டு. வீடுகள் சொந்தமாக்குதல், வேலை வாய்ப்பு பற்றியோ வாயே திறக்கப்படவில்லை. தொழிற்சங்க மாநாட்டில் தொழிலாளர் பிரச்சினை பற்றி ஆராய்வதே நடைமுறை. ஆனால் இந்த மாநாட்டில் ஆட்சிக்கு தொழிலாளர் முட்டுக்கொடுக்க வேண்டும். வயிற்றை நன்றாக இறுக்கிக் கட்டிக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே பேச்சுக்கள் இடம்பெற்றன. மாநாட்டில் கலந்து கொண்ட பேராளர்கள் போக்குவரத்துடனும் சாப்பாட்டுடனும் மட்டுமே திரும்பினர். தமது எந்தவொரு பிரச்சினை பற்றியும் பேசவில்லை என்ற கவலையுடனும் வெறும் கையுடனும் மலையகம் வந்து சேர்ந்தனர். வேலாயுதம் பா.உறுப்பினருக்கு மட்டும் பொதுச் செயலாளர் பதவி கிடைத்தது. இது வழமையானதேயாகும். தலைவர்களுக்குப் பதவியும் பயன்களும் தாராளமாகக் கிடைப்பதும் தொழிலாளர்களுக்கு எதுவும் கிடைக்காமை என்பது மலையகத்தின் தொழிற்சங்க அரசியல் வரலாறாகும். அந்த விதிக்கு உட்பட்டதே தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கமும் அதன் மாநாடுமாகும்.

# யா/புத்தூர் சோமாஸ்கந்த கல்லூரியில் தலைவிரித்தாடும் சாதிவெறி அரக்கன்

யாழ் குடாநாட்டின் முக்கிய கல்லூரிகளில் ஒன்று புத்தூர் சோமாஸ்கந்த கல்லூரி. இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள். எழுபத்தைந்து வரையான ஆசிரியர்கள். இக் கல்லூரி மழவராயர் என்ற நிலவுடமையாளரின் சொத்து என பெருமையும் உரிமையும் கொண்டாடப்படுகிறது. ஆனால் இந்தச் சொத்தில் புத்தூர் பிரதேசத்தின் விவசாயிகளின், நிலமற்ற கூலி விவசாயிகளின் மற்றும் உழைப்பாளிகளின் இரத்தமும் வியர்வையும் கண்ணீரும் எவ்வளவு என்பது பலராலும் மறைக்கப்பட்டே வந்துள்ளது. இக் கல்லூரியை 1960களின் முற்கூறில் அரசாங்கம் பொறுப்பேற்றது. ஆனால் அங்கே தாழ்த்தப்பட்ட சமூக மாணவர்கள் 1975ம் ஆண்டிலேயே அனுமதிக்கப்பட்டனர் என்றால் கல்லூரி நிர்வாகத்தின் சாதியத் தடிப்பின் கனதியைக் கண்டு கொள்ளலாம். அதற்கு அளவான அதிபர்கள், ஆசிரியர்கள், சிற்றூழியர் என்போர் மிகக் கவனமாகவே தேர்ந்து கொள்ளப் படுவது இன்றும் நடைமுறை. இன்று கூட அங்கு தாழ்த்தப்பட்ட சமூக ஆசிரியர்கள் நியமனமோ, மாற்றமோ செய்யப்படுவதில்லை. இதற்கு கல்வித் திணைக்களம் முழு ஒத்துழைப்பு வழங்கி வருகிறது. நிற்க.

இக் கல்லூரியில் காலத்திற்குக் காலம் சாதிய வெறி தன் தொழில் ஆற்றும். அதற்கு அதிபர், சில ஆசிரியர்கள், ஆசிரியைகள், பிரதான லிகிதர் என்போர் காரண கர்த்தாக்கள். ஏற்கனவே ஒரு திறமையான க.பொ.த.(உ/த) வகுப்பு மாணவன் இச் சாதி வெறிக்குப் பலியாகி பாடசாலையை விட்டு விலகிச் செல்ல நேர்ந்தது. அது பற்றி கல்விப் பணிப்பாளரான அம்மையாருக்கு அறிவித்தும் அவர் தனது காதுகளை செவிடாக்கிக் கொண்டார்.

இப்போது மீண்டும் சாதி வெறி வெளிப்பட்டுள்ளது. கடந்த வருடம் க.பொ.த. (உ/த) வகுப்பு மாணவர் மன்றத்திற்கு தெரிவான தலைவர் பதவி ஒரு தாழ்த்தப்பட்ட மாணவனைச் சென்றடைந்தது. சகல தகுதியும் இருந்த காரணத்தால் மாணவர்கள் மேற்படி மாணவனை அதிகப்படியான வாக்குகளால் தெரிவு செய்தனர். ஆனால் பின்பு அம் மாணவனது சாதி அடையாளத்தை தெரிந்து கொண்டதும் முகத்தைச் சுழிப்பதில் அதிபர், லிகிதர், சில ஆசிரியர்கள் முன்னின்றனர். இருந்தும் மாணவர் மன்றத்திற்கு பொறுப்பான ஆசிரியரும் மற்றும் ஓரிரு நேர்மையான ஆசிரியர்களும் அம் மாணவன் தலைவராகத் தொடர்வதை வற்புறுத்தி வந்தனர். ஆனால் அதிபர் தலைமையில் அம் மாணவனை அப் பதவியில் தொடர விடாமல் செய்வதற்கு சூழ்ச்சிகள் இடம்பெற்று வந்துள்ளன. ஒரு தலைவர் மன்றத்திற்கு வேண்டாம் கூட்டுத் தலைமை என்று ஒரு புது முன் மொழிவு. ஏனைய மாணவ நிர்வாகி களை ராஜினாமாச் செய்ய வைத்து புதிய தெரிவு என்று ஓயாத முயற்சிகள். இதன் மத்தியில் வருடாந்தம் நடைபெற வேண்டிய "சோஷல்" மாணவர் ஒன்று கூடல் இதுவரை நடைபெறவில்லை என்று அறிய முடிகிறது. அது நடந்தால் மேற்படி மாணவன் தலைமையிலேயே நடைபெற வேண்டும் என்பதைத் தட்டிக் கழிக்கவே இத்தனை திருகுதாளங்கள் அக் கல்லூரியில் நடைபெறுகின்றன. இக் கல்லூரியில் தாழ்த்தப்பட்ட சமூக மாணவர்கள் நிறையக் கல்வி கற்று வருகிறார்கள். புதிய அனுமதியில் முதலாம் ஆண்டுக்கு ஒரு மாணவருக்கு 2500 ரூபா இனாம் வாங்கப்பட்டது. வசதி இல்லாது விட்டால் போங்கள் என்றும் கூறப்பட்டது. இது பின்தங்கிய தாழ்த்தப்பட்ட மாணவர்களைச் சேர விடாது தடுக்கும் உத்தியேயாகும். அதிபர், உப அதிபர், லிகிதர், அநேக ஆசிரியர்கள் எல்லாம் அதே ஊரையும் "உயர்" சாதியையும் சேர்ந்த வக்கிரங்களாகவே உள்ளனர். சில ஆசிரியர்கள் மட்டும் மனித நேயத்தோடு நடந்து கொள்கிறார்கள்.

கல்லூரி வளர்ச்சி எனக்கூறி காணி வாங்கலாம் கட்டிடம் எழுப்பலாம் தேசியக் கல்லூரிக்கான கோரிக்கையையும் விடலாம். ஆனால் மாணவர்கள் மத்தியில் ஏற்றத்தாழ்வு இல்லாத சாதியத்தைப் புறந்தள்ளும் மனிதநேயப் பண்பாடு மட்டும் வாங்கமுடியாதிருப்பதேன். விடுதலைப் போராட்டம் வெற்றி பெற்று வருதகாகக் கூறப்படும் இந்நாட்களிலும் கல்வித் தலமான சோமாஸ்கந்த கல்லூரியில் சாதி அரக்கன் தலை விரித்தாடுவதேன். கல்வித் திணைக்களமும் மற்றும் உரியவர்களும் இவ் விடயத்தில் கண் மூடியிருக்கக் கூடாது.

வெளியிடுபவர் : இ. தம்பையா, இல. 47, 3ம் மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு யூகே. பிரின்டஸ் 98A, விவேகானந்தா மேடு, கொழும்பு 13.

படிப்பகம்